www.tamilarangam.net



# இன்டர்நெட் உலகில் தமிழ், தமிழன், தமிழ்நாடு

ப. சோழநாடன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

# இன்டெர்நெட் உலகில்
# தமிழ்
# தமிழன்
# தமிழ்நாடு

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

ப. சோழ நாடன்

வெளியீடு
**ரிஷபம் பதிப்பகம்**
31/45 இராணி அண்ணாநகர்
இரண்டாம் தளம்
சென்னை - 600 078

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


இன்டர்நெட் உலகில் தமிழ், தமிழன் தமிழ் நாடு

ப. சோழநாடன் (C)

| | | |
|---|---|---|
| முதல் பதிப்பு | : | டிசம்பர் 2000 |
| பக்கம் | : | 128 |
| தாள் | : | 16 கிலோ சேசசாயி |
| கட்டு | : | சாதா கட்டு |
| அச்சு கோர்ப்பு | : | விக்னேஷ் பிரிண்டர்ஸ்<br>சென்னை - 33 |
| அச்சு | : | மணி ஆட்செட்<br>சென்னை - 5 |
| வெளியீடு | : | ரிஷபம் பதிப்பகம்<br>இரண்டாம் தளம்<br>31/45 இராணி அண்ணா நகர்,<br>சென்னை - 600 078<br>தொலைபேசி: 4728326 |
| மின்னஞ்சல் | : | Rishabam@langoo.com |
| இணையதளம் | : | http://users1.50 megs.com/thamarai |
| விலை | : | ரூ. 45/- |

www.tamilarangam.net

# பதிப்புரை

சமீபத்தில் நண்பர் ஒருவரை சந்தித்தேன். தமிழ் இணையங்கள் பற்றி பேசிக் கொண்டிருந்தோம். இன்றைய அளவில் பதிவு செய்யப்பட்ட தமிழ் இணையங்களின் எண்ணிக்கை 'எழுபதினாயிரம்' என்றார். எனக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. உண்மை என்றார். ப. சோழநாடன் தமிழ் இணையம் பற்றி தான் ஓர் நூல் தொகுத்து வருவதாக தெரிவித்தார். உடனே முடித்துக் கொடுக்கும்படி அவரிடம் கேட்டேன். இன்று உங்கள் கைகளில் இந்நூல்.

தமிழ் மற்றும் தமிழ் பற்றி ஆங்கிலம், தனி நபர், இணைய தளம் - பக்கங்கள் என்று லட்சம் இருப்பதாக சொல்கிறார்கள். அரசு ஒரு குழு அமைத்து இவற்றை தொகுக்க வேண்டும். தமிழக அரசு இணைய உலகிற்கு இன்று செயலாற்றி வரும் வேகத்தை நூலை படித்த போது தான் அறிய முடிந்தது.

தமிழ் இணைய தளங்களின் சேவை; ஒவ்வொரு துறையிலும் இணையத்தின் பயன்பாடு எப்படி இருக்கிறது என்று தொகுத்து - விரித்தும், எல்லோருக்கும் புரியும் வகையிலும் எளிமையாக இந்நூலை தொகுத்த ஆசிரியருக்கு நன்றி.

இந்நூல் வெளிவர உதவிய நண்பர்கள், தகவல்கள் தொகுத்துதவிய இணையத் தமிழர்கள், அச்சக பணியாளர்கள் முதலிய எல்லோருக்கும் என் நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள்

**தஞ்சை. தி. பஞ்சாபகேசன்.**

www.tamilarangam.net

# நன்றியறிதல்

இணைய உலகில் கடந்த நான்காண்டுகளாக பணியாற்றிய போது கிடைத்த செய்திகள் என்னை உச்சாகமுட்டியது. பல புதிய செய்திகளை தெரிந்து கொண்டதால் ஏற்பட்ட மகிழ்ச்சி அது. நான் சாதாரண மனிதராக பழகிய நா. கோவிந்தசாமி அவர்கள், தமிழ் இணைய உலகிற்கு பிற்காலத்தில் ஆற்றிய சேவையால் இன்று உலகம் முழுதும் கொண்டாடப்படும் வேளையில், அவரைப்பற்றி 12 ஆண்டுகளுக்கு முன்பே இதழில் எழுதி விளம்பரப்படுத்திய என் பணிசிறியதாக இருந்தாலும் ஏதோ ஒரு நல்ல வேலையை செய்தோம் என்கிற திருப்தியை இப்போது தருகிறது.

இணைய உலகில் தமிழ், தமிழரின் பணி இன்று உலகில் பெருமைப்படுத்தப் படுகிறது. உலகின் எந்த முனையிலும் உள்ள ஒரு மென்பொருள் கூடத்தில் இன்று ஒரு தமிழனாவது இருப்பதை பார்க்கும் போதும் கேட்கும் போதும் தமிழரின் பாரம்பரிய தொழில்நுட்ப அறிவுக்குக் கிடைத்த பரிசாகவே இதை நான் நினைக்கிறேன்.

இன்று தமிழ் ஓர் அறிவியல் பூர்வமான மொழி என்பதை உலகம் ஏற்றுக்கொண்டுள்ளது. இச்சூழலில் தமிழ் இணையம் பற்றிய வரலாற்றை முறையாக தொகுத்து எழுதுவதற்கு பலரை அணுகிய போதும் சிலர் மட்டுமே மனமுவந்து உதவிசெய்தனர். இந்நூல் எழுதுவதற்கு உதவிய கணிமொழி, தமிழ் கம்ப்யூட்டர், தினமணி, தமிழரசு இதழாசிரியர்களுக்கு நன்றி. புகைப்படங்களை கொடுத்துதவிய கணியன் சதீஷ், சி. அண்ணாமலைக்கு என் நன்றி. தமிழ் இணைய பக்கங்களை குறைந்த செலவில் எடுத்துக் கொடுத்த நண்பர் திரு. கணேஷ் ராம், சச்சின் பிரௌசிங் சென்டர் நண்பர்களுக்கும் இந்நேரத்தில் நன்றி கூறுவது கடமை. இந்நூலில் பல இணையத் தமிழர்களும், இணையத்தளங்களும் விடுபட்டு போயுள்ளன. அடுத்த பதிப்பில் நீங்கள் அனுப்பும்போது அவை கட்டாயம் சேர்க்கப்படும்.

அன்புடன்

**ப. சோழநாடன்**

www.tamilarangam.net



**படையல்**

1995-ஆம் ஆண்டு
தமிழை இணையத்தில் ஏற்றி
அழகு பார்த்த சிங்கப்பூர்
பேராசிரியர், தமிழ் இணைய உலகின்
தந்தை **நா. கோவிந்த சாமி** அவர்களுக்கு
இந்நூல்.

www.tamilarangam.net

# அச்சு ஊடகத்தில் தமிழ்




இந்தியாவில் முதன் முதலாக அச்சேறிய மொழி தமிழ். தமிழ் மொழிக்கு கி.பி. 1577 ஆம் ஆண்டிலேயே அச்சு எழுத்துக்களை உண்டாக்கி பல நூல்களை அச்சிட்டவர் அண்டிறீக் பாதிரியார் (Henrique Henriques) மேலே காணும் நூல் "தம்பிரான் வணக்கம்" 16 பக்கம் கொண்டது. படத்தின் கீழே காணப்படும் வாக்கியம்:

கொம் பஞ்ஞயதே சேசூ
வகையிலே அண்டிறிக்கிப்
பாதிரியார் தமிழிலே-
பிரித்தெழுதின -
தம்பிரான் வணக்கம்

இந்நூல் 20.10.1578-இல் அச்சாகியுள்ளது. இந்நூலின் பிரதி அமெரிக்காவிலுள்ள ஹார்வேடு பல்கலைக் கழகத்தில் உள்ளது.

www.tamilarangam.net

# உள்ளடக்கம்

• தமிழ் கற்றுக் கொடுக்கும் இணையங்கள் • இணையத்தில் தமிழ்ச் சங்கங்கள் • இணையத்தில் திருக்குறள் • இணையத்தில் மின் நூலகம் • மதுரைத்திட்டம் • தமிழ் இணையங்களின் தொகுப்பாளர்கள் • தமிழ் கணினி - இணைய நூற்கள் • தமிழில் வெளிவரும் கணினி - இணைய இதழ்கள் • சி.டி. ரோமில் முதல் தமிழ் புத்தகம் • தமிழில் டொமைன் பெயர்கள் • தமிழில் மின்னஞ்சல் • உலகத்தமிழ் இணைய மாநாடுகள் • தகவல் தொழில்நுட்பத்தில் தமிழகத்தின் முன் முயற்சி • கல்லூரி பள்ளிகளில் கணினி பாடம் • மென்பொருள் தயாரிப்பிற்கான நிதி • இணையத்தமிழ் பல்கலைக் கழகம் • தமிழகத்தில் தகவல் தொழில் நுட்ப பூங்காக்கள் • சென்னையின் டைடல் பூங்கா • சாப்ட்வேர் நிறுவனங்கள் • சென்னை - கேளம்பாக்கம் தகவல் சாலை • கோவை தகவல் பூங்கா • மென் பொருள் ஏற்றுமதி • அரசு அலுவலகங்களில் கணினி மயமாக்கம் • தமிழ் நாடும் இணையமும் • தமிழ் மென் பொருள்களின் தோற்றமும் வளர்ச்சியும் • கணித்தமிழர்கள் • கணித்தமிழ் சங்கம் • கணியன் • இன்தாம் • தமிழிசை காம் • தமிழ் சினிமா.காம் • ஆறாம்திணை • அம்பலம் • தமிழர் பக்கம் • இணையத்தில் வெளிவரும் இதழ்கள் • இணையத்தில் அச்சு இதழ்கள் • இணையத்தில் சினிமா • வானொலி • தொலைக்காட்சி • கல்விக்கூட முகவரிகள் • சமயம் • எழுத்தாளர்கள் • மின் வணிகம் • தமிழக கட்சிகள் • நூல் விற்பனை • புகழ்பெற்ற சில இணையங்கள் • இனி என்ன செய்ய வேண்டும்?

www.tamilarangam.net

# இணைய உலகில் தமிழ்

உலக மொழிகளில் ஆங்கிலத்துக்கு அடுத்து, அதிகளவில் இணையத்தில் பயன்படுத்தும் மொழியாக தமிழ்மொழி இருக்கிறது. இதற்கு பெரும் அளவில் துணை நின்றவர்கள், புலம்பெயர்ந்த தமிழர்களையே சொல்லலாம்.

தமிழகத்தை விட சிங்கப்பூர், மலேஷியாவில் இணையத்தை அரசு அலுவலங்கள், பள்ளிகளில் பெருமளவு பயன்படுத்து கிறார்கள். இணையத்தில் தமிழை கொண்டு சென்றது கூட, தமிழகத்தை விட வெளிநாட்டு தமிழர்களின் பெருமுயற்சிதான் அதிகளவில் உள்ளது. தமிழகத்தை விட்டு தொழில் நிமித்தம் மேலை நாடுகளுக்குச் சென்ற தமிழர்கள், 'தமிழை' பார்க்கவும், கேட்பதற்கு வழி இல்லாமல் இருந்த நிலையில் இணையம் மூலம் பார்ப்பதற்காக இணைய இதழ்களையும், கலந்துரையாடல், மின்னஞ்சல் மூலமாக தங்களுக்குள் ஒரு தொடர்பினை உருவாக்குவதற்கே முதலில் இணையத்தை பயன்படுத்தத் தொடங்கினர். இணையத்தில் தமிழை வெளிநாட்டு தமிழர்கள் 1986 முதல் பயன்படுத்தத் தொடங்கி விட்டனர். முதல் கட்டத்தில் தாங்கள் கண்டுபிடித்த தமிழ் எழுத்துக்களைப் பயன்படுத்தி மின்னஞ்சல் அனுப்பி தங்களுக்குள் உறவை வளர்த்து வந்தனர். 1992-93ஆம் ஆண்டுகளில் ''எஸ்.சி. தமிழ் இலக்கிய மன்றம் 'அ' என்று ஒரு தமிழ் இலக்கிய மின்னிதழை நடத்தியது. (ஆசிரியர் குழுவில் இருந்தவர்கள் அருள் சுரேஷ், வைத்தியநாதன் ரமேஷ், எம்.சுந்தரமூர்த்தி, சுந்தரபாண்டியன், விக்னேஸ்வரன்) இதுதான் முதல் தமிழ் மின்னிதழாக இருக்க வேண்டும்'' என்று முனைவர். கு. கல்யாண சுந்தரம் தெரிவிக்கிறார்.

இந்திய மொழிகளைப் பொறுத்த வரை தமிழ்தான் முதன் முதலில் 1996-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இணையத்தில் ஏறியது. இணையத்தில் தமிழ், தமிழர், தமிழ்நாடு, இலக்கியம், இசை, சினிமா, மதம், இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி, தனி நபர்களுக்கான இணையப் பக்கங்கள் என பல பகுதிகளைக் காணலாம். அல்டாவிஸ்டா என்ற தேடு பொறி எந்திரத்தில் 'தமிழ்' என தட்டச்சு செய்து தேடவிட்டோமானால் 4,82,918 முனைகள் தென்படுவதாக சொல்கிறது. இணையத்தில் தமிழை அரங்கேற்றியதும் முதலில் செய்த வேலை தமிழ் சொல்லிக் கொடுக்கும் இணையத் தளங்களை தொடங்கியதுதான். அதற்கான காரணமும் இருக்கத்தான் செய்தது.

www.tamilarangam.net

தமிழர்கள் தமிழ்நாட்டிலும், இந்திய மாநிலங்களிலும் வாழுவோர் தொகை 6 கோடி. இத்தொகைக்கு சமமான தொகையினர் வெளிநாடுகளில் வாழ்கின்றனர். ஆங்கிலேய, பிரஞ்சு காலனிகளுக்கு 250 ஆண்டுகளுக்கு முன்பு கொண்டு செல்லப்பட்ட தமிழர்கள் பிரஞ்சுகயனா, டிரினிடாட், மொரிஷியஸ், மடகாஸ்கர், தென்னாப்பிரிக்கா, ஷீசெல்ஸ், பிஜி, இலங்கை, மார்டினிட் தீவுகள், சிங்கப்பூர், மலேஷியா, பர்மா முதலிய பல நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். இந்நாடுகளில் தமிழகத்துடன் அதிக அளவு தொடர்புடன் இருந்த இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, பர்மா, முதலிய நாட்டுத் தமிழர்கள் மட்டும் இன்றும் நல்லமுறையில் பேசவும், எழுதவும் இலக்கியம் படைக்கவும் செய்கின்றனர். பழைய பிரஞ்சு காலனிய தமிழர்கள் மொழியை இழந்து சமயம், திருமணம், சடங்குகளில் மட்டும் தமிழர்களாக இருக்கின்றனர்.

எழுபதுகளுக்குப் பிறகு தொழிலுக்காக புலம் பெயர்ந்த தமிழர்கள் அமெரிக்கா, ஐரோப்பாவுக்கு சென்றவர்களின் இரண்டாம் தலைமுறையினர் தாய்மொழியை இழந்துவிட்டனர். அவர்களுக் காகவே பல இணைய தளங்களும், சிடி ரோம் (குறுவட்டுகள்) களும் வெளிவந்துள்ளன.

**தமிழ் கற்றுக் கொடுக்கும் இணையங்கள்:**

தமிழ் கற்றுக் கொடுக்கும் இணையங்களில் புகழ் பெற்றது 'பன்லாங்குவேஜ் சென்டர்' இந்த இணையம் பென்சில் வேனியா பல்கலைக்கழகத்தினுடையது. இதனுடன் சிக்காகோ, கார்னெல், போன்ற பல்கலைக்கழகங்களும் இணைந்து செயல் படுகிறது. இந்த இணையத்தை பேரா. ஹரால்ட்சிப்மேன், டாக்டர். வாசு ரங்கநாதனின் முன் முயற்சியில் உருவானது.

நான்கு கட்டங்களாக பாடங்களை பிரித்துக் கொண்டு கற்பிக்கின்றனர். ஆங்கில மூலமாக தமிழ் எழுத்துக்களை பயிற்றுவிக்கின்றனர்.



www.tamilarangam.net

தொடக்கநிலை பாடங்கள்: இதில் தமிழ் உயிர் எழுத்தக்களைப் பற்றிய அறிமுகம். தமிழ் எழுத்துக்களை எழுத மற்றும் கேட்க வசதி உள்ளது; சொற்களை அமைக்கப் பயிற்சி; உறவு முறைகளை மனத்தில் இருத்திக் கொள்ளும் வண்ணம் அமைக்கப்பட்ட பாடங்கள்; எளிய வாக்கியங்களை அமைக்க உதவும் பாடங்கள்.

இடைநிலைத் தமிழ்ப்பாடங்கள் : படிக்கும் திறனை வளர்த்துக் கொள்ளும் வகையில் பாடங்கள் மற்றும் அதற்கான தேர்வு வினாக்கள். இலக்கணப் பாடங்களை பேரா. நார்மன் கட்லா, கே. பரமசிவம், பேரா. ஜேம்ஸ் இ. லிண்டாம் முதலியோரின் பாடங்கள் தமிழ் வினாவகைள், மற்றும் அவற்றின் வெவ்வேறு அமைப்பு முறைகள். தமிழ்ச்சொற்களை மனத்தில் இருத்திக் கொள்ளும் வகையில் அமைக்கப்பட்ட பாடங்கள்; எழுத்துத் தமிழும் பேச்சுத் தமிழும்.

முதுநிலைத் தமிழ்: (Advanced Spoken and Written Tamil) திருச்சி வானொலியில் ஒலிபரப்பப்பட்ட சில நாடகங்கள். (படிக்க, கேட்க, மற்றும் மொழிபெயர்பைத் தெரிந்து கொள்ளும் வகையில் அமைக்கப்பட்ட பாடங்கள்) தமிழ் நாவல்கள் (படங்கள், ஒலி முதலியன கொண்ட பாடங்கள்) சீர்காழி கோவிந்தராஜன் பாடல்கள் (பாடல்களை படித்துக் கொண்டே கேட்க வசதியுள்ளது) இந்தப் பாடங்கள் மாணவர்கள் தங்களது பேசும் திறனையும் எழுதும் திறனையும் வளர்த்துக் கொள்ளும் வகையில் அமைக்கப் பட்டுள்ளது. இதற்கான இணைய முகவரி: http://ccat.sas.upenn.edu/plc/tamilweb/tamil.html

பாடத்திட்டங்களை பல்லூடக முறையில் பயிற்றுவிக்கின்றனர். மௌனராகம், கர்ணன் போன்ற திரைப்படங்களின் துண்டுகள் இணைக்கப்பட்டுள்ளன. மேல்நிலை மாணவர்களுக்கு ஜெயகாந்தனின் யுக சக்தி, சுஜாதாவின் சிறுகதைகள், நகைச்சுவை துணுக்குள், நாட்டுப்புற கதைகள் உண்டு. ஜாவாஸ்கிரிப்ட், ஜாவா போன்ற நுட்பங்களைப் பயன்படுத்தி உரையாடல் முறையில் எளிமையாக உருவாக்கியுள்ளனர். தமிழ் வினைச் சொற்களுக்கான அகராதியும் உள்ளது. அதனை நாம் http://ccat.sas.upen.edu/plc/dictionaryயில் காணலாம்.

இதைத் தவிர http://tamil.math.utu.edu/tamilnad/-edu/text-books.html என்ற முகவரியில் முதல் வகுப்பு இரண்டாம் வகுப்பு பாடப் புத்தகங்கள் தமிழில் கிடைக்கின்றன. நியூசிலாந்து டாக்டர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




*A. Vowelised Consonants Book*




*B. SongBook*




*C. VideoBook*

www.tamilarangam.net

இளங்கோவின் இரண்டு இணையங்கள்.டாக்டர் ராம் ரவீந்திரனின் இரண்டு தளங்கள் மற்றும் சில தளங்கள் உள்ளன. இவற்றில் 'பாண்டியன்' தமிழ் கற்கும் தளமும், கல்வி குப்புசாமி அவர்களுடைய www.kalvi.com குறிப்பிடத்தக்கவை. இந்நிறுவனம் தயாரித்துள்ள 'தமிழ் புக்' ஒரு பல்லூடக சி.டி.ரோம், அமெரிக்காவில் புகழ் பெற்றது.

தமிழகத்தில் ஐந்து முதலமைச்சர்கள் திரைத்துறையிலிருந்து வந்தவர்கள் என்பதை புரிந்து கொண்ட திரு. பெரியண்ணன் குப்புசாமி, தமிழ் மறந்த தமிழர்களுக்கு தமிழ் திரைப்பட பாடல்கள், திரைப்பட காட்சி துணுக்குகளைக் கொண்டு அருமையான முறையில் பாடத்திட்டத்தை தயாரித்துள்ளார்.

தமிழ் எழுத்துக்கள் 247 மற்றும் கிரந்த எழுத்துக்களை எழுதவும், உச்சரிக்கவும் ஒலி, ஒளி பயிற்சி 2000 தமிழ்ச் சொற்களை உச்சரிப்பு பயிற்சி தருவதற்காக படங்களுடன் கூடிய வீடியோ துணுக்குகளும் மொழிபெயர்ப்பையும் கொண்டுள்ளது. 14 முழு நீள தமிழ் திரைப்படப்பாடல்கள், 25 நிமிட வீடியோ திரை துணுக்குகள், மற்றும் சிறுகதைகளையும் கொண்டுள்ளது.

தமிழைக் கற்றுக் கொள்ள ஆங்கிலம், மலாய், பிரஞ்சு மொழிகளை வைத்துக் கற்றுக் கொள்ளலாம். இதில் ஏதேனும் ஒரு மொழி வழியாக தமிழைக் கற்றுக் கொள்ள வகை செய்யப் பட்டுள்ளது.

'சரஸ்வதி சபதம்' படத்தில் ஊமையன் முதலில் வாய் திறந்து பேசும் காட்சியை லாவகமாக ஆ,ஆ,இ சொல்லிக் கொடுக்க குப்புசாமி பயன்படுத்திக் கொண்டுள்ளார். இந்த சிடிரோம் வருவதற்கு முன்பே அவர் தயாரித்த உயிர் எழுத்துக்கள், மெய் எழுத்துக்கள், உயிர்மெய் எழுத்துக்கள், ஈறெழுத்துச் சொற்கள், எண்கள், மூன்றெழுத்துச் சொற்கள் முதலியன மென்பொருள்களை குறைந்த விலையில் தயாரித்து தந்துள்ளார். தொண்ணூறுகளுக்குப் பின் பிறந்த அமெரிக்கத் தமிழ் குழந்தைகள் கட்டாயம் இவரது சிடி மூலம் தமிழ் கற்றவர்களாக இருப்பார்கள். தொடர்புக்கு kuppu@kalvi.com.

தமிழில் 'கற்றல் கற்பித்தல்' இணைய தளம் ஒன்று தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியால் உருவாக்கப்பட்டுள்ளது. அண்மையில் தமிழகக் கல்வி அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இதன் தளம் www.tamilkalam.org



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




இத்தளம் உலகம் முழுவதும் உள்ள தமிழாசிரியர்கள் கற்றல் கற்பித்தல் தொடர்பாகத் தாங்கள் பெற்றுள்ள அனுபவங்களை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள நல்ல ஊடகமாகச் செயல்படும். இதன் வழியாக தமிழாசிரியர்கள் பெறப்போகும் நன்மைகளை தங்களது மாணவர்களுக்கு அளிப்பதற்கு இத்தளம் வெகுவாக பயன்படும். ஆகவே இவ்விணையத்தளம் தமிழ் கல்வியாளர்களுக்கு வகுப்பறைக்கு உள்ளேயும் வெளியேயும் பல்வேறு வகைகளில் உதவும்.

இத்தளம் தொடர்பாக தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி பொதுச்செயலாளர் ஆர். சுப்பாராஜ் கூறும்போது, ‘‘தமிழ்களம்’’ உலகளவில் வாழும் தமிழர்கள் அவர்தம் குழந்தைகளுக்கு தமிழ் கற்பிக்கும் ஒரு ஆசிரியனாக செயல்படும். இத்தளத்தின் மூலம் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கற்றல் கற்பித்தல் முறையினை பயின்று மாணவர்கள் மற்றும் குழந்தைகளுக்கு தமிழ் களஞ்சியங்களை பயிற்றுவிப்பர். உலகளவில் மட்டுமல்லாது, தமிழ்நாட்டின் குக்கிராமத்திலும் இத்தளம் அனைவருக்கும் பயன்படும் வண்ணம் உருவாக்கப் பட்டுள்ளது.

இத்தளத்தில் இவ்வாண்டு இறுதிக்குள் வெள்ளி தோறும் ஒரு கதை வீதம் 30 கதைகள் உட்புகுத்தப்படும் இதில் தற்போது 36 கட்டுரைகள் ஏற்கனவே இத்தளத்தில் உள்ளது. இணையத்தில் கற்கும் பொழுது ஏற்படும் சந்தேகங்களை உடனுக்குடன் தீர்த்துக் கொள்ளும் முறையும் விரைவில் கொண்டு வரப்படும். அதை நடைமுறைப் படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு

www.tamilarangam.net

வருகின்றன. வட்டத்திற்கு அல்லது பஞ்சாயத்திற்கு ஒரு பள்ளியில் கம்பியூட்டர் வாங்கினால் தொடக்கக் கல்வி ஆசிரியர் கூட்டணி இணையக் கல்வி வழி முறைகளை ஓர் ஆசிரியர் மூலம் இலவசமாக சொல்லிக் கொடுக்கும் திட்டமும் உள்ளது.''

**செந்தமிழ் சிடிரோம்:** தமிழில் உள்ள பெரிய இணையத் தளமான இன்தாம் இணையத்தின் அதிபர் திரு. சா.அ. சௌரிராஜன் அவர்களின் பெருமுயற்சியால் 'செந்தமிழ் சிடிரோம்' என்ற தமிழ் கற்பிக்கும் குறுவட்டு உருவாக்கப்பட்டுள்ளது.

பிறமொழியாளர்களுக்கு தமிழ் கற்று கொடுத்த அனுபவம் வாய்ந்த பேராசிரியர்களான திரு. இராஜாராம், திரு. கணபதி, திரு. கோமதி நாயகம் என்ற மூவர் குழுவிற்கு தலைமையேற்று சிறப்பான முறையில் இந்த சிடியை உருவாக்கியவர். திரு. இராஜராம் அவர்கள்.

'செந்தமிழ் சிடி' ஓர் சிறந்த தமிழாசான். மாணவர்கள் இந்த சிடியை கணினியில் இட்டு தானே தமிழ் கற்றுக் கொள்ள முடியும். ஆங்கில வழி தமிழ் கற்கும் முறையில் உண்டாக்கப்பட்டுள்ளது. பொதுவாக அகரவரிசை மூலம் கற்றுக் கொடுப்பதற்கு மாறாக 'டபம' முறையில் எளிதாக மாணவனுக்கு எழுத்தை கற்பித்து அதன் மூலம் சொற்களை கற்றுக் கொடுக்கும் முறையில் இந்த சிடி உருவாக்கப் பட்டுள்ளது. அகரவரிசைப்படி மாணவன் 12 எழுத்துக்களை கற்றுக் கொண்டாலும் ஒரு சொல் கூட உருவாக்க முடியாது. ஆனால் இந்த புதிய முறை மூலம் பல சொற்களை மாணவன் கற்றுக் கொள்வதுடன் தன்னம்பிக்கையையும் பெறுகிறான்.

எழுத்துக்களை ஒரு பேனா எழுதி காட்டும்; மாணவன் தனித்தாளில் அதை பின்பற்றி எழுதிப் பழக, எத்தனை முறை வேண்டுமானாலும் பேனா எழுதிக் கொண்டே இருக்கும் அனிமேஷன் காட்சி அழகாக உருவாக்கப்பட்டுள்ளது. இது போன்றே எழுதும் எழுத்தை எத்தனை முறை வேண்டுமானாலும் நாம் கேட்டு மனதில் பதிய வைக்க முடியும்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட புகைப்படங்கள்; எண்பது வீடியோ கிளிப்பிங்குகள்; குழந்தைகளுக்கு ஏற்ற தரமான 10 பாடல்கள். தமிழர் பண்பாட்டை விளக்கும் வீடியோ கிளிப்பிங்குகள் தரமானவை. எழுத்துப் பயிற்சி, சொற்பயிற்சி, பாடங்கள், சொற்களை உருவாக்கு தல்; தொடர்களை உருவாக்குதல்; உரையாடல் பயிற்சி; தமிழ், ஆங்கில எழுத்துக்களுடன், இலக்கணப் பாடம்; உடனுக்குடன் சொற்களின் பொருளைத் தெரிந்து கொள்ள உதவும் தமிழ்-ஆங்கில



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



www.tamilarangam.net

அகராதி; வார்த்தை விளையாட்டுகள் என அற்புதமான தமிழாசானாக இந்த செந்தமிழ் சிடி விளங்குகிறது. இந்த செந்தமிழ் சிடி வெளிவரும் நாட்களில் தமிழ்ப் பயிற்றலில் பெரும் பாய்ச்சலை ஏற்படுத்தும் என நம்பலாம்.

**இணையத்தில் தமிழ் சங்கங்கள்:**

அமெரிக்கா, தென் ஆப்ரிக்கா, நியூஸிலாந்து, கனடா, நார்வே, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, மஸ்கட் முதலிய நாடுகளில் வாழும் தமிழர்கள் தங்கள் சங்கங்களுக்கான இணைய தளத்தை ஏற்படுத்தி தங்கள் செயல்பாட்டை விளக்கி வருகின்றனர்.

**அமெரிக்காவில் உள்ள தமிழ் சங்கங்கள்:**

அஸ்டின் தமிழ் சங்கம், டெக்ஸாஸ்

பேஏரியா தமிழ் மன்றம், வடக்கு கரோலினா

சிகாகோ தமிழ் சங்கம்

நியூஜெர்சி தமிழ் சங்கம்

பால்டிமோர் தமிழ்ச் சங்கம், வாஷிங்டன்

டம்பா தமிழ் அசோஷியேஷன்

முதலியவற்றுக்கு தனித்தனியே இணைய தளங்கள் உண்டு. சங்க உறுப்பினர்கள், சங்கத்தின் நோக்கம், விழாக்கள், உறுப்பினர் கட்டணம், எதிர்கால திட்டங்கள், தமிழ் நாட்டிலிருந்து வரும் வி.ஐ.பிக்களின் நிகழ்ச்சி நிரல், பேட்டிகள் போன்றவைகளைக்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




காணலாம். 'புகைப்படக்கூடம்' அவர்களின் நிகழ்வினை திறந்த புத்தகமாக நமக்குக் காட்டுகிறது. இது தவிர இணையத்தை பார்வையிட்டோர் எண்ணிக்கை, இணைய விருந்தினரின் கருத்துக்கள் முதலியவற்றை எல்லா இணைய தளங்களிலும் காணக்கூடியதாக உள்ளது.

## இணையத்தில் திருக்குறள்:

தமிழ் இனத்தின் குறியீடாக திருக்குறளும் வள்ளுவர் சிறபமும் எல்லா இணையத் தளத்திலும் காணப்படுகிறது. திருக்குறளுக்கு என்று இணையத்தளம் உள்ளதா என்று தேடிய பொழுது பல இணையத் தளங்கள் கிட்டின. இது தவிர மென்பொருள் தயாரிக்கும் பல நிறுவனங்கள் இன்று தங்கள் மென் பொருளுடன் திருக்குறளையும் இணைத்து தருகின்றன. பல சிடி ரோம்களும் வெளிவந்துள்ளன.

http://www.cs.utk.edu/~siddhart/thirukkural

1330 குறட்பாக்களுடன் ஜி.யு. போப் அவர்களுடைய ஆங்கில மொழி பெயர்ப்புடன் இத்தளத்தில் வெளியிட்டுள்ளனர். மேலும் இத்தளத்தில் திருக்குறளிலுள்ள சொற்களை வைத்து தேடி எடுக்கும் முறை உள்ளது. எ-கா. திருக்குறளில் உள்ள எந்த ஒரு சொல்லையும்

www.tamilarangam.net

ரோமன் எழுத்து வடிவத்தில் குறிப்பிட்டு அச்சொல்லைக் கொண்ட குறளைத் தேடி அடையும் வகை செய்யப்பட்டுள்ளது. மற்றொரு ஆங்கில மொழிபெயர்ப்பை ஆஸ்திரேலியாவில் உள்ள இமாலயன் அகதாமியின் முன்முயற்சியில் 'புனிதகுறள்' (Holy Kural) என்ற தலைப்பில் காணலாம். இம்மொழிப் பெயர்ப்பை டெக்ஸாஸ் பல்கலை கழகத்தின் இணைய முகவரியான: http://www.cc.utexas.edu/~janahan/kural.html தளத்தில் பார்க்கலாம். திருக்குறளின் சில அதிகாரங்கள் மட்டும் ஆங்கிலத்திலும், தமிழிலும் உள்ள தளம் : பெர்கிலி பல்கலைக் கழகத்தினரின் http://tamilberkelay.edu திரு. ஆர். ரவீந்திரன் அவர்களும் திருக்குறளுக்கான இணைய பக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறார்.

தமிழக முதல்வர். மு. கருணாநிதி அவர்களுடைய திருக்குறளுக் கான உரையும் மூலம் www.thedmk.com தளத்தில் உள்ளது.

ஆங்கில எழுத்தில் உள்ள திருக்குறள் தளம்: http://dcwww.epfl.ch/icp/icp-2/kk/tamil4.html-இல் படிக்கலாம். sysindia.com இணைய தளத்தின் முகப்பில் தினமும் ஒரு திருக்குறளை வெளியிட்டு அதற்கான உரையினையும் வெளியிடுகின்றனர். இதனை ஒலியாகவும் கேட்க முடிகிறது.

தமிழ் நூல்களை இணையத்தில் பதிவு செய்து வரும் ''மதுரைத் திட்டத்தில்'' உள்ளீடு செய்யப்பட்ட முதல் புத்தகம் திருக்குறள், இப்பக்கத்தினைக் காண www.tamil.net/projectmadurai என்ற முகவரியில் காணலாம்.

**உலக மொழிகளில் திருக்குறள்:** www.geocities.com/athens/5180/thkrl.html என்ற வலைதளத்தில் உலகின் பல மொழிகளில் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டுள்ள விவரம் தொகுத்துத் தரப்பட்டுள்ளது. மொழி பெயர்த்த ஆசிரியர் பெயர், மொழி பெயர்க்கப்பட்ட ஆண்டு, ஆகிய விவரங்களும் அளிக்கப்பட்டுள்ளன.

அசாமிய மொழியில் -2; பர்மியமொழி-1; சீனம்-1; செக்-1; டச்சு-1; ஆங்கிலம்-25; பிஜிமொழி-1; பின்னிஷ்-1; பிராஞ்சு-5; ஜெர்மன்-6; குஜராத்தி-1; ஹிந்தி-7; கன்னடம்-4; லத்தின்-2; மலாய்-2; மலையாளம்-6; ஒரியா-1; பஞ்சாபி-1; போலந்து மொழி-1; ராஜஸ்தானி-1; ரஷ்ய மொழி-2; சமஸ்கிருதம்-1; சௌராஷ்டிரம்-1; சிங்களம்-2; சுவிடீஷ்-1; தெலுங்கு-2; உருது-2 மொழிபெயர்ப்புகள் உள்ளன. என்ற பட்டியலைத் தருகிறது. கொலோன் பல்கலைக்கழகம் மின் நூலகத்தில் திருக்குறளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆங்கிலத்திலும், ஜெர்மனியிலும் படிக்கும் வகையில் உள்ளீடு செய்துள்ளனர்.

**கி.மு. கி.பி தமிழில் திருக்குறள்**

தமிழ் மொழி எழுத்துக்கள் காலந்தோறும் பல வடிவங்களை கொண்டு மாறி, மாறி இன்றைய அழகான வடிவத்தை அடைந்தது. வள்ளுவர் வாழ்ந்த காலத்தில் தமிழ் எழுத்துக்கள் எப்படி இருக்கும்? சங்க கால தமிழ் எழுத்துக்களை 'தமிழி' என அழைத்தனர். அந்த வடிவில் திருக்குறளை வரைந்து நூல் வடிவில் அச்சேற்றினர், சென்னைக் கிருத்துவக் கல்லூரி பேராசிரியர்கள் திருவாளர்கள் கிப்ட் சிரோன்மணி, எஸ். கோவிந்தராஜன், எம். சந்திரசேகரன்.

1. கி.மு. 250 - கி.பி. 250 www.geocities.com/athens/5180/kural1.jpg
2. கி.பி. 557- கி.பி. 590 www.geocities.com/athens/5180/kural2.jpg
3. கி.பி. 737-கி.பி. 795 www.geocities.com/athens/5180/kural3.jpg

திருக்குறளுக்கான முழு உரைகளையும் இணையத் தளம் இல்லாதது ஒரு குறை! இணையத் தமிழர்கள் அதையும் சாதிப்பார்கள் என்று நம்புவோம்.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காலத்தை வென்ற கவிதைப் புயல்-திருக்குறளை 'குறளமுது' என்கிற தலைப்பில் 1330 குறட்பாக்களும் ஒளி, ஒலி, இசை, வீடியோ, கிளிப்பிங், அனிமேஷன் என்ற பல்லூடக (Multimedia) முறையில் சிறப்பான சிடி ரோமாக சென்னைக் கவிகள் கொண்டு வந்துள்ளனர். இதில் தமிழ், ஆங்கிலம், மலாய், பிரஞ்சு மொழியில் திருக்குறலும், உரையும் தொகுக்கப்பட்டுள்ளது. சுஜாதா அவர்களும் திருக்குறள் சிடி கொண்டு வந்துள்ளார்.

உலகத் தமிழ் மொழி அறக்கட்டளை, அமெரிக்காவிலுள்ள சிகாகோவில் உள்ளது. இந்நிறுவனம் இயக்குநர் திரு. அழகப்பா ராம்மோகன் ஆவார். தமிழ் மூலம் தமிழினத்தை வளப்படுத்துவதே இந்நிறுவனத்தின் முழக்கம். இணைய முகவரி: http://kural.org.




திருக்குறளை தமிழர்கள் தங்கள் வாழ்வியலாக்கிக் கொள்வது; தமிழிசையை மீளக் கொண்டு வருவது; மேலை நாடுகளில் உள்ள பள்ளி, கல்லூரிகளில் அறிவியலைக் கற்பிப்பதற்கு பயன்படும் வீடியோக்களை தமிழாக்கம் செய்து தமிழகப் பள்ளிகளுக்கு வழங்குவது; அச்சேறாத தமிழ் நூல்களை வெளியிடுவது; பிரிட்டீஸ் கவுன்சில், அல்லன்ஸ் பிரான்கையீஸ் போல தமிழர் வட்டங்களை ஊர்தோறும் ஏற்படுத்துவது; குறள் அமைப்புகளை தொகுப்பது; தமிழிசையை தானே கற்றுக் கொள்வதற்கு 3 குறிப்புப் புத்தகங்களும், ஒலி நாடாவையும் வெளியிடுவது இதை டர்பனைச் சேர்ந்த அமரர். திரு. என்.சி. நாயுடு உருவாக்கினார்.

மேலே கண்டவைத் தவிர தமிழ் ஆண்டுப் பிறப்பு, பொங்கள் விழாக்களை கொண்டாடுவது; மாலை நேரங்களில் கலந்துரையாடலை ஏற்படுத்தி, வளர்ந்து வரும் அமெரிக்க இணைய சமுதாயத்திற்கு தமிழர் பண்பாடு, கலை, இலக்கியம் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'தமிழ்மறை திருக்குறள்/TIRUKKURAL THE HOLY SCRIPTURE; தமிழ்பண்பாட்டுக் கையேடு/THE HAND BOOK OF TAMIL CULTURE & HERITAGE; தமிழின எதிர்கால வழிகாட்டி/ GUIDE TO TAMILS FUTURE இவை மூன்றும் ஒரே புத்தகமாக 1832 பக்கங்களில் மே 1ந்தேதி திரு. அப்துல் கலாம் அவர்களால் வெளியிடப்பட்டது.

தமிழ்-ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் திருக்குறள் (703 பக்கங்கள்) வள்ளுவர் சிலை வண்ணப்படம்-வள்ளுவர் ஓவியம் வண்ணப்படம்; குறள் மூலம் சந்தி பிரித்தும் பிரிக்காமலும்-தமிழண்ணலின் குறள் நுண் பொருள் விளக்க உரை-பி.எஸ். சுந்தரத்தின் குறள் ஆங்கில மொழி பெயர்ப்பு-மணியம் செல்வனின் 133 குறள் அதிகார ஓவியங்கள்- குறள் அருஞ்சொல் பதவுரை-குறள் பொருள் அகராதி-குறள் மொழி பெயர்ப்புகளின் அட்டவணை-திருக்குறள் பெருமை-குறள்பாட்டு முதற் குறிப்பு அகராதி-திருவள்ளுவர் வாழ்க்கை வரலாறு படக்கதை-திருக்குறள் இறை வழிபாட்டு மந்திரங்கள் (இசை வடிவுடன்)

**தமிழ்ப் பண்பாட்டுக் கையேடு (963 பக்கங்கள்)**

தமிழ் வாழ்த்து-தமிழ்ச் சான்றோர் வாழ்த்து- தமிழ் மொழி ஓர் அறிமுகம்-பண்பாடு-தமிழ் பண்பாடு-தமிழ்பண்பாட்டு குறியீடு-இன்றைய தமிழினம்-தமிழ் ஒரு செவ்வியன் மொழி-தமிழின் தொன்மையும் தொல்காப்பியமும்-தமிழின் கொடை-இலக்கணமும் செய்யுள் மரபும்-தமிழ் ஒலியியலும் வரிவடிவமும்-தமிழ்க்கவிதை ஓவியங்கள்-சங்க காலத் தனிச்சிறப்பு அகமும் புறமும்-தமிழர்சட்டங்கள்- தமிழ் மரபிசை-நாட்டியம்-தமிழ் இலக்கிய வரலாறு-மருத்துவவியல்-கணிதவியல்-வானவியல்-தொழில் நுட்ப மேன்மை-சிவநடராச தத்துவம்-தமிழர் வளர்த்த சமயங்கள்.

**தமிழின எதிர்கால வழிகாட்டி (166 பக்கங்கள்)**

புதிய ஆயிரம் ஆண்டுகள்-அறவழி-மனம்-மனப்பயிற்சி வழி உள்நோக்கு-உடற்பயிற்சி-சிந்தனைத்திறன் வளர-உங்கள் சிக்கல்கள் தீர-கடமை ஆற்றலே தவம்-தமிழ் எழுத்தாளர்களின் பொறுப்பு-தமிழினம் ஓங்குக-வேற்றுமையில் ஒருமைப்பாடு-வள்ளுவருக்குக்கடிதமும் பதிலும்-நன்றி-வாழ்வுக்கு நெறிமுறைகள்-தமிழின் எதிர்காலம் -என்ற தலைப்புகளில் தமிழன் இப்புதிய நூற்றாண்டிலும் புதிய ஆயிரம் ஆண்டுகளிலும் இழந்த பெருமையை மீண்டும் மீட்டு இன்னும் உயர்ந்து ஓங்கக் கடைபிடிக்கக்கூடிய செயல்பாடுகளை இப்பகுதி வழங்குகிறது.

www.tamilarangam.net

மேலே கண்ட நூற்களைத்தவிர ''திருக்குறள் இசைமலர் காமத்துப்பால்'' ஒலிப்பேழையும் வெளியிட்டுள்ளனர்.

**இணையத்தில் மின் நூலகம்:**

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்கு நூற்கள் கிடைப்பது கஷ்டம். அங்குள்ள பல்கலைகழகத்தில் தமிழ் நூற்களுக்கான பட்டியல் இணையத்தில் கிடைக்குமே தவிர, நாம் தேடும் குறிப்பு கிடைக்காது. இந்த வருத்தங்களை எல்லாம் போக்கும் வண்ணம் ஒரு இணையத்தளம் உள்ளது அது:

http://www.geocities.com/athens/5180/index.html

தமிழ், தமிழர், தமிழ்நாடு, வரலாறு, பண்பாடு, இலக்கியம், கலைகள் உள்ளிட்ட பல நூறு தலைப்புகளில் உள்ள ஆங்கிலக் கட்டுரை கொண்ட பெரும் தகவல் திரட்டை உருவாக்கி இருப்பவர். முனைவர்.கு. கல்யாண சுந்தரம்.




ஜெர்மனியிலுள்ள கொலோன் பல்கலைக்கழக தமிழ்த் துறையினரின் பெருமுயற்சியால் உருவான இணையத்தளம்: http://www.uni-koeln.de/phil-fak/indologic/tamil/ttt-search.html இத்தளத்தில் பழந்தமிழ் இலக்கியங்களை ஆங்கிலம் மற்றும் ஜெர்மனி மொழிகளில் உள்ளீடு செய்து வைத்துள்ளனர். பட்டியலில் உள்ள தமிழ் இலக்கியங்களைத் தேடி எடுத்து படிக்கலாம். பழந்தமிழ் இலக்கியங்களின் சொல்லடைவு சிறப்பான ஒன்று. தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள், பழமொழி, நாலடியார், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், வில்லிபாரதம், திருமந்திரம், திருவிளையாடல்புராணம், பெரிய புராணம், கந்தபுராணம், தேம்பாவணி முதலிய நூல்களைக் காணலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மதுரைத் திட்டம்




| | | | |
|---|---|---|---|
| General Info. | F.A.Q. | More on Madurai | Coordinators |
| Time Table | Finished Works | Target Works | Press Reviews |

© **Project Madurai, 1998 - 2000**, Web page design by Dr. Kumar Mallikarjunan.

http://www.tamilnet/projectmadurai/pminfo.html

தமிழில் வெளிவந்துள்ள எல்லா நூற்களையும் கொண்ட ஒரு நூலகம் என்பது இதுவரை எங்கேயும் இல்லை. சென்ற நூற்றாண்டில் அச்சிடப்பட்ட பல நூல்கள் மடிந்து, உடைந்து, நொறுங்கிப்போய்க் கொண்டிருக்கிறது. கிடைத்தவற்றை மட்டும் நுண்புகைப்படங்களாக எடுத்து ஆவணக் காப்பகத்தில் சேர்த்து வைத்துள்ளனர். ஆய்வாளர்கள் மட்டுமே தான் இவற்றைப் பயன்படுத்தலாம். 18,19-ஆம் நூற்றாண்டுகளில் அச்சிடப்பட்ட நூற்களை அப்படியே ஸ்கேன் செய்து இணையத்தில் சேர்த்து விட்டால் எல்லோருக்கும் பயன்படும். தற்காலத்தில் கூட புகழ் பெற்ற தமிழிலக்கியங்கள் மட்டும் வணிக ரீதியில் பதிப்பிக்கப்படுகின்றன. சிற்றிலக்கியங்களை பழைய தமிழ் நூலகங்களில் மட்டும்தான் பார்க்கலாம். இதுபோன்று ஒரு பதிப்பு மட்டுமே கண்ட பல நல்ல தமிழ் நூற்கள், இதழ்கள் கிடைப்பது இன்று கிடைப்பதே இல்லை. இந்த தொல்லைகளை யெல்லாம் களைவதற்கு என்று உருவாக்கப்பட்டதே "மதுரைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திட்டம்'' மதுரை பெயர் வைத்ததற்கு காரணம் 'பாண்டிய நாடே பழம்பதி' என்பதற்காக மட்டுமல்லாமல் சங்கம் வைத்து தமிழ் வளர்த்த காரணத்தால் தான் என்கின்றனர்.

1998ஆம் ஆண்டு ஜனவரி 14ஆம் நாள் பொங்கலன்று இத்திட்டம் தமிழ் நெட் இணையம் மூலம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்திற்கு முனைவர். கு. கல்யாண சுந்தரமும், முனைவர் பி. குமார் மல்லிகார்ஜூன் தலைமையில் 26 உறுப்பினர்கள் கொண்ட குழு மூலம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்திற்கான வேலையை யார் செய்வது என்றால்? 'நீங்கள் தான்' என்கின்றனர். கிடைப்பதற்கு அரிய நூல்களை நாம் வீட்டில் இருந்தவாறே, இந்த இணைய முகவரிக்குச் சென்று எழுத்துருக்களை பதிவிறக்கம் செய்து, தட்டச்சு செய்து அனுப்பலாம். இது ஒரு முறை. மற்றொன்று பழை உடையும் நிலையில் உள்ள நூற்களை ஸ்கேன் செய்து பக்கம், பக்கமாக மின்னஞ்சல் மூலமாக இத்திட்டத்திற்கு அனுப்பி விடலாம். உங்களால் அனுப்பப்படும் புத்தகம் உங்கள் பெயரால், நீங்கள் அனுப்பி வைத்தவை என்று பெயரிடப்பட்டு உள்ளீடு செய்யப்படும் என்கின்றனர். இத்திட்டம் எந்தவித வணிக நோக்கமின்றி செய்யப்படுவதால், இத்திட்டத்திற்கு உழைத்த அனைவருக்கும் இத்திட்டம் சொந்தம் என்கின்றனர்.

நூலாசிரியர் உரிமை : இத்திட்டத்திற்கு புத்தகத்தை தட்டச்சு செய்து அனுப்புவதற்கு முன்பு, மின்னஞ்சல் செய்து கேட்கலாம். 1929-ஆம் ஆண்டுக்கு முன்பு வெளிவந்த நூற்களை எடுத்து அனுப்பினால் நூலாசிரியர் உரிமை பிரச்சினை வராது. தமிழக அரசு அரசுடைமையாக்கியுள்ள தமிழறிஞர்களின் நூற்களை தட்டச்சு செய்து அனுப்பலாம். வாழும் நூலாசிரியரின் அனுமதி பெற்றுக் கூட அனுப்பிவைக்கலாம். இத்திட்டத்திற்கு உலகம் முழுவதுமுள்ள தமிழர்கள் நூற்களை அனுப்பி வைக்கின்றனர். இத்திட்டத்தில் உள்ளீடு செய்யப்பெற்றுள்ள நூல்களை யார் வேண்டுமானாலும் பதிவிறக்கம் செய்து கொண்டு படிக்கலாம்.

**தமிழ் இணையங்களின் தொகுப்பாளர்கள்:**

தமிழ் இணைய உலகில் தேடும்பொறி (search Engine) இன்னும் உருவாக்கப்படவில்லை. அதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன.அதற்கு முன்பே உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களிடம் தமிழ் இணையங்களை தொகுக்க வேண்டும் என்கிற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எண்ணம் தோன்றியது. யாரும் யாருடைய ஆலோசனையும் பெறாமல், ஆங்கில மொழி தேடு பொறி எப்படி பகுத்து, தொகுத்திருக்கிறார்களோ அம்முறையியிலேயே தமிழ் இணையங்களை தொகுத்திருக்கின்றனர். இதில் எந்த வித வணிக நோக்கமுமின்றி தமிழர்கள் அனைவருக்கும் பயன்படவேண்டும் என்கிற ஒரே நோக்கத்துக்காக செய்யப்பட்டுதான். தொகுப்பாளர்கள் அனைவரும் கீழே கண்ட முறையில்தான் தொகுத்துள்ளனர்.

1. தமிழ் எழுத்து - மென்பொருள்கள்
2. தமிழ் சினிமா
3. தமிழ் திரைப்படபாடல்கள்
4. தமிழ் திரைப்பட நடிக-நடிகைகள்
5. இசை - பரதம்
6. தமிழ் வானொலி
7. தமிழ் தொலைக்காட்சி
8. தமிழமைப்புக்கள்
9. தமிழ் நாட்டிலுள்ள மருத்துவ இணையங்கள்
10. தமிழ்நாட்டிலுள்ள கல்வி நிலையங்கள்
11. தமிழ் மின் இதழ்கள்
12. இணையத்தில் அச்சிட்ட இதழ்கள்
13. தமிழ் கலந்துரையாடல்
14. தமிழ் மின்னஞ்சல்
15. தமிழ் புத்தகக் கடைகள்
16. தமிழ் ஊர்கள் பற்றிய இணையங்கள்
17. தமிழ் பயிற்றும் இணையங்கள்
18. தமிழ் திருமண இணையங்கள்
19. தமிழ் இலக்கிய இணையங்கள்
20. தனிநபருக்கான இணையங்கள்
21. தமிழக கட்சிகளின் இணையங்கள்
22. தமிழக கோவில்களின் இணையங்கள்
23. வழிபாட்டிற்கான இணையங்கள்
24. போக்குவரத்து இணையங்கள்

www.tamilarangam.net

25. திருவிழாக்கள் இணையங்கள்
26. வங்கிகளுக்கான இணையங்கள்
27. சோதிட இணையங்கள்
28. வாழ்த்து அட்டைகள்
29. ஈழம் பற்றிய இணையங்கள்
30. சமையல் பற்றிய இணையங்கள்

**தமிழ் இணையங்களின் தொகுப்பாளர்கள் :**

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. கு. கல்யாணசுந்தரம் | : | www.geocities.com/athens/5180/ index.html |
| 2. | திரு. சரவணன் | : | www.directory india.com/state/tamil |
| 3. | திரு. பசுபதி | : | http://members.tripod.com/ ~APasupathy/Tamilweb.html |
| 4. | திரு மகேந்திரன் | : | http://www.Pathcom.Com/~mahend |
| 5. | திரு. தாஜுதீன் | : | http://members.aol.com/ktajudeen/ tamil.html |
| 6. | திரு. இப்ராகிம் | : | http://www.geocities.com/Hollywood/ Hills/1831/index.html |
| 7. | திரு. செல்லய்யா | : | http://www.Chelliah.freeserve.co.uk |
| 8. | திரு. முகில் | : | http://www.mukil.com/index.htm |
| 9. | திரு. சித்தார்த்தன் | : | http://www.cs.utk.edu/~siddhart/ tamilnadu |
| 10. | திரு. சுந்தர் | : | http://Sundam.homepage.com/ tamilwebsites/html |

## தமிழ் ஓர் அறிவியல் மொழி என்பதை மெய்ப்பிக்கும் தமிழ் கணினி - இணைய நூற்கள்

கணினி, இணையம், வன்பொருள், மென்பொருள் பற்றிய துறைகளை தமிழிலேயே கற்றுக் கொள்ள முடியும்; மாணவர்களுக்கு தமிழில் கற்றுக் கொடுங்கள், என்று சொல்ல ஆரம்பித்ததும், சனாதனிகளும், ஆங்கிலதாசர்களும் கூடாது என்று நேரிடையாக சொன்னால் கோபிப்பார்கள் என்று தம்மை மறைத்துக்கொண்டு, அதற்கான புத்தகங்கள் இல்லையே என்பார்கள். இன்று இந்திய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மொழிகளில் தமிழில் மட்டுமே சுயமாக கணினி பற்றி எழுதப்படும் நூற்கள் ஐம்பது வரை வந்துவிட்டது, ஐந்திற்கும் மேற்பட்ட மாத, மாதம் இருமுறை இதழ்கள் வந்து கொண்டிருக்கின்றன. இதுபோன்ற ஓர் எழுச்சி ஏன் பிற மொழிகளில் காணோம் என்றால் பதில் மௌனம்தான்.

நூறு ஆண்டுகளுக்கு முன்னாலேயே, கிரீன் எழுதிய Human Anatomy என்ற நூல், 'மனுஷ பாதாதிகேசம்' என்று மொழி பெயர்க்கப்பட்டது இலங்கையில். பொறியியல், மருத்துவம் முதலிய துறைகளை அங்கே, இன்றுகூட தமிழில் படிக்கலாம்! தமிழ்நாட்டில் தான் முடியாது!!

தமிழில் தந்தி கூட பெருநகரங்களில் சில இடங்களில் மட்டுமே இருக்கிறது. கிராமங்களுக்கு இன்னும் பரவவில்லை. வானொலி, தொலைக்காட்சி, அஞ்சலகம், தந்தி, தொலைப்பேசி முதலிய எல்லா நவீன சாதனங்களையும் சேர்த்துக்கொண்டு வந்துள்ள இணையத்தை எந்தளவுக்கு தமிழ்ப்படுத்துகிறோமோ, அந்தளவு சாதாரண மக்களையும் சென்றடையும். மேல்தட்டுக்கு மட்டுமே உரிய சாதனம் என்பதை மாற்ற வேண்டும்.

'மெல்லத் தமிழினி சாகும்' என்ற முழக்கங்கள் இணையத்தின் வரவால் மாற்றமடைந்திருக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகத்தில் முரசு முத்தெழிலன் பேசும்போது குறிப்பிட்டார், "தமிழ் பற்றி இனி யாரும் கவலைப்பட வேண்டாம். ஏனெனில் அது இணையத்திற்குள் சென்றுவிட்டது'' என்றார். அது எவ்வளவு உண்மை என்பதை இணையப் பரப்பை காணும்போது உணர முடிகிறது.

**தமிழில் வெளிவந்துள்ள கணினி - இணையம் பற்றிய நூற்பட்டியல்**

1. தமிழ் மூலம் word 2000 - றமணன் - குயிக்டெக் அகாடமி, கொழும்பு.
2. இன்டெர்நெட் - கே. சுந்தரராஜன் - கண்ணதாசன் பதிப்பகம்
3. தமிழ்மூலம் டாஸ் கற்றுக்கொள்ளுங்கள் - உதயகுமார் பதிப்பகம்
4. வீட்டுக்குள் வருமுலகம் இன்டர்நெட் - சுஜாதா - டிஸ்னெட் லிட்
5. கணிப்பொறி தகவல் தொழில்நுட்பம் - பாஸ்கரன் - உமா பதிப்பகம்
6. கொரிக்க கொஞ்சம் கம்பியூட்டர் சிப்ஸ் - இரா. முருகன் - ஸ்நேகா பதிப்பகம்

www.tamilarangam.net

7. இன்டெர்னெட் ஒரு நவீன பந்தம் - தமயேந்திரன் - பூங்கொடி பதிப்பகம்
8. டி பேஸ் வழியாக சி மொழி - மு. சிவலிங்கம் - வளர்தமிழ் பதிப்பகம்
9. டிடிபி - ஆண்டோபீட்டர் - வளர் தமிழ் பதிப்பகம்
10. விண்டோஸ் - கே. சுந்தரராஜன் - கண்ணதாசன் பதிப்பகம்
11. கம்பியூட்டர் அமைப்பும் இயங்கும் விதமும் - வி.டி. சங்கர் - நர்மதா பதிப்பகம்
12. இன்டெர்னெட் 2000 - தணிகையரசு - நர்மதா பதிப்பகம்
13. டேட்டாபேஸ் 2000 கற்றுக்கொள்ளுங்கள் - தணிகையரசு - நர்மதா பதிப்பகம்
14. இன்டர்னெட் 2000 Y2k தவிர்க்க நவீன தொடர்புமுறை கையேடு - தணிகையரசு - நர்மதா பதிப்பகம்
15. பேசிக் மொழி - தணிகையரசு - நர்மதா பதிப்பகம்
16. இன்டர்நெட் கையேடு - ஆண்டோபீட்டர் - இராஜ்மோகன் - விகாஸ் பப்ளிகேஷன்ஸ்
17. மல்டிமீடியா கற்றுக் கொள்ளுங்கள் - கா. அபிராமி - தமிழ் புத்தகாலயம்
18. விண்டோஸ் தான் என்ன? - கா. அபிராமி - தமிழ் புத்தகாலயம்
19. கணினி ஓர் அறிமுகம் - கா. அபிராமி - தமிழ் புத்தகாலயம்
20. டாஸ் கையேடு - கா. அபிராமி
21. இன்டர்னெட் - கா. அபிராமி
22. விண்டோஸ் 101 டிப்ஸ் - ரூ. 30 நவீனா
23. கம்பியூட்டர் அசெம்பிளிங் - ரூ. 30 கே.எஸ். சங்கரன் கம்பியூட்டர் உலகம்
24. கம்பியூட்டர் தரும் தொழில்கள் - ரூ. 25 மேகலைவாணன்
25. தமிழ் மூலம் MS Excel - ரூ. 150
26. இன்பர்மேஷன் டெக்னாலஜி
27. இனி எல்லாம் இன்டெர்னெட் - லெனின் - சிக்ஸ்த் சென்ஸ் பதிப்பகம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

28. கணினி கலைச்சொல் களஞ்சிய அகராதி - மணவை முஸ்தபா - மணவை பதிப்பகம்
29. குழந்தைகளே கம்பியூட்டரை புரிந்து கொள்ளுங்கள் - விஜயாநிலா - இராமனாதன் பதிப்பகம்
30. கணினி ஒரு அறிமுகம் ECBC - கா. அபிராமி - தமிழ் புத்தகாலயம்
31. கணிப்பொறி இயலுக்கு அறிமுகம் - வி. கிருஷ்ணமூர்த்தி - அண்ணா பல்கலைக்கழகம்
32. கணிப்பொறி கலைச்சொல் அகராதி - வளர்தமிழ்க் குழு - வளர் தமிழ் மன்றம்
33. கம்பியூட்டர் தோன்றிய வரலாறு - ஆசிரியர் குழு - மணிமேகலை பதிப்பகம் ரூ.11/-
34. கம்பியூட்டர் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள் - மணிமேகலை பதிப்பகம் ரூ.22/-
35. கம்பியூட்டர் உபயோகங்கள் - மணிமேகலை பதிப்பகம் ரூ.30/-
36. கம்பியூட்டர் மொழிகள் - மணிமேகலை பதிப்பகம் ரூ.19/-
37. கம்பியூட்டர் பாகங்கள் - மணிமேகலை பதிப்பகம் ரூ.16/-
38. கம்பியூட்டர் நிகழ்ச்சிகள் அமைப்பது எப்படி? - மணிமேகலை பதிப்பகம் ரூ.25/-
39. வங்கிகளில் கம்பியூட்டர் - மணிமேகலை பதிப்பகம் ரூ.20/-
40. Oracle (தமிழில் ஒரு விளக்கக் கையேடு) - எஸ். தணிகைஅரசு - ரூ.70/- நர்மதா
41. மாறுமோ ஹார்ட் டிக்ஸ் - விஜயநிலா - நர்மதா ரூ.40/-
42. HTML தமிழில் ஓர் விளக்கக் கையேடு - எஸ். தணிகைஅரசு ரூ.30/-
43. இ-மெயில் அனுப்புவது பயன்படுத்துவதும் எப்படி? - எஸ். தணிகைஅரசு ரூ.32/-
43. தமிழ் மூலம் Basic கம்ப்யூட்டர்மொழி கற்கலாம் - எஸ். தணிகைஅரசு ரூ.32/-
44. MS-Word தமிழில் ஓர் விளக்கம் - எஸ். தணிகைஅரசு ரூ.40/-
45. 95 & விண்டோஸ் - எஸ். தணிகைஅரசு ரூ.80/-

www.tamilarangam.net

# தமிழில் வெளிவரும் கணினி, இணைய இதழ்கள்




**தமிழ் கம்பியூட்டர்**
44, ஆர்,ஓ.பி.
மெயின் தெரு,
சென்னை-600 014.




**கணிமொழி**
2-A, ரயில்வே சாலை
முதல் தெரு, மேத்தா
நகர், அமைந்தகரை,
சென்னை-29.
போன்: 275323




**கம்பியூட்டர் உலகம்**
எண்.7, டாக்டர்
கோபாலமேனன் சாலை,
கோடம்பாக்கம்,
சென்னை-24.




**இன்டர்நெட் உலகம்**
புதிய எண். 15,
தியாகராய
கிராமணி தெரு,
வடக்கு உஸ்மான்
ரோடு, சென்னை-17.




**தமிழ் இணையம்**
625, அண்ணாசாலை,
5 வது தளம்,
சென்னை-6.




**கம்பியூட்டர் பிட்ஸ்**
7, கோபால மேனன்
தெரு, கோடம்பாக்கம்,
சென்னை-27.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**சி.டி. ரோமில் முதல் தமிழ் புத்தகம் :** இன்று மென்பொருள்கள் தயாரிக்கப்பட்டு சி.டி.ரோமில் (குறுவட்டில்) வருகிறது. திரைப்படம், பாடல்கள், புத்தகங்கள் எல்லாம் வரத் தொடங்கிவிட்டன. தமிழில் முதன் முதலாக காம்பேக்ட் டிஸ்க்கில் வெளிவந்துள்ள நூல் என்ற பெருமை ‘பனித்துளிக்குள் ஓர் பாற்கடல்’ என்ற சி.டி.ரோம் பெறுகிறது.

இந்நூலை எழுதியவர் காவல்துறை ஐ.ஜி. டாக்டர். ரவி ஆறுமுகம் ஆவார். இந்த சிடியில் 52 கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. தமிழ் இலக்கியம் சி.டி.யில் ஏறிவிட்டது. இந்த சி.டி.யை செய்ய உதவியவர்கள் சென்னைக் கவிகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**தமிழில் டொமைன் பெயர்கள் :** தற்போது டொமைன் பெயர்கள் ஆங்கிலத்திலேயே கொடுக்கப்பட்டு வருகிறது. எ-கா. இணைய உலகில் நாம் பார்க்கும் Com, net, org, gov, edu. என்பனவும் இறுதியில் உள்ள நாடுகளின் பெயர்களையும், முதலில் உள்ள பெயரையும் தமிழிலேயே தரலாம். எ-கா. வணி, வலை, அமை, அரசு, கல்வி என்றும் இறுதியில் in - என்பதை இந், Sg - சிங்(கப்பூர்) என்றும் தமிழிலே கொடுக்க ஒரு நிறுவனம் வந்துள்ளது. சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஐ.டி.என்.எஸ். நெட் இன்டெர்நேஷனல் என்ற அமைப்பு முன்வந்துள்ளது. வருங்காலத்தில் ‘தமிழ் நம்பி @ வணி.சிங்’ என்று மின்னஞ்சல் முகவரிகளையும், இணைய முகவரிகளையும் பார்க்கலாம்.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**தமிழில் மின் அஞ்சல்கள் :** தமிழில் மின் அஞ்சல் அனுப்ப முடியுமா எனப் பலர் கேட்கின்றனர். கணினி ஆங்கிலத்தில் மட்டும்தான் அனுப்புவேன் என்று சொல்வதில்லை. மின்னஞ்சல் தமிழில் அனுப்புவதற்கு தட்டச்சு தரப்படுத்துதல், யுனிக்கோடில் தமிழுக்கான இடத்தை உறுதிப்படுத்திவிட்டால் யாரும் யாருக்கும் மின்னஞ்சல் அனுப்பலாம். ஆனால் மேலே கண்டவை இன்னும் உலகளவில் நடைமுறைப்படுத்தாததால், நாம் எந்த எழுத்துருவில் கடிதத்தை அடிக்கிறோமோ, அதே எழுத்துருவையும் கடிதத்துடன் அனுப்பி வைத்தால்தான் கடிதம் பெறுபவர் படிக்க முடியும். Mailjol.com நிறுவனமும் தமிழில் வழங்குகிறது என்றாலும், அனுப்புபவரும், பெறுபவரும் அதில் உறுப்பினராக இருந்தால்தான் தமிழ் தெரியும்.

www.lastech.com நிறுவனத்தின் அதிபர் திரு. துலுக்காணம் அவர்களின் முன்முயற்சியால், தமிழில் இணைய அஞ்சலைப் பரிமாறிக் கொள்ள www.tamilanjal.com என்ற தளத்தை ஏற்படுத்தி யுள்ளனர். இதில் எழுத்துரு பிரச்சினை இல்லை. ஜாவாவின் உதவியால் ஓர் மாயாஜாலம் செய்திருக்கின்றனர். முதல் பக்கத்தில் ரோமனைஸ்டு லேஅவுட், தட்டச்சு லேஅவுட், டிஓஇ ஒலியியல் லேஅவுட், சிங்கப்பூர்ஐஇ லேஅவுட், மைலய் லேஅவுட், தமிழ் நெட் 99 லேஅவுட், என்ற ஆறு விசைப் பலகைகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்யலாம். பின்னர் அங்கு ஒரு தமிழ்ப் படிவம் காணப்படும். அதில் தட்டச்சு செய்து அனுப்பலாம். இதில் எந்த எழுத்துருவையும் பதிவிறக்கம் செய்யாமலேயே அனுப்பும் முறை உள்ளது. பெறுநரும் எந்த எழுத்துருவையும் பதிவிறக்கம் செய்யாமல் படிக்கலாம்.

மின் தமிழஞ்சலை விட இன்னும் எளிமையான முறையில் தமிழில் மின் அஞ்சல் அனுப்ப உதவும் www.langoo.com. இந்நிறுவனம் 10 மொழிகளில் மின்னஞ்சல் சேவையை நடத்துகிறது. அதில் தமிழும் ஒன்று. முழுக்க முழுக்க தமிழிலே அனைத்துப் பக்கங்களும் உள்ளது இதன் சிறப்பு. முதல் பக்கத்தில் 'தமிழ்' என்ற பகுதியை தொட்டவுடன், பதிவு விண்ணப்பத்தில் பதிந்து கொள்ளலாம். பின்னர் 'கம்போஸ்' என்ற பகுதியில் கடிதத்தை தட்ச்சு செய்ய கீழேயே அவர்கள் உருவாக்கியுள்ள விசைப்பலகை உள்ளது. அதில் தட்டச்சு செய்து அனுப்பிவிடலாம். இந்த எளிய முறையை செய்துள்ளவர்கள் ஒரு வடநாட்டு குழுமம். இதில் எழுத்துரு பிரச்சினை, தட்டச்சு தேர்வு, பெறுபவர் உறுப்பினராகி இருக்க வேண்டும் என்கிற பிரச்சினை எல்லாம் கிடையாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



www.tamilarangam.net

ஆங்கிலத்தில் உள்ள இணையங்களில் நாம் ஒரு கடிதத்தை அடித்துவிட்டு, எழுத்துப்பிழை, சொற்பிழை, பொருட்பிழைகளை 'சரிசெய்' என்று ஆணையிட்டால் இலக்கணப்படி கடிதம் எழுதாதவர்களுடைய கடிதத்தைக் கூட சரிசெய்து அனுப்பும் வசதி உள்ளது. மேலும் அல்டாவிஸ்டா இணையம் மூலம் ஒரு வசதி உண்டு. அது ஆங்கிலத்தில் கடிதத்தை தட்டச்சு செய்து, ஒரு பிரஞ்சுகாரருக்கு அனுப்ப வேண்டும் என்றால், கடிதத்தை அப்படியே பிரஞ்சு மொழியாக்கம் செய்து அனுப்பும் வசதி எல்லாம் மேலை நாடுகளில் வந்துவிட்டது. தமிழ்மொழி மூலம் மற்ற மொழிக்கு மொழிமாற்றம் செய்யும் கருவியை கண்டுபிடித்து விட்டால், அதை இணையத்தில் பயன்பாட்டுக்கு கொண்டு வந்துவிடலாம். இதன் மூலம் உலகில் உள்ள எல்லா மக்களுடன் உறவு வலுப்படும். தமிழ் - ஆங்கிலம்; தமிழ் - பிரஞ்சு; தமிழ் - ஜெர்மன்; தமிழ் - இந்தி மொழிமாற்றுக் கருவிகளை உடனுக்குடன் கொண்டுவர தமிழறிஞர்கள் உதவ வேண்டும். இதற்கானத் திட்டம் பத்தாண்டுகளுக்கு முன்பே உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தொடங்கப்பட்டது. அது என்னவாயிற்று என்று தெரியவில்லை. இனி நிறுவனங்களைச் சாராமல் இணையம் பற்றிய அறிவுள்ள வெளிநாட்டு தமிழறிஞர்கள் இதற்கான முன்கையை எடுக்க வேண்டும்.

**உலகத் தமிழ் இணைய மாநாடுகள் :** 1997 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் பேரா.திரு.நா. கோவிந்தசாமி அவர்களின் பெரு முயற்சியால், முதல் தமிழ் இணைய மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் உலக தமிழ்க் கணினி பேராளர்கள் பலர் கலந்து கொண்டனர். தமிழில் பல தட்டச்சு விசைப் பலகைகள் இருக்கின்றன; பல்வேறு எழுத்துருக்களை பயன்படுத்த பல்வேறு தட்டச்சு விசைப்பலகைகள். தமிழ் இணையம் ஒன்றில் ஓர் எழுத்துருவை பயன்படுத்தி ஒருவர் உருவாக்கி இருப்பார். வேறொருவர் தனது கணினி மூலம் அந்த இணையத்தைப் பார்க்க முடியாது. ஜங் கேரட்டர்களே காணப்படும். அந்த இணையத்தைப் பார்ப்பதற்கு அந்த இணையத்தில் பயன்படுத்தியுள்ள எழுத்துருவை பதிவிறக்கம் செய்து கொண்டு காண வேண்டும். இதன் மூலம் காலவிரயமும் விசைப்பலகை குழப்பமும் ஏற்படும். இவற்றைத் தீர்ப்பதற்காகவும் யுனிக்கோடில் தமிழ் எழுத்துக்களுக்கான இடத்தை ஏற்படுத்துதல் யுனிக்கோடு என்றால் என்ன என்பதை முதலில் தெரிந்து கொள்வோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலகிலுள்ள எல்லா மொழிக்கும் பொதுவான மொழி குறியீட்டு உருவாக்கப்படுகிறது. இதைத்தான் யூனிக்கோட் என்கிறோம். ஆங்கிலத்தில் இதில் பதிவு செய்யும் முறைக்கு ஆஸ்கி (ACII - American Standard Code for Information Interchange) எனவும் அழைக்கப்படுகிறது. இந்திய முறையான ISCII தேவநாகரி எழுத்து வகையைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. எல்லா எழுத்துக்களும் 4 ஒலிப்புகளை யுடையவை. தமிழில் ஒரே எழுத்து பிற எழுத்துக்களோடு சேரும்போது வேறுவிதமான ஒலிப்பை பிறப்பிக்கும் தன்மை யுடையதால் தமிழுக்கு என்று தனிமுறை தேவைப்படுகிறது. தற்போது தமிழுக்கு 128 இடங்களே கொடுக்கப்பட்டுள்ளன. தமிழ் நெடுங்கணக்கில் உளள 247 எழுத்துக்களுக்கும் உரிய இடங்களைப் பெற்றால்தான், யூனிகோட் தரும் அனைத்து வசதிகளையும் பெறமுடியும். Unicode Consortium. த்தில் தமிழ்நாடு அரசு உறுப்பினராக சேர்ந்திருப்பதால் மீண்டும் முறையிட்டு நமக்கான இடத்தை பெற பாடுபட வேண்டும். மேலே கண்டவைகளை முறைப்படுத்த வேண்டும் என்கிற திட்டத்தோடு முதல் இணைய மாநாடு சிங்கப்பூரில் நடந்தது. இதன் பின்னரே தமிழகம் விழித்துக்கொண்டு, இழந்துவிட்ட காலத்தை பிடிக்கும் மும்முரத்தில் 'தமிழ் நெட் 99' என்ற இரண்டாவது மாநாட்டை தமிழ்நாட்டில் தமிழக அரசு நடத்தியது.



www.tamilarangam.net




இம்மாநாட்டில் நடந்த கருத்தரங்கில்

1. 'தமிழ் விசைப்பலகையின் சீரமைப்பு' என்கிற முதல் அமர்வில் திருவாளர்கள். பொன்னவைக்கோ, வி. கிருஷ்ண மூர்த்தி, இராமலிங்கம் சண்முக லிங்கம் போன்றோர் தங்களது கட்டுரைகளை சமர்ப்பித்தனர்.

2. ''தமிழ் எழுத்துக்களுக்கான கணிப் பொறி குறியீடுகளின் ஒருமைப் பாடு'' என்ற தலைப்பில் நடந்த இரண்டாம் அமர்வில் 12 கட்டுகளை சமர்ப்பித்த பேராளர்கள் : நா. கோவிந்தசாமி, கு. கல்யாணசுந்தரம், மு. நெடுமாறன், எம். கணேசன், என். அன்பரசன், மனோஜ் அண்ணாத்துரை, பி. செல்லப்பன், சின்னதுரை ஸ்ரீவாசு, ஜேம்ஸ் செங், கல்யாண கிருஷ்ணன், பி. சந்திரபோசு, செ.ச. செந்தில்நாதன்.

3. 'வருங்கால தமிழ் இணைய வளர்ச்சி' என்ற தலைப்பில் நடந்த மூன்றாவது அமர்வில் 8 கட்டுரை வாசித்தோர் : ஏ.ஜி. இராம கிருஷ்ணன், அரங்கவாசு, சு. சீனிவாசன், சா.அ. சௌரிராசன் முதலியோர்.

இம்மாநாட்டில் இலங்கை, மலேஷியா, மோரிசியஸ், புதுச்சேரி முதலியவற்றை பிரதிபலிக்கும் வகையில் அமைச்சர்கள் கலந்துகொண்டனர். தமிழ் விசைப்பலகை சீரமைக்கப்பட்டது. கணினி தமிழ்ச் சங்கம் உருவானது. கணினிக்கான கலைச்சொல் உருவாக்கம் மேற்கொள்ளப்பட்டது. தமிழ் மென்பொருள், வன்பொருள், பிரிண்டர்களை தரப்படுத்தி சான்றளிக்கும் உரிமை கணித்தமிழ் சங்கத்திற்கு தரப்பட்டு பல்வேறு மென்பொருள்கள் வெளிவந்தது. (ஆஸ்கி, இஸ்கி போல TANCII உருவாக்கப் பட்டுள்ளது) போன்றவை இம்மாநாட்டின் பயன்கள். இதன் விரிவை பின்வரும் கட்டுரைகளில் பார்க்கலாம்.

**சிங்கப்பூர் இணைய மாநாடு**

தமிழ் இணைய மூன்றாம் மாநாடு இலங்கையில் நடப்பதாக இருந்தது. அரசியல் காரணங்களால் தவிர்க்கப்பட்டது. மீண்டும் சிங்கையிலே 'தமிழ் இணையம் 2000' மூன்றாம் மாநாடு நடந்தது. இம்மாநாட்டை சிங்கப்பூர் தகவல் தொழில்நுட்ப மேம்பாட்டு வாரியத்தின் (ஐடிஏ) ஆதரவில் இயங்கும் தமிழ் இணைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ் இணையம் Tamil Internet 2000

**DIRECTIONS TO THE DIGITAL WORLD**

**22 - 24 JULY • SINGAPORE**

ஒருங்கிணைப்புக் குழு (டிஐஎஸ்சி), தமிழ் இணையம் பற்றிய உலகின் மாபெரும் மாநாட்டையும், கண்காட்சியையும் ஜூலை 22 முதல் 24 வரை சிறப்பாக நடத்தியது.

'டிஜிட்டல் உலகுக்கான திசைக்காட்டி' என்னும் கருப்பொருளைக் கொண்ட இம்மாநாட்டு நடவடிக்கைகள் மாநாடு, இணைய வணிகம், சமூக மையங்கள், கண்காட்சி என பல்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

'தமிழ் எழுத்துருக்கள், விசைப்பலகைகளுக்கும் அப்பால்' என்ற தனது தொடக்க உறையை ஆற்றினார். டாக்டர்.மு. ஆனந்தகிருஷ்ணன் எழுத்து சீர்திருத்தம் பற்றி முதல் 2 அமர்வுகளில் 11 கட்டுரைகள் வாசித்த பேராசிரியர்கள் வருமாறு: பேரா.வா.செ. குழந்தைசாமி, வீ.கே. ஏரம்பமூர்த்தி, பகுத்தறிவு, ச.ஆ. கோலமூர்த்தி, முனைவர். கொடுமுடி, சண்முகன், ஆறகழூர். மு. கண்ணன், பி. எல்லப்பன், சு. சீனிவாசன், செ.ச. செந்தில்நாதன், சி. தங்கவேல், பேரா.வி. ஞானசுந்தரம், ந. நவீன்.

''மொழி - கலைச்சொல் உருவாக்கம்'' பற்றி மூன்றாம் அமர்வில் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் டாக்டர் எஸ்.வி. சண்முகம், இராம. சுந்தரம், இராதா செல்லப்பன், ஜீன் லாரன்ஸ், சி.எஸ். சுந்தரமூர்த்தி, இரா. இளவரசு, ஜி. விஜயவேணுகோபால் போன்றோரும் பி. சந்திரசேகர், மு. சிவலிங்கம் உள்ளிட்டோர் 4 கட்டுரைகளை சமர்ப்பித்தனர்.

'யூனிக்கோடில் தமிழை செந்தரப்படுத்துதல்' என்கிற நான்காம் அமர்வில் திருவாளர்கள் வி. கிருஷ்ணமூர்த்தி, ஆண்டோ பீட்டர் முதலியோர் 4 கட்டுரைகளை சமர்ப்பித்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'கணினி தொழில்நுட்பத்தில் தமிழ்' என்கிற 5, 6 ஆம் அமர்வுகளில் 17 கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. கல்வி கற்பிக்க பல்லூடகத்தையும் இணையத்தையும் பயன்படுத்துவது பற்றி நடந்த 7 ஆம் அமர்வில் 8 கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. 'இணையத்தில் தமிழ்' என்ற 8 ஆம் அமர்வில் முனைவர் கு, கல்யாணசுந்தரம், நா. கண்ணன், இராம. கிருட்டிணன், சி. அண்ணாமலை, பா. சதீசு முதலியோர் 4 கட்டுரைகள் வாசித்தனர்.

மின்வணிகம் மற்ற பயன்பாடு பற்றி நடந்த 9 ஆம் அமர்வில் 5 கட்டுரை திரு. ஏ.ஜே. பாலசுப்பிரமணியம், கமலா நாகேந்திரா, சஞ்சீவி சிவகுமார், குந்தார்டு முல்ல முதலியோர் வாசித்தனர்.

சிங்கையில் நடந்த மாநாட்டின் பெறுபேறுகள் என்ன என்பது இனிதான் தெரியும். அடுத்த மாநாடு மலேஷிய நாட்டில் நடக்க இருக்கிறது.

# தகவல் தொழில்நுட்பத்தில் தமிழகத்தின் முன்முயற்சி!

இந்தியாவில் அச்சு ஊடகத்திற்குச் சென்ற முதல் மொழி, 'தமிழ்' என்பதை முன்னரே கண்டோம். அச்சு ஊடகம் தவிர்த்து இணைய உலகிலும், கணினி உலகிலும் தனது பேராற்றல்களை எப்படி வெளிப்படுத்தி வருகிறது என்பதை இத்தலைப்பின் கீழ் தொகுத்துள்ளேன்.

தொழில் வளர்ச்சிக்குத் தேவையானது: கல்வி, கனிவளம், மின்சாரம், தண்ணீர் வசதி, சாலைப் போக்குவரத்து, துறைமுகம், வானூர்தி நிலையம் போன்ற வசதிகளை தமிழகம் பெற்றுள்ளது. பிற மாநிலங்களுக்கு சென்று வந்தால்தான் தமிழகத்தின் வலிவும், வனப்பும் தெரியும்.

தொழிற்புரட்சி ஐரோப்பாவில் நடந்து கொண்டிருந்த சூழலில் இந்தியா ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டுக் கிடந்ததால் நாடு தொழிற் புரட்சியின் பெறுபேறுகளை பெறமுடியாமல் போய்விட்டது. ஆனால் தகவல் தொழில்நுட்ப புரட்சியை இன்றைய தமிழகம் சரியான முறையில் பயன்படுத்திக் கொண்டது. கணினி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழில் கலைஞர்கள் என அழைக்கப்படும் மென்பொருள் வல்லுனர்கள் (Software Professionals) அமெரிக்காவிற்கு அடுத்த படியாக இன்று இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில்தான் அதிகம் உள்ளனர் என்பது ஆய்வாளர்களின் முடிவு. மெயின் பிரேம் கணினித் திறன் (Largest Main frame computing capacity) தமிழ்நாட்டில்தான் அதிகம் உள்ளது என்று நம்பப்படுகிறது. பல்லூடக மென்பொருள் பயன்பாடு (Multimedia Software appllications) அதிகமாகத் தயாரிக்கப்படும் தலைநகராக சென்னை உருவாகி வருகிறது. மென்பொருள் திட்டங்கள் தயாரிப்பதற்கு இந்தியாவில் சிறந்த இடம் சென்னையே என நாஸ்காம் (NASSCOM) 1998 ஆம் ஆண்டில் நடத்திய ஆராய்ச்சி மூலம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. தகவல் தொழில் நுட்பத்திற் கென்று தனிக்கொள்கை வகுத்த முதல் மாநிலம் தமிழகம்தான். 5.10.98 இல் தகவல் தொழில் நுட்பத்துறை உருவாக்கப்பட்டது. 28.11.98 இல் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கு வழிகாட்ட முதல்வர் தலைமையில் மாநில அளவிலான தகவல் தொழில்நுட்ப பணி முனைப்புக் குழு (State Level Task Force on Information Technology) உருவாக்கப்பட்டது.

**கல்லூரி, பள்ளிகளில் கணினி பாடம்**

தமிழ் மென்பொருள் தொழில் மேம்பாடு, பள்ளிகளில் கணினி அறிமுகத்திற்குப் பாடத்திட்டத்தை உருவாக்குதல் முதலியவற்றிற்கு வழிகாண டாக்டர் ஆனந்த கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் துணைக்குழு உருவாக்கப்பட்டுள்ளது.

1999-2000 இல் 666 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினி விருப்பப் பாடமாக்கப்பட்டுள்ளது. இதற்கான பாடப் புத்தகங்கள் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கும் வந்துள்ளது. 2000-2001 இல் எஞ்சிய 532 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும், 60 அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் கணினி பாடப்பிரிவு அல்லாத மற்ற பட்டப்படிப்பு மாணவர்களுக்கு கணினி கல்வி அளிக்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக முதன் முதலில் சென்னையில் உள்ள மாநிலக் கல்லூரியில் அறிமுகப்படுத்தப் பட்டது. இத்திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு 30 ஆயிரம் மாணவர்கள் கம்பியூட்டர் கல்வி பெறுவார்கள். இத்திட்டத்திற்கென ஐந்து ஆண்டுகளுக்கு ரூ.30 கோடி நிதியைத் தமிழக அரசு ஒதுக்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் என்.ஐ.ஐ.டி. நிறுவனம் 48 கல்லூரிகளிலும்; எஸ்.ஆர்.யும். சிஸ்டம் நிறுவனம் 3 கல்லூரிகளிலும்; ரவிச்சந்திரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிஸ்டம் 9 கல்லூரிகளிலும் கம்ப்யூட்டர் மையங்களை அமைத்துள்ளது. அரசு கல்லூரிகளில் 2 ஆம் ஆண்டு பயிலும் மாணவ, மாணவியருக்கு இப்பயிற்சியில் முன்னுரிமை அளிக்கப்படும். தேவைக்கேற்ப மூன்றாம் ஆண்டு மற்றும் முதுநிலை பட்ட வகுப்பில் பயிலும் மாணவர்களும் இப்பயிற்சியில் சேரலாம்.

கணினி பாடப்பிரிவை எடுத்துப் படிக்காத மற்ற மாணவர்கள் கணினி குறித்த அடிப்படை அறிவைப் பெறும் வகையில் இதற்கான பாடத்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. பயிற்சி பெறும் மாணவர்களுக்கு செயல்முறை வகுப்புகள் 90 மணி நேரம் உள்பட, மொத்தம் 150 மணி நேரப் பயிற்சி அளிக்கப்படும். இந்த ஓராண்டு பயிற்சிக்கு ரூ.2 ஆயிரம் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்தொகையை மாணவர்கள் நான்கு தவணைகளில் செலுத்தும் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

இப்பயிற்சியின் இறுதியில் அனைத்துக் கல்லூரிகளுக்கும் பொதுவான தேர்வை நடத்தி, தகுதி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்க கல்லூரிக் கல்வி இயக்ககம் திட்டமிட்டுள்ளது என்று இயக்குநர் திரு.து. விக்டர் தெரிவித்துள்ளார்.

## மென்பொருள் தயாரிப்பிற்கான நிதி

'தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதி' ரூ.5 கோடியில் (Corpus value) 1999 ஏப்ரல் முதல் தொடங்கப்பட்டது. 1990-2000 ஆண்டிற்கு முதல் தவணையாக ரூ.25 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் மின்னணு மூலமாக வாணிகம் வளர்ச்சியுற இந்நிதி உதவும்.

தகவல் தொழில்நுட்பத் தொழிலில் ஈடுபடும் இளைஞர்களுக்கு நிதியுதவி வழங்க சிறப்பு மூலதன நிதி ரூ.2.5 கோடி (Venture Capital Fund) இதுவரை 4 தொழில் முனைவோர்க்கு இதன் மூலம் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

"தமிழ் மென்பொருள்களை உருவாக்குபவர்கள் புதிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ள ஏதுவாக இந்த நிதி அளிக்கப்பட்டது. விண்டோசை தமிழ்ப்படுத்தும் அதாவது, மெனு, டயலாக் பாக்ஸ் போன்றவை தமிழிலேயே இருக்கும். மேம்பட்ட தமிழ் இன்டர்பேஸ், தமிழில் ஆப்டிகல் கேரக்டர் ரெகக்னைஸர், ஸ்பீச் சின்தசைஸர், ஸர்ச் இன்ஜின், தமிழ் புரோகிராமிங் லாங்வேஜுக்கான கம்பைலர், அரசு அலுவலகங்களில் பயன்படுத்தத் தக்க கணிப்பொறி வழி ஆங்கிலம் - தமிழ் மொழிபெயர்ப்பு மென்பொருள் போன்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழை மேம்படுத்தும் ஆராய்ச்சிகளுக்கு இதுவரை நிதி உதவிகள் தரப்பட்டுள்ளது'' என்று தமிழக அரசின் தகவல் தொழில்நுட்ப பணி முனைப்புக் குழுவின் துணைத் தலைவருமான டாக்டர். மு. ஆனந்த கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

**இணைய தமிழ் பல்கலைக் கழகம்**

உலகத் தமிழ் இணையப் பல்கலைக் கழகம் (Tamil Virtual University) டாக்டர் வி.சி. குழந்தைசாமி அவர்கள் தலைமையில். அமைக்கப்பட்டுள்ளது. இதன் இயக்குநராக திரு. பொன்னவைக்கோ செயல்பட்டு வருகிறார். இணையம் மூலமாக தமிழ், தமிழ் பண்பாடு பற்றி வகுப்புகள் எடுக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும். இரண்டாம் கட்ட பாடத்திட்டம் சான்றிதழ் மற்றும் பட்ட வகுப்புகளுக்கான பாடத்திட்டமாக இருக்கும். பாடங்கள் அனைத்தும் உண்மையான வகுப்பறைக்கும், மாணவனுக்கும் உள்ள தொடர்பு போல இருக்கும். இப்பாடங்கள் அனைத்தும் பல்லூடக முறைகள் ஒளி, ஒலி, கிராபிக்ஸ், அனிமேஷன், வீடியோ, பாடல் போன்ற பல்ஊடக முறையில் இணையத்திற்கு ஏற்ற வகையில் அமைக்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்குப் பயன்படும் வகையில், இணைய உலகில் உள்ள மின் நூலகங்கள், மதுரைத் திட்டம், பழனியப்பா பிரதர்ஸ் உருவாக்கிய பால்ஸ் அகராதி போன்றவை பயன்படுத்திக் கொள்ளப்படும் என்றும் திரு. பொன்னவைக்கோ இதழ்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

இணையத் தமிழ் பல்கலைக் கழகத்துக்கு தேவையான பாடத் திட்டங்களை அறிஞர்கள் தயாரிக்கின்றனர். தயாரித்த பாடத் திட்டங்களை கணித் தமிழ்ச்சங்க உறுப்பு நிறுவனங்களிடம் தருகின்றனர். அவர்கள் இணையத்திற்கு ஏற்ற முறையில் நவீன முறையில் பாடங்களை பல்லூடக முறையில் உருவாக்கித் தருகின்றனர். திரு. சௌரிராஜன், திரு. மனோஜ் அண்ணாத்துரை போன்றோர், சில பாடங்களை வடிவமைத்து வருகின்றனர்.

**உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாடு**

*1999* - பிப்ரவரி 7-8 தேதிகளில் சென்னையில், கணிப்பொறியில் தமிழ்மொழிப் பயன்பாட்டை அதிகப்படுத்தும் வகையில் உலக அறிஞர்கள் பங்கு பெற்ற உலகத்தமிழ் இணையக்கருத்தரங்க மாநாடு நடத்தப்பட்டது.

அம்மாநாட்டின் முடிவுகளின்படி, ஒலியியல் அடிப்படையில் தரப்படுத்தப்பட்ட புதிய தமிழ் விசைப்பலகை மற்றும் தமிழ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரிவடிவக் குறியீடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கேற்பத் தயாரிக்கப்படும் வன்பொருள்கள், மென்பொருள்களுக்கு சான்று வழங்கப்பட்டு வருகிறது.

**தமிழகத்தில் தகவல் தொழிற்நுட்ப பூங்காக்கள்**

*11.9.98* இல் தகவல் தொழில் நுட்ப மையம் - டானிடெக் தொடங்கப்பட்டது. இதன் அடுத்த கட்ட வளர்ச்சியாக தமிழகம் முழுவதும் பல தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகிறது.

சென்னையை அடுத்த மாமல்லபுரம், மதுரை, கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய பெருநகரங்களில் தகவல் பூங்காக்கள் அமைய இருக்கின்றன. இதன் பணிகள் 2003 க்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**சென்னையின் டைடல் பூங்கா**

*12* இலட்சம் சதுர அடி பரப்பில் ரூ.*340* கோடி செலவில், சென்னை தரமணியில் "டைட்டல் பார்க்" தொடங்கப்பட்டது. இந்த தகவல் தொழிநுட்ப பூங்கா, தமிழக அரசின் நிறுவனங்களான எலட்ரானிக்ஸ் கார்ப்பரேஷன் ஆப் தமிழ்நாடு (ELCOT) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகம் (TIDCO) ஆகியவற்றின் கூட்டமைப்பில்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உருவானது. இந்த இரண்டு நிறுவனங்களும் இணைந்து பூங்காவில் 26 சதவீதம் பங்கினை வைத்திருக்கின்றன. டைட்டல் பூங்காதான் இந்தியாவிலேயே பெரிய மென்பொருள் உருவாக்க மையமாக கருதப்படுகிறது. பூங்கா அமைப்பு: 10.2 இலட்சம் சதுர அடியில் ரூ.338 கோடி செலவில் 12 அடுக்கு மாடி கட்டிடம், ஹைதராபாத்தில் உள்ள "ஹைடெக் சிட்டி'யை விட மூன்று மடங்கு பெரியது. இந்த பூங்காவை அமைக்க தமிழக அரசு கான்ட்ராக்ட் மேலாளர்களை நியமித்தது. ஹுண்டாய், எல் அண்ட் டி மற்றும் இந்திய வங்கிகளிடம் இருந்து ரூ.42 கோடி திரட்டப்பட்டது. நிலுவைத் தொகையினை தமிழக அரசு உதவியுடன் பத்திரங்கள் மூலமும் திரட்டப்பட்டன.

டைட்டல் பூங்காவுக்கென்று தனியாக ஒரு 12.5 மெகாவாட் மின் உற்பத்தி ஆலை, 2000 தொலைபேசி லைன்கள் கொண்ட தொலைபேசி எக்ஸ்சேன்ஜ், சாப்ட்வேர் டெக்னாலஜி பாக்ஸ் ஆப் இந்தியா அமைப்பின் எர்த் ஸ்டேஷன் உதவியுடன் இன்டர்நெட் மற்றும் பிற தகவல் போக்குவரத்திற்கான வி.எஸ்.என்.எல். எர்த் ஸ்டேஷன், ஹெல்த் க்ளப், ஷாப்பிங் மையங்கள், 2,500 கார்களை நிறுத்தக்கூடிய பார்க்கிங் பகுதி, வங்கிகள், 24 மணி நேர பாதுகாப்பு, அதிநவீன கட்டிடப் பராமரிப்பு வசதிகள் இத்தனையும் இருக்கின்றன.

டைட்டல் பூங்காவின் ஒவ்வொரு தளமும் 90,000 சதுர அடி உள்ளது. ஒவ்வொரு தளத்திலும் 18,500 சதுர அடி கொண்ட இரண்டு அலுவலகப் பரப்புகள் இருக்கின்றன. நடுப்பகுதியில் 14,500 சதுர அடி கொண்ட இரண்டு அலுவலகப் பரப்புகள் இருக்கின்றன. இன்னொரு சிறு பகுதியில் 6,000 சதுர அடி கொண்ட நான்கு இடங்கள் இருக்கின்றன. இரண்டு தளங்களில் பொது வசதிகள் இருக்கின்றன. 12 தளங்களில் 8 ஒன்றுடன் ஒன்று இணைக்கப் பட்டவை. பூங்காவுக்கான 8 ஏக்கர் நிலத்தில் இந்த கட்டிடம் மூன்றில் ஒரு பங்கு. பூங்காவின் வெளிப்பகுதியே 10 ஏக்கர் இருக்கிறது. டைடல் பூங்காவை பராமரிக்கும் வேலையை அனுபவமுள்ள நிறுவனத்திடம் விடப் போகிறார்கள். இதற்கான சர்வதேச டெண்டரும் விடப்பட்டுள்ளது.

பூங்காவின் கீழ்த்தளங்களில் பளிங்கு கல்சுவர் அமைத்திருக் கிறார்கள். மேல் பகுதியில் கொரியாவில் செய்யப்பட்ட நீல அலுமினியம் பேனல்களை வேய்ந்திருக்கிறார்கள்.

டைடல் பூங்காவில் 200 கி.மீக்கு மின்சார பைப்கள். இங்கே இருக்கும் ஏர்கண்டிஷனிங் ஆலைதான் இந்தியாவின் மூன்றாவது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெரிய அனல் சக்தி நிலையம். இதில் 12 ஏ.சி. இயந்திரங்கள் இருக்கின்றன. இங்கே 19 லிப்ட்டுகளும் இரண்டு எலிவேட்டர்களும் உண்டு. கடந்த 16 மாதங்களில் இந்தியாவில் பல மாநிலங்களைச் சேர்ந்த 18 பேரின் காண்ட்ராக்டில் சுமார் 6,000 பேர் இதற்காக வேலை செய்திருக்கிறார்கள். ஹூண்டாய் நிறுவனம்தான் காண்டிராக்ட் மேனேஜராக இருந்தது.

ஒண்ணேகால் ஆண்டிற்குள் கட்டி முடிக்கப்பட்டிருக்கும் இப்பூங்காவை 4.7.2000 அன்று பிரதமர் வாஜ்பேய் திறந்து வைத்தார்.

**சாப்ட்வேர் நிறுவனங்கள்**

டைட்டல் பூங்காவின் தங்களுக்கான பகுதிகளைப் பிடிக்க பெரும் நிறுவனங்கள் போட்டி போட்டு இடத்தைப் பிடித்துள்ளன. சத்யம் இன்ஃபோவே, பெண்டா மீடியா, டி.ஏ.எஸ்.டி. இண்டியா லிமிடெட், ஐ.ஆர்.டி.ஏ., நெக்ஸ்ட் செட் இண்டியா, ஷட்டில் டெக்னாலஜீஸ் போன்ற பெரிய நிறுவனங்கள் 64 சதவீத இடத்தைப் பிடித்துள்ளன.

90 ஆயிரம் சதுர அடியில் முழுதளத்தையே எடுத்துக் கொண்டுள்ளது போர்டு மோட்டார் நிறுவனம். இந்தியா மற்றும் ஆசியா - பசிபிக் நாடுகளுக்கான தனது புதிய தகவல் தொழில்நுட்ப மையத்தை நிறுவுவதற்காக சென்னையை தேர்வு செய்துள்ளது. இதன் மூலம் 200 கோடியை இங்கு முடக்க உள்ளது. இதன் மூலம் தொடக்கத்தில் 600 மென்பொருள் தொழிலியற்றுனர்களுக்கும், முழுமையடையும்போது 2,500 பேருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும். 10 இலட்சம் சதுர அடி கொண்ட டைட்டல் பூங்கா, முழு நிலப் பரப்பினையும் 4 மாதங்களில் அமெரிக்க, இந்திய, ஐரோப்பிய நாடுகள் பயன்படுத்திக் கொள்ளும் என்று தெரிகிறது.

**சென்னை - கேளம்பாக்கம் தகவல்சாலை**

சென்னையிலுள்ள தரமணி தொடக்கம், கேளம்பாக்கம் முடிய உள்ள சாலையை 'தகவல் நெடுஞ்சாலை' என்று வருங்காலம் அழைக்கும். இந்த 'சைபர் காரிடார்' இந்த சாலை நெடுக டி.சி.எஸ். சோலாரிஸ், விப்ரோ, பெண்டா மீடியா ஆகியவை இங்கு வளர்ந்து வருகின்றன. மேலும் பல நிறுவனங்கள் தங்களுக்கான இடத்தைப் பிடித்து வருகின்றன. ஒரு ஏக்கரின் விலை ரூ.13 இலட்சமாம்.

'விப்ரோ டெக்னாலஜி'யின் இரண்டாவது மென்பொருள் உருவாக்க மையத்தை முதல்வர் திறந்து வைத்தார். தற்போது ரூ.30



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோடியில் உருவாக்கப்பட்டுள்ள இவ்விரிவாக்கத் திட்டத்தின் முழுப்பணிகளும் ஒன்றரை ஆண்டுகளில் முடிவடையும். அப்போது இத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூ.150 கோடியாக இருக்கும் என இந்நிறுவனத்தின் தலைவர் அஜிம் பிரேம்ஜி தெரிவித்துள்ளார். இதன் மூலம் மென்பொருள் ஏற்றுமதி அதிகரிப்பது மட்டுமல்லாமல் சுமார் 3000 மென்பொருள் வல்லுனர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும்.

சென்னை அடுத்த சிறுசேரியில் கிராமத்தில் 1000 ஏக்கரில் டைட்டல் பூங்காவைப் போன்றே மிகப்பெரிய தகவல் தொழில் நுட்பப் பூங்காவை தமிழக அரசு ஏற்படுத்தி வருகிறது. தகவல் தொழில்நுட்பத் தொழில்களைத் தொடங்குவதற்கான மேம்பட்ட கட்டமைப்பு வசதிகளை அப்பூங்கா வழங்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

**கோவை தகவல் பூங்கா**

எல்காட் நிறுவனம் கோவை பாரதியார் பல்கலைக் கழகத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது. பாரதியார் பல்கலைக் கழக வளாகத்திற்குள் 100 ஏக்கர் பரப்பில் தகவல் பூங்காவை அமைக்கும். கோவை பி.எஸ்.ஜி. தொழில்நுட்பக் கல்லூரி அறிவியல் - தொழில்நுட்பத் தொழில் முனைவோர் பூங்காவில் ஒரு ஏக்கரில் தகவல் பூங்காவை ரவிச்சந்திரா சிஸ்டம்ஸ் அண்ட் கம்பியூட்டர் சர்வீசஸ் அமைக்க இருக்கிறது. சென்னையிலுள்ள எஸ்.டி.பி.ஐ. முக்கிய நகரங்களில் யர்த் ஸ்டேஷன்களை அமைக்கப் போகிறது. அது கோவையில் ஒரு புவி மையத்தை அமைத்திருக்கிறது. மிக விரைவில் மதுரை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் அமைக்க உள்ளன. இதன் மூலம் மேலும் பல இடங்களுக்கு தகவல் பூங்காக்கள் விரிவடையும்.

**மென்பொருள் ஏற்றுமதி**

1999-2000 ஆண்டுகளில் ரூ.1914 கோடி. தமிழகத்தின் ஏற்றுமதி சாதனை குறித்து 7.2.2000 எகனாமிக்ஸ் டைம்ஸ் "Exports in Tamilnadu" என்ற கட்டுரையில்

"Tamilnadu is one of the highly industrialised state of our country and is a major contributor to the country's exports. .... Chennai has now became an important base for global software majors, as the city has the necessary infrastructure with adequate man power"

எனத் தெரிவித்துள்ளது.

www.tamilarangam.net









தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**Government**
Governor
Council of Ministers
Members of Parliament
Members of Legislative Assembly
Secretaries to Govt.
District Collectors
Policy Notes
GOs of Public Interest
Information & Publicity
Budget 2000 - 2001
IT Initiatives in TN

What's NEW

TN Transparency in Tenders Act & Rules
Elections
High Court Cause List

**Services**
Citizens Charter
Public Utility Forms
TenderNotices/Displays
Telephone Directory
Employment Exchange
Weather Watch

**Profiles**
TN at a Glance
TN Economy
Statistical Handbook
History of Secretariat
Districts of TN
TN Maps
Universities in TN

**Others**
Links
E-Mail Directory
Public Holidays for 2001
Tourist Guide
Places of interest
Font Download
Search
Feedback
Home

# தமிழ்நாடு அரசு
## அன்புடன் வரவேற்கிறது

# Government of Tamil Nadu
## Welcomes You



Last updated on Saturday, December 16, 2000 .
Designed and maintained by National Informatics Centre
Email: webadmin@tn.nic.in

(Best Viewed on IE at 800x600)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1996 மே மாதத்திற்கு முன் தமிழகத்தில் இருந்த மென்பொருள் நிறுவனங்கள் 34 மட்டுமே 1996 க்குப் பின் 562 மென்பொருள் நிறுவனங்கள் புதிதாக தொடங்கப்பட்டுள்ளன. தற்போது 596 நிறுவனங்கள் உள்ளன. இதுபோன்றே மென்பொருள் ஏற்றுமதியிலும் வளர்ச்சியின் விகிதத்தைக் காண்க :

| | |
|---|---|
| 1995-96 இல் | 37 கோடி |
| 97-98 இல் | 393 கோடி |
| 98-99 இல் | 1,246 கோடி |
| 99-2000 இல் | 1,914 கோடி |

(As per the data given by the Director, STPI, Chennai in The Hindu dated 15th May 2000)

**அரசு அலுவலகங்களில் கணினி மயமாக்கம்**

தமிழக அரசு அரசு அலுவலகங்களில் கணினி மயப்படுத்தும் திட்டத்தை கடந்த நான்கு ஆண்டுகளாக செயல்படுத்தி வருகிறது. சென்னையிலுள்ள தலைமைச் செயலகம் கணினிமயப்படுத்தப் பட்டுள்ளது. விற்பனை வரி, நிலப்பதிவு, ஆர்.டி.ஏ. உள்பட பல அரசு ஆவணங்கள் கணினிமயப்படுத்தப்பட்டுள்ளன. காவல்துறை, நீதித்துறையும் கணினிமயப்படுத்தப்பட்டுள்ளன. தமிழக அரசின் வாரியங்கள், துறைகளுக்கு இணைய பக்கங்களை அரசு உண்டாக்கி இருக்கிறது. தமிழக அரசுக்கான பொதுவான இணைய முகவரி www.tn.gov.in என்பது. இது தவிர வேளாண்மைத்துறை, மின்சாரம், சுற்றுலா, கனிம வளம், எல்காட், தமிழக பல்கலைக்கழகங்கள், அரசு தேர்வாணையம், போக்குவரத்து காவல்துறை முதலியவற்றுக்கும் இணையப் பக்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| தமிழக அரசு | www.tn.gov.in |
| மின்சாரம் | www.tneb.org |
| மாநகர குடிநீர் | www.chennaimetrowater.com |
| சுற்றுலா | www.tamilnadutourism.com |
| தேர்வாணையம் | www.tnpsc.com |
| போக்குவரத்து | www.chennaitrafficpolice.com |
| தொழில் பூங்கா | www.itchennai.com |
| நிதி | www.tamilnadu investment.com |
| கனிம வளம் | www.tamingranites.com |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | |
|---|---|
| எல்காட் | www.elcot.com |
| பூம்புகார் | www.poompuhar.com |
| பல்கலைக்கழகம் | www.tn.univ.ac.in |
| | www.mse.tn.nic.in |
| | www.cmdachennai.com |

தமிழ்நாட்டில் இருக்கும் 17,240 கிராமங்களில் 16,852 கிராமங்களில் கணினியில் தகவல் பதிவு இருக்கிறது. 206 வட்டங்களில் 50 வட்டங்களுக்கு ஏற்கனவே கணினி வசதி இருக்கிறது. மற்ற வட்டங்களுக்கும் இந்த ஆண்டு முடிவில் அந்த வசதியைக் கொண்டுவர அரசு திட்டமிட்டிருக்கிறது. தமிழக அரசு 25 துணைப் பதிவாளர் அலுவலகங்களை கணினி மயமாக்கியிருக்கிறது. இந்த ஆண்டு முடிவில் இன்னும் 250 துணை பதிவாளர் அலுவலகங்களை கணினிமயப் படுத்திவிடுவதாகத் திட்டம். எல்லா அலுவலகங்களிலும், தமிழ், ஆங்கிலம் என இரண்டு மொழிகளிலும் தகவலை பதிவு செய்யும் வசதி இருக்கிறது. திருவாரூர், திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் முழுமையாக கணினி மயப்படுத்தப்பட்டிருக்கிறது. எ.கா. திருவாரூர் மாவட்ட இணைய தளத்தைச் சென்று பார்த்தால் ஒவ்வொரு தலைப்புக்கும் ஒவ்வொரு மென்பொருளை பயன்படுத்தி இருக்கின்றனர். பத்திரப் பதிவு, பிறப்பு, இறப்பு சான்றிதழ், சாதிச்சான்றிதழ், மனுநீதி, கோட்ட ஆட்சி, வட்டாரப் போக்குவரத்து, சமூகநலத்துறை, நுண்கடன் நிர்வாகம், விவசாயக் கூட்டுறவு, வறுமைக் கோட்டுக்கு கீழிருப்போர், பள்ளி மாணவர்களுக்கான உதவித்தொகை என பல தலைப்புகளில் பிரிக்கப்பட்டு காட்சி தருகிறது. இதன் மீது வரும் விண்ணப்பங் களுக்கு உடனுக்குடன் பதிலும் தருகின்றனர்.

## தமிழ்நாடும் இணையமும்

இந்தியாவில் இணைய பயனீட்டாளர் வரிசையில் தமிழகம் மூன்றாம் இடத்தில் இருக்கிறது. தமிழ்நாட்டில் 2,14,178 இணை இணைப்புகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதில் சென்னையில் மட்டும் சரிபாதியாக 1,12,000 இணைப்புகளை பயன்படுத்து கின்றனர்.

இணையத்தின் வேகம் தற்போது குறைவாகவே இருக்கிறது. இதை மாற்றுவதற்காக தமிழக அரச, மாநிலம் முழுவதும் ஒளியழை தடங்கள் அமைக்க வேர்ல்டெல் நிறுவனத்துடன் 1998லேயே கையொப்பமிட்டது. இதற்கான பணி 2001 மார்ச்சுடன்

www.tamilarangam.net

முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் பின்னர் இணையத்தின் வேகம் அதிகரிக்கும். இணைய இணைப்புக்களும் பார்வையாளர்களும் பெருக இருக்கின்றனர். அதற்கு மேலும் ஒரு காரணம் இணைய இணைப்பை தொலைபேசி வாயிலாகப் பெறுவதைக் காட்டிலும், கேபிள் டிவி வழியாக வரப்போகிறது. இதன் அடுத்த கட்டமாக கேபிள் டிவியும் போய், சிறிய டிஷ் ஆண்டனாக்களை சன்னலில் பொருத்துவதன் மூலம் இணைய இணைப்பு பெறலாம். அது 2004இல் நடக்கலாம். கேபிள் டிவி மூலம் இணைய இணைப்பு வரும்போது சாதாரணமாக தொலைக்காட்சிப் பெட்டியே மானிட்டராகவும், விசைப்பலகை அதனுடன் இணைத்துக் கொள்ளும் முறை வந்துவிடும். அப்போது தொலைக்காட்சி பார்வையாளர்கள் பல லட்சம் பேர் இணைய பார்வையாளர்களாக மாற இருக்கின்றனர்.

தமிழகம் தகவல் தொழில் நுட்பத்தில் முன்னேறுவதைக் கண்ட பிற மாநில தொழில் அதிபர்கள் பலர், தமிழில் இணையத்தை தொடங்கி இருப்பதை வைத்து உணரலாம். தமிழ்நாட்டில் நாளுக்கு நாள் புதிய இணையத்தளங்களும், இணைய பக்கங்களும், இணைய உலா மையங்களின் எண்ணிக்கையும் உயர்ந்துகொண்டே இருப்பதன் மூலம் இணைய வளர்ச்சியை அறியலாம்.

“தமிழகம், இந்தியாவுக்கு மட்டுமல்ல ஆசியாவுக்கே இணைய வாசலாக ஆகப்போகிறது” என்கிற கருத்தை தனது Information Technology in Tamilnadu by Hardward Institute for International Development, Harward University என்ற ஆய்வில் நிருபம் பாஜ்பேய், நவி ராட்ஜுட்டும் தெரிவித்திருக்கின்றனர். தமிழர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

### தமிழ் மென்பொருள்களின் தோற்றமும் வளர்ச்சியும்

தமிழகத்திலிருந்து வேலை வாய்ப்பைத் தேடி மேலை நாடுகளுக்குச் சென்ற தமிழர்கள், தங்களுக்குக் கிடைத்த ஓய்வு நேரங்களில் ஆங்கிலத்தைப் போலவே தமிழையும் பயன்படுத்த முடியும் என்று யோசித்த வேளையில் கிடைத்தவையே தமிழ் மென்பொருள்கள். இவை பலரால் உருவாக்கப்பட்டு, பலருக்கும் இலவசமாக தந்து பயன்படுத்தப்பட்டு அவற்றின் குறை களைய, புதிய மென்பொருள்கள் பல உருவாகி இன்று நாம் காணும் அழகிய பல எழுத்துருக்கள் உருவாகி வந்துள்ளன. தொடக்க காலங்களில் தொடர்புகளுக்கு மட்டும் உருவாக்கப்பட்ட இம்மென்பொருள்கள் பின்னர் இன்று வணிக ரீதியிலும் பெரும் வெற்றி பெற்று வருகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கனடாவைச் சேர்ந்த ஸ்ரீனிவாசனின் 'ஆதமி' என்ற மென்பொருள்தான் CPM-80 கணினிகளுக்காக 1984 இல் அறிமுகப்படுத்தினார். இதன் சமகாலத்தில் மலேஷியாவிலும், சிங்கப்பூரிலும் தமிழுக்காக வேர்ட் ப்ராசசிங் சாப்ட்வேர் எழுதுவதில் சிலர் முயன்றனர். அவர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள் ரவிந்திரன் கோபாலின் 'துணைவன்', முத்துக்கிருஷ்ணனின் 'பாரதி', நா. கோவிந்தசாமியின் 'கணியன்', முரசு நெடுமாறனின் 'முரசு' போன்றவை.

அமெரிக்காவில் இருந்த டாக்டர் வாசுரங்கநாதன் PCTAMIL, புலவன் ஆகிய மென்பொருளை டாஸ் அடிப்படையிலான பர்சனல் கணினிகளுக்காக உருவாக்கினார். பாலா ஸ்வாமிநாதனின் 'மதுரை', ஞானசேகரன் ஸ்வாமிநாதன் எக்ஸ் விண்டோ சிஸ்டங்களுக்காக XTamil, Lib Tamil ஃபாண்ட் ஃபேமிலிகளை உருவாக்கினார். இணையத்தில் தமிழ் பயிற்றும் அமெரிக்கரான டேவிட் ஷிப்மெனின் Washigton Tamil, இதையடுத்து அமெரிக்காவைச் சேர்ந்த டி. கோவிந்தராஜ், மெக்கின்டாஷுக்காக 'பல்லடம்' என்ற தமிழ் பான்டை உருவாக்கினார்.

மலேஷியாவின் சிவகுருநாதன் சின்னையா உருவாக்கிய 'நளினம்', சிங்கப்பூரைச் சேர்ந்த கலைமணியின் 'தாரகை' ஆகியவை முக்கியமானவை.

தொண்ணூறுகளின் தொடக்கத்தில் மின்னஞ்சல் மூலமாக முனைவர் திரு. குப்புசாமி கல்யாணசுந்தரம் அவர்களின் மயிலை, முத்து நெடுமாறனின் 'இணைமதி', கணியன் திரு.நா. கோவிந்த சாமியின் Tamil fix போன்றவை இலவசமாக விநியோகிக்கப்பட்டன. இதனிடையே முரசு நெடுமாறன் தனது முரசு மென்பொருளை பரவலாக்கினார். அதுசமயம் திரு. பாலா பிள்ளையின் தமிழ்-நெட் இணையம் மூலம் மெய்லிங் லிஸ்ட் மூலம் இலவசமாக வழங்கப்பட்டு இன்று உலகெங்கிலும் பரவலாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

பெரும் நாளிதழான 'தினபூமி' முதன் முதலாக இணையத்தில் நுழைந்தது. அது மயிலை பாண்டை பிரபலப்படுத்தியது. இணைமதியை விகடன் பரவலாக்கியது. இன்று இளங்கோ தமிழ் 2000, பதமி, கம்பன், இன்ஸ்கிரிப்ட், தமிழ் 2000, சுவிதா தமிழ் சொல்லாளர் போன்ற பல மென்பொருள்கள் உள்ளன.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித்துறைப் பேராசிரியர் முனைவர் ந. தெய்வசுந்தரம் அவர்களின் கணினித் தமிழ்மொழியியல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆய்வின் அடிப்படையில் முப்பதுக்கும் மேற்பட்ட கணித்துறை வல்லுனர்களின் கூட்டுழைப்பில் 'சுவிதா தமிழ்ச் சொல்லாளர்' உருவாக்கப்பட்டுள்ளது. இதில் ஆங்கிலத்தில் உள்ள MS-Word, Word Perfect, Wordstar ஆகியவற்றிற்கு இணையான ஒரு தமிழ்ச் சொல்லாளர்; எழுத்துரு (Fonts), தொகுப்பாளர் (Editor), மொழி ஆளுநர் (Language Tools) ஆகியவற்றை ஒருங்கே கொண்ட மென்பொருள். கணினியில் தமிழைச் சொல்லாளர் பயன்பாட்டுக்குப் பயன்படுத்தத் தேவையான அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய மென்பொருள்; தமிழ் மூலமே - ஆங்கிலத்தின் உதவி ஏதுமின்றி, கணினியில் தமிழைப் பதிப்பிக்க உதவும் மென்பொருள்; சொல் திருத்தி, சந்தித் திருத்தி, இலக்கணத் திருத்தி, தமிழ்-ஆங்கில அகராதி, இணைச்சொல் அகராதி, எதிர்சொல் அகராதி, ஐயஒலிச்சொல் அகராதி ஆகியவற்றை உள்ளடக்கியது; தமிழ் மூலமே மின்னஞ்சல் அனுப்பும் வசதி அடங்கியது; இணையத்தைத் தமிழ் மூலமே பயன்படுத்த உதவும் இணையத்தள உதவியாளரை (Web Browser) கொண்டது. தமிழக அரசு பரிந்துரைத்துள்ள தமிழ் எழுத்துருவிற்கான ASCII மதிப்புகளையும், விசைப் பலகை அமைப்புகளையும் பின்பற்றியது. விண்டோஸ் 95/98/NT தளத்தில் செயல்படக் கூடியது.

தொடர்புக்கு : Suvita@md3.vsnl.net.in

**கம்பன் 3.0 தமிழ்சொல் செயலி**

11 விதமான எழுத்து வடிவங்கள் : தமிழ் 99 புது விசைப்பலகை (Tamil 99) மற்றும் தட்டச்சு விசைப்பலகை; மின்அஞ்சல் வசதி, 280 இந்திய பண்பாட்டு வண்ணப் படங்கள்; தமிழ்/ஆங்கில பிழை திருத்தி; இணையத் தளங்களை உருவாக்கும் HTML Convert வசதி; தமிழ்/ஆங்கில பட்டியல்கள் (Menus); இந்த மென்பொருளுடன் திருக்குறள், திருப்பாவை, பாரதியார் பாடல்களையும் வழங்கு கிறார்கள். திருமணம், காதணி, புதுமனை வாழ்த்து அட்டைகளும் உண்டு.

ஜி.கே.எஸ். ஆர். குருப்ஸின் 'வானவில்'; மாடுலர் சிஸ்டம்ஸித்தின் 'டைனமிக் பான்ட்கள்' போன்றவையும் தற்கால கணினி உலகில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளன.

தமிழக அரசின் தரநிர்ணய சான்றிதழ் பெற்ற பத்து மென்பொருள்கள் பின்வருமாறு :

1. விப்ரோ ப்ரோலைன் பி500 லைன் மாட்ரிக்ஸ் பிரின்டர்,
2. விப்ரோ எல்க்யூஎல் 18 + டாட்மாட்ரிக்ஸ் பிரிண்ட்டர்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

3. இளங்கோ TAM/TAB பான்ட்டுகள், 4. விப்ரோ ப்ரோலைன் TAM/ TAB ஃபாண்ட்கள், 5. பொன்மொழி பதிப்பு 2, 3 6. இன்ஸ்கிரிப்ட் தமிழ் 2000, 7. பதமி 2.0, 8. டி.வி.எஸ்.இ. கோல்ட் தமிழ் கீ போர்டு, 9. இளங்கோ ஆபீஸ் 2000 தமிழ் பான்டுகள், 10. கலைஞர் 99 சொல்லாளர்.

# கணித்தமிழர்கள்



**பேராசிரியர் நா. கோவிந்தசாமி**

சிங்கப்பூர் தமிழர். இணையத் தமிழர் வரிசையில் முதலில் வைத்து எண்ணத் தக்கவர். இவருடன் எனக்கு 87 ஆம் ஆண்டு தொடர்பு ஏற்பட்டது. தனது புதிய விசைப்பலகையை செய்வதற்காக பெங்களூர் செல்வதற்கு முன் எனக்கும், பழநிபாரதி அவர்களுக்கும் மாரீஸ் ஹோட்டலில் பேட்டி கொடுத்தார். கணியன் மென்பொருள் பற்றியும், விசைப்பலகையைப் பற்றிய அவரது பேட்டி அப்போது வெளிவந்து கொண்டிருந்த 'தாய்' வார இதழில் வெளிவந்தது.

முதன் முதலில் தமிழை இணையத்தில் ஏற்றிய பெருமையைச் சிங்கப்பூருக்குத் தேடித் தந்தவர். 1995 இல் 'Journey' என்னும் சிங்கப்பூர் கவிதைத் தொகுப்பின் தமிழ்க் கவிதைகளை 'போயம்வைப்' மூலம் இணையத்தில் ஏற்றியவர். 1997-ஆம் ஆண்டு ஏப்ரல் 1ந் தேதி 'கணியன் காம்' தொடங்கியவர். உலகத் தமிழ் கணினி பேராளர்கள் பலர் கொண்டு கொண்ட முதல் அனைத்துலக தமிழ் இணைய மாநாட்டை 1997 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் நடத்தியவர்.

1989ல் 'IE-keyboard' என்னும் புதிய தட்டச்சு வடிவமைப்பை இவர் உருவாக்கினார். இன்று சிங்கையிலும் மலேயாவிலும் பலரால் பயன்படுத்தப்படும் தட்டச்சு முறை இது. பின் தேசிய பல்கலைக் கழக கணினித் துறையுடன் இணைந்து 'கணியன்' என்ற மென் பொருளை உருவாக்கினார். நல்ல இலக்கியவாதியாகவும் திகழ்ந்தவர். 'அன்புக்கப்பால்' என்ற நாடகத்தின் மூலம் நாடக ஆசிரியரும் ஆவர். 'தேடி' என்ற இவரது சிறுகதைத் தொகுப்பு 1992-ஆம் ஆண்டு தேசிய புத்தக மேம்பாட்டுக்கழகத்தின் விருது கிடைத்தது. 1992-ஆம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆண்டு சிங்கப்பூர் தமிழ்ச்சிறுகதைகளை தொகுத்து வெளியிட்டார். Fiction of Singapore (1990) Asian Drama Anthology ஆகிய தொகுப்புகளுக்கு தமிழ்ப் பிரிவுக்கு ஆசிரியராக பணியாற்றி இருக்கிறார்.

சிங்கப்பூரில் 18.4.4ல் பிறந்த திரு.நா. கோவிந்தசாமி, கல்விபயின்று தமிழாசிரியரானார். பின்னர் சிங்கப்பூர் தேசிய கல்விக் கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றி வந்தார். இவருக்கு 2 மகன்கள் உள்ளனர்.

1999-ஆம் நடந்த இரண்டாவது தமிழ் இணைய மாநாட்டில் தமிழ் விசைப்பலகை தரப்படுதல், யூனிக்கோடில் தமிழ் இடம் பெறுதல் போன்ற நிகழ்வுகளைக் கண்டு பெருமிதப்பட்டு கண்கள் பனிக்க அவராற்றிய உரை எல்லோர் மனங்களிலும் இடம் பெற்றது. சென்னை மாநாட்டிற்கு வந்து சென்ற சில மாதங்களுக்குள் தனது 53ஆம் வயதில் மே ஆறாந்தேதி ஜோகூரில் மாரடைப்பில் காலமானார்.

1940-களில் சிங்கப்பூரில் உள்ள புகித் தீமா என்ற பகுதியில் 'பகத்சிங்' என்ற பெயரில் தமிழ்பள்ளி தொடங்குவதற்கு இடம் கொடுத்ததற்காக பல இன்னல்களை சந்தித்தவர் அவரது தந்தை என்ற செய்தி மூலம் தமிழ்ப்பணி என்பது அவர் பரம்பரையாக பெற்றது என்பதை அறிய முடிகிறது.

### திரு.கு. கல்யாணசுந்தரம்



தமிழ் இணைய முன்னோடிகளில் ஒருவரான குப்புசாமி கல்யாணசுந்தரம் அவர்கள், தமிழுக்கான மென்பொருளை உருவாக்கிய ஒருவர். இவருடைய "மயிலை ஸ்ரீ" மென்பொருளை பல இதழ்களும், இணையங்களும் பயன்படுத்தி வருகின்றன. தமிழ் இணைய வளர்ச்சிக்கு உதவும் வகையில் இணைய மாநாடுகள் எல்லாவற்றிலும் கலந்து கொண்டு, இணையத்தில் தமிழ் மொழிக்கென பொது எழுத்துக் குறியீடு உருவாக்குவ்து பற்றி தனது கருத்துக்களை ஆணித் தரமாக வைத்து, பல ஆலோசனைகளை அளித்து வருகிறார். 'மதுரைத் திட்டம்' தமிழ் இலக்கியம் முழுவதையும் இணையத்தில் பதிவு செய்யும் திட்டத்தில் திரு. குமார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மல்லிகார்ச்சுனாவுடன் இணைந்து, தலைமையேற்று செயல் படுத்தி வருகிறார். இதுதவிர தமிழ் தளங்களை தொகுத்து வகைப்படுத்தி இருக்கிறார்.



**திரு. முத்துநெடுமாறன்**

இணையத் தமிழ் வளர்ச்சிக்கு உதவும் வகையில் ‘முரசு’ மென்பொருளை உருவாக்கியவர். இவருடைய மென் பொருளை பல இணைய இதழ்களும், இணையங்களும் பயன்படுத்தி வருகின்றன. ‘இவருடைய’ முரசு அஞ்சல், தமிழ் எழுத்துக்களை டைப் செய்ய ஒரு ரோமன்/ஒலிபெயர்ப்பு முறையை விசைப் பலகை வடிவமைப்பு வகையாக பயன் படுத்துகிறது. இவர்களுடைய எழுத்துரு ‘இணைமதி’. திரு. பாலா பிள்ளையுடன் இணைந்து தமிழ்நெட் மெய்லிங் லிஸ்ட்டை உருவாக்கி உலகத் தமிழர்களிடம் தொடர்பை உருவாக்கினார். தொண்ணூறுகளுக்கு முன்பே தனது மென்பொருளை இலவசமாக விநியோகித்து, கணினியில் தமிழ் பயன்பாட்டை பெருக்கியதில் இவருடைய தொண்டு நிறைய. இவருடைய இணைய பக்கத்தில் மலேசிய கவிதைகளின் தொகுப்பைக் காணலாம். இணைய உலகில் சரிபாதிப் பேர் இவருடைய பான்டுகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இணைய முகவரி : www.murasu.com

மின்னஞ்சல் : grn@murasu.com

**தமிழ் கம்பியூட்டர் க. ஜெயகிருஷ்ணன்**

தமிழ் ஓர் அறிவியல் மொழிதான் என்பதை ‘தமிழ்க் கம்பியூட்டர்’ இதழ் மூலம் நிரூபித்தவர். கணினிக்கு ஆங்கிலத்தில் மட்டுமே இதழ் வந்துகொண்டு இருந்த நேரத்தில், இந்திய மொழிகளில் முதன் முதல் கணினிக்காக தமிழில் இதழைக் கொண்டு வந்தவர் என்ற பெருமை இவருக்கே உண்டு. கணினி, இணையம், குறுவட்டு, மென்பொருள் போன்ற பல கணினித்துறை சார்ந்த அறிவியல் படைப்புகளையும் எளிய முறையில் எல்லோரும் அறியும் வகையில் இதழை கொண்டு வந்தவர். கணினித்துறை பற்றி தமிழில் எழுதும் பலரை உருவாக்கியது மட்டுமல்லாமல், தனது வளர்தமிழ் பதிப்பகம் மூலம் டிடிபி, சிமொழி போன்ற கணினி நூற்களையும் வெளியிட்டுள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவர் முகவரி : தமிழ் கம்பியூட்டர் 8, அஜீஸ் முல்ச் சந்து, சென்னை-6.

**இன்தாம் சா.அ. சௌரிராஜன்**

'உலகத் தமிழர் தன்முனைப்பு இயக்கம்' என்ற அமைப்பின் இணையமான www.intamn.com இணையத்தின் இயக்குநர். தமிழகம் முழுவதும் சென்று இணையப் பயன்பாட்டை பற்றி பல கருத்தரங்குகளை நடத்தி, இணையம் பற்றிய விழிப்புணர்வை உண்டாக்கியவர். இன்தாம் தவிர, தமிழிசை.காம், செந்தமிழ் குறுவட்டு போன்றவற்றையும் உருவாக்கிய இவர் உலகின் பல நாடுகளுக்கும் சென்று வந்தவர். தொடர்புக்கு info@intamn.com.



**திரு.மு. சிவலிங்கம்**

'டி பேஸ் வழியாக சி மொழி' என்கிற புகழ்பெற்ற புத்தகத்தை 'சிநேகலதா' என்கிற பெயரில் எழுதியவர். கணித்தமிழ் சங்கத்தின் கலைச் சொல்லாக்கக் குழு பொறுப்பாளர். ''டிபேஸ் வழியாக சிமொழி'' நூல்தான் இந்தியாவிலேயே முதன்முதல் வெளிவந்த சுயமான நூல். மற்றவை எல்லாம் மொழி பெயர்ப்புகள். கணினி பற்றிய அறிவியலை தமிழில் எழுதவும், பயிற்றுவிக்கவும் முடியும் என்று காட்டிய கணினி ஆசிரியர். தொடர்ந்து கணினி பற்றிய பலமூல நூற்களை உருவாக்க வேண்டும் என்பதே எம் அவா. மண்டல, தொலைதொடர்பு மையத்தில் விரிவுளையாள்ராக பணியாற்றி வருகிறார்.

**பேரா.வி. கிருஷ்ணமூர்த்தி**



அண்ணா பல்கலைக்கழக கணினி அறிவியல் துறை பேராசிரியர். கணினி பற்றிய பல நூற்களையும், பல்லூடக படைப்புகள் (multi media) பலவற்றையும் படைத்தவர். இணைய மாநாடுகள் நடைபெறுவதற்கு முன்பே 1994 இல் 'தமிழும் கணிப் பொறியும்' என்ற கருத்தரங்கை நடத்தியவர். பல கணினி மாணவர்களை உருவாக்கியவர். அறந்தை விசைப்பலகை, தமிழ் மென்பொருள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதலியவற்றை படைத்தவர். ஏழை மாணவர்களுக்கான கணினி மையத்தை பதவியிலிருந்து விருப்ப ஓய்வு பெற்று நடத்தி வருகிறார். தமிழ் கணினி உறுப்பு நிறுவனங்களில் இவருடைய "Learn Soft System மும் ஒன்று. தமிழில் பொன்மொழி என்ற விண்டோஸ் அடிப்படையிலான வேர்ட் பிராசஸர், மற்றும் தமிழில் கணிப்பொறி விளையாட்டுக் களை இந்நிறுவனம் தயாரித்துள்ளது. தமிழ் மூலம் 'ஓ.சி.ஆர்' தயாரிப்புக்கென தமிழக அரசின் தமிழ் மென்பொருள் தயாரிப்பு நிதியை இந்நிறுவனம் பெற்றுள்ளது. தொடர்புக்கு www.learnsoft.com

**சுஜாதா**

தமிழ் எழுத்தாளரான சுஜாதா எண்பதுகளின் தொடக்கத்தி லேயே இராஜாராமுடன் இணைந்து 'கம்பியூட்டரின் கதை' மற்றும் 'சிலிக்கான் சில்லுப்புரட்சி' போன்ற நூற்களையும் பல கட்டுரை களையும் பெரும் இதழ்களில் எழுதி தமிழர்களிடம் கணினி பற்றிய விழிப்புணர்ச்சியை ஊட்டியவர். திருக்குறளை குறுவட்டில் கொண்டு வந்துள்ளார். பல இணைய கருத்தரங்குகள், மாநாடுகளில் பங்கேற்று தமிழ் கணினி, இணையம் பற்றிய தனது கருத்துக்களை தெரிவித்து வருகிறார்.

**திரு. ஆண்டோ பீட்டர்**



தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த இவர், சென்னையில் சாஃப்ட் வியு கம்பியூட்டர்ஸ்' என்ற நிறுவனத்தை நடத்தி வருகிறார். தமிழ் மென்பொருள் தயாரிப்பாளர் - Inscript/Alscypt; கடந்த எட்டு ஆண்டுகளாக தமிழ் வாயிலாக கம்பியூட்டர் கல்வி அளித்து வருகிறார். http://www.tamilcinema.com என்ற இணைய இதழைத் தொடங்கி நடத்தி வருகிறார். விண்டோஸ் NT என்ற மென்பொருளுக்கு இந்தியாவில் முதன் முதலில் தமிழை வடிவமைத்தவர். தமிழ் மென்பொருளை விற்பதற்காக பிரத்யேகமாக http://www.tamilsoftware.org என்ற இணையத்தை அமைத்துள்ளார். கணிப்பொறித் துறையில் 12 ஆண்டு அனுபவம் உள்ளவர். தினமணி, குங்குமம், தமிழ் கம்பியூட்டர், வளர்தொழில் மற்றும் பல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பத்திரிகைகளுக்கான கட்டுரையாளர். சன் டிவி மற்றும் வானொலியில் கம்பியூட்டர் தொடர்பான நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறார். கணித்தமிழ்ச் சங்க செயலாளர். இவர் எழுதிய நூற்கள் : இன்டர்நெட் கையேடு. அவர் வெளியிட்டுள்ள அமுதம் தமிழ் சிடியைப் பற்றி கேட்டபோது அவர் கூறியதாவது :

**அமுதம் தமிழ் சிடியில் ஆத்திசூடி**




சென்னையில் தமிழ் மென்பொருள் தயாரிப்பில் புகழ் பெற்று விளங்கும் சாஃப்ட்வியூ கம்ப்யூட்டர்ஸ் நிறுவனம் 'அமுதம் சிடி' எனும் மல்டி மீடியா மென்பொருளை வெளியிட்டுள்ளது. இந்த மல்டி மீடியாசிடியில், தமிழக அரசு அங்கீகரித்த தமிழ்நெட் 99 எனும் டாம் மற்றும் டாப் (Tam & Tab) எழுத்துருக்களுடன் கூடிய தமிழ் மென்பொருள் அளிக்கப்படுகிறது. ஆத்திசூடி, திருக்குறள், சின்னங்கள், சித்திரங்கள், புகைப்படங்கள் ஆகியனவும் இத்தமிழ் மென்பொருளுடன் இலவசமாக அளிக்கப்படுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலகத்தமிழர்கள் அனைவரும் அமுதம் சிடியை பயன்படுத்தும் வண்ணம் $US 50 ஆக விலை நிர்ணயிக்கப் பட்டுள்ளது. தமிழை தகவல் தொழில் நுட்ப புரட்சியின் உச்ச நிலைக்குக் கொண்டு செல்ல இந்த சிடி பெரிதும் உதவும். இணையம் மற்றும் வளர்ந்து வரும் தொழிற்நுட்பத்தில் அனைத்து தமிழர்களின் இல்லத்திற்கும், அலுவலகத்திற்கும் பயன்படும் வண்ணம் இச்சீடி எளிமையாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

**1. இன்ஸ்கிரிப்ட் தமிழ் 2000**

கணிப்பொறியின் விண்டோஸ் இயக்கத்தளத்தின் எந்தவொரு மென்பொருளிலும் (உதாரணத்திற்கு பேஜ் மேக்கர், எம்.எஸ்.வேர்ட், கோரல் டிரா மற்றும் பல...) இம் மென்பொருளைக் கொண்டு டைப் செய்து கொள்ளலாம். தமிழக அரசின் தரப்படுத்தப்பட்ட தமிழ் 99 விசைப்பலகை அச்சுமுறை இம் மென்பொருளில் அளிக்கப்பட்டுள்ளது. அலுவலக கடிதங்கள், ஈமெயில், டிடிபி, இணைய வடிவமைப்பு மற்றும் பல பணிகளுக்கும் இன்ஸ்கிரிப்ட் தமிழ் 2000 ஐ பயன்படுத்திக் கொள்ளலாம். தமிழ் 99 எழுத்துருக்களை பயன்படுத்தக் கோரி தமிழக அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால் இம் மலிவு விலை எழுத்துருக்கள் தமிழக அரசு அலுவலகங்களில் புகழ் பெற வாய்ப்புள்ளது.

**2. ஆத்திச்சூடி**

கல்வி நிலையங்கள் மற்றும் அயல்நாட்டு தமிழர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற, ஔவை மூதாட்டி படைத்த ஆத்திச்சூடி இம்மென்பொருளில் பதிக்கப்பட்டுள்ளது. இந்த சிடியில் ஒவ்வொரு ஆத்திச்சூடிக்கும் தனித்தனி ஓவியங்கள் பார்த்தவுடன் புரியும் வண்ணம் சாஃப்ட்வியூ கம்ப்யூட்டார்ஸ் நிறுவனம் (40, நெல்சன் மாணிக்கம் சாலை, சென்னை-29) வடிவமைத்துள்ளது. இந்த ஆத்திச்சூடி வண்ணமிகு படங்களுடன் ஒலி-ஒளி அமைப்போடு அமைக்கப்பட்டுள்ளது.

**3. திருக்குறள்**

133 பக்கங்களைப் புரட்டி படிக்க வேண்டிய திருக்குறள் நூலை மூன்றே ஃபைலாக இச்சாஃப்டவேரில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அறம், பொருள், இன்பம் தவிர அனைத்து குறளின் துணைப் பகுதிகளையும் அமுதம் சிடியின் வாயிலாக எளிமையாகப் படித்துக் கொள்ளலாம்.

www.tamilarangam.net

**4. குழந்தைகளுக்கான தமிழ்ப் பெயர்கள்**

தமிழர்களின் குடும்பத்தில் தமிழ் பெயர்கள் புழங்க இம் மென்பொருள் ஏதுவாக இருக்கும். ஆண், பெண் தமிழ் பெயர்கள், தூய தமிழில், அழகிய வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழிலும் இவ்வளவு பெயர் பட்டியல்களா? என இம் மென்பொருள் மெய் சிலிர்க்க வைக்கிறது.

5. இதைத்தவிர அனைவருக்கும் பயன்படும்படி சித்திரங்கள், புகைப்படங்கள், ஓவியங்கள் இந்த சிடியில் அளிக்கப்படுகிறது. இச்சித்திர தொகுப்புகள் தமிழர்களின் பயன்பாடு மற்றும் கலாச்சாரத்திற்கேற்றபடி உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இந்நிறுவனம் தமிழ் மென்பொருளுக்கு மட்டும் முக்கியத்துவம் அளிப்பதற்காகவே கடந்த இரண்டு ஆண்டு காலமாக லாப நோக்கில்லாமல் http:/www.tamilsoftware.org என்ற இணையத்தையும் நடத்தி வருகிறது. அமுதம் தமிழ் சிடியின் வணிகத்தை பன்மடங்கு பெருக்க சாப்ட்வியு கம்ப்யூட்டர்ஸ் நிறுவனம் கம்ப்யூட்டர் ஷோ-ரூம்களில் மட்டுமில்லாது புத்தகக் கடைகளிலும் வீடியோ கேசட் கடைகளிலும் விற்பனை செய்யவுள்ளது.

முகவரி : மா. ஆண்டோ பீட்டர் சாஃப்ட்வியூ கம்ப்யூட்டர்ஸ் எண்: 118 (ப.எண்: 40) நெல்சன் மாணிக்கம் சாலை, தொலைபேசி எண்: 3742471, 3741053 சென்னை-600 029 இந்தியா, eMail: svs@giasmd01.vsnl.net.in Url:www.tamilsoftware.org



**பேரா. ந. தெய்வசுந்தரம் :**

சென்னைப் பல்கலைக கழகத்தின் மொழிபுலத்தில் பணியாற்றுகிறார். தமிழகத்திலுள்ள விரல்விட்டு எண்ணக்கூடிய மொழியியலாளர் களில் இவரும் ஒருவர். தமிழ் மொழியை பிறமொழியாளர்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் 'தமிழ் டைலோசா' என்ற புத்தகத்தை எழுதியவர். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பிறமொழியாளர்களுக்கு தமிழ் கற்பிக்க வெளியிட்ட ஒலி நாடாவில் தமிழ்ப் பாடத்தை இவர் எழுதியுள்ளார். இவர் தனது மென் பொருளைப் பற்றி சொல்லும் செய்தி :

www.tamilarangam.net

''தமிழில் தமிழ் எழுத்துக்களை மட்டும் உருவாக்கி யிருக்கிறோமே தவிர தமிழைப் புரிந்துகொண்டு, தமிழ் இலக்கணத்தைப் புரிந்துகொண்டு, தமிழுக்கேற்ற கணினி அமைப்பை உருவாக்கவில்லை. எனவே கணினியில் தமிழுக்கேற்ற சொற் பிழை திருத்தி, சந்திப்பிழை திருத்தி, இலக்கணப் பிழை திருத்தி, இணைச்சொல் அகராதி, எதிர்ச்சொல் அகராதி, தமிழ் - ஆங்கில அகராதி ஆகியவை இருக்க வேண்டும். இவைகளையும் மீறி தமிழ்மொழிக்குரிய தனித்த பிரச்சனைகளை எவை எவை என்று அறிய வேண்டும். இவற்றையெல்லாம் செய்யக் கூடிய, தமிழ் மொழியை ஆழ்ந்து கற்ற மொழி அறிஞர்கள்தான் செய்ய இயலும். ஆனால் இதுவரை தமிழ் மொழி அறிஞர்கள் ஒருபுறமும் கணினி அறிஞர்களும் ஒருபுறமும் தொடர்பற்று இருந்தார்கள்.

தமிழ் வளர்ச்சிக்காகக் கணினித் துறையில் மொழியியல் அறிஞர்கள் ஈடுபடுவதுபோல கணினித் துறை வளர்ச்சிக்காக தமிழ்மொழி ஆய்வில் அவர்கள் ஈடுபட வேண்டியிருக்கிறது. நாம் சொல்கிற வேலையை ஏற்கனவே நாம் நிரல்படுத்தி வைத்திருக்கிற முறைப்படிதான்கணினி செய்யும். நாம் ஒன்று இரண்டு மூன்று என்று வரையறுத்துத் தரவேண்டும். இதில் ஏதாவது ஒரு படி தவறினாலும் கணினி செயல்படாது. கணினியில் ஒரு வேலையைச் செய்ய, அது எப்படிச் செயல்பட வேண்டும் என்ற திட்டத்தை நாம் எழுதி பொருத்துகிறோம்.

கணினியில் 'திட்டமிடுவதைப் பற்றி ஒரு புதிய கண்டுபிடிப்பை நிகழ்த்தும் முயற்சியில் அறிவியல் அறிஞர்கள் ஈடுபட்டுள்ளார்கள். மனித மூளை செயல்படுவதைப் போல கணினியையும் இயங்க வைக்க முடியுமா? அறிவுத் திறனைக் கொடுக்க முடியுமா? என்பதே அந்த முயற்சி. இம்முயற்சிக்குச் 'செயற்கை அறிவுத் திறன்' என்று சொல்லுகிறார்கள். கணினிக்கு 'செயற்கை அறிவுத் திறனைத் தரும் முயற்சியில் கணினித்துறை அறிஞர்கள் ஆய்வு செய்து வருகிறார்கள்.

கணினியை எந்த அளவு பயன்படுத்த முடியுமோ அந்த அளவிற்குப் பயன்படுத்தி விட்டோம். ஆனால் மனித மூளை அளவிற்குக் கணினியை செயல்பட வைக்க முடியவில்லை.

மனித மூளைக்கு இருக்கக் கூடிய திறமைக்கு முக்கிய காரணமே மொழிதான். கணினிக்கு அந்த வாய்ப்பில்லை. மனிதர்கள் பேசக்கூடிய இயற்கை மொழிகளைப் புரிந்துகொள்ளக் கூடிய திறன் கணினிக்கு இன்றைக்கு இல்லை. நாம் கணினியோடு உரையாடுவது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பது இயற்கை மொழியோடு அல்ல. இயற்கை மொழி என்பது படைப்பாற்றல் திறன் வாய்ந்தது. சூழலுக்கு ஏற்ப மொழியைப் பயன்படுத்தவும் புரிந்து கொள்ளவும் மனித மூளையால் முடியும். கணினியால் முடியாது. இலக்கிய மொழியை விட அறிவியல் மொழி மிகச்சரியான பொருள் வரையறைக்கு உட்பட்டதாகும். அறிவியல் மொழியை விட கணினிமொழி மிகத் துல்லியமான பொருள் வரையறைக்குட்பட்டதாகும். அறிவியல் துறைக்கு (Bascal) வணிகத் துறைக்கு (Cobal) பிறதுறைகளுக்கு (C-language) என்று பல்வேறு செயற்கை மொழிகளை உருவாக்கியிருக்கிறோம். இன்றைக்குப் பலரும் நினைக்கிறார்கள். கணினிக்கு ஆங்கிலத்தைப் பயன்படுத்து கிறோம் என்று. உண்மையில் ஆங்கிலத்தையும் பயன்படுத்த வில்லை. பிரெஞ்சையும் பயன்படுத்தவில்லை. எந்த இயற்கை மொழியையும் கணினியில் பயன்படுத்தவில்லை.

இன்றைக்குப் பயன்படுத்துவதெல்லாம் கணினிக்கென்று உருவாக்கப்பட்ட செயற்கை மொழிகள். கணினிக்கென்று ஒரு செயற்கை மொழி போதாதா? ஏன் பல செயற்கை மொழிகள் என்று கேட்கலாம். இயற்கை மொழியான தமிழை மட்டும் வைத்துக் கொண்டு அறிவியல் வேலை, இலக்கிய வேலை முதலிய எல்லா பணிகளையும் செய்யலாம். இந்தத் திறன் செயற்கை மொழிக்குக் கிடையாது. வணிகத்துறைக்கென்று ‘கோபால்’ உருவாக்குகிறார்கள் என்றால் வணிகத்துறைக்கென்று ஒரு நூறு சொற்கள் இருக்கும். அந்தச் சொற்களும் அந்தச் சொற்களை இணைக்கக் கூடிய இலக்கணமும் (கணினித் துறையினர் Syntex என்று பொருள் கொள்வது) ஒரு மொழியாக இருக்கும். இதற்கு மொழி பெயர்ப்பி உருவாக்குவது எளிமையாக இருக்கும். இவ்வாறு ஒரு குறிப்பிட்ட துறை சார்ந்ததாக இருக்கும். எனவே இயற்கை மொழி மாதிரி அனைத்துப் பணிகளையும் செய்கிற செயற்கை மொழியைக் கணினியில் பயன்படுத்தப்பெறவில்லை. செயற்கை மொழிக்குப் பதிலாக இயற்கை மொழியைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டோம் என்றால் இந்தச் செயற்கை மொழியே தேவையில்லாமல் போய்விடும். செயற்கை மொழியைப் பயன்படுத்துகிறார்கள் என்றால் செயற்கை மொழியின் சிறப்பினால் அல்ல, இயற்கை மொழியைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலையால்தான். இயற்கை மொழியை மனித மூளை புரிந்து கொள்கிறதே, ஏன் கணிப்பொறி புரிந்துகொள்ள முடியாது என்று அறிவியல் ஆய்வுலகில் கேள்வி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எழுகிறது. இந்தக் கேள்வியினால் மொழியியல்துறையில் ஒரு புரட்சி நடந்துகொண்டு வருகிறது. மனித மூளை இயற்கை மொழியை எப்படிக் கற்றுக் கொள்கிறது? எப்படித் தேக்கி வைக்கிறது என்பதை நோம்ஸ் சாம்ஸ்கி எனும் அமெரிக்க மொழியியல் அறிஞர் 1957 ஆம் ஆண்டிலிருந்து மாற்றிலக்கணம் எனும் கோட்பாட்டை உருவாக்கித் தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறார். மாற்றிலக்கணக் கோட்பாட்டைத் தொடர்ந்துதான் கணினி ஆய்வாளர்கள் மொழியியல் பக்கம் கவர்ந்திழுக்கப்படுகிறார்கள். இயற்கை மொழியைப் புரிந்து கொள்ளக்கூடிய மனித மூளைத் திறன் இருக்கிறதே அந்தத் திறன் எப்படிப்பட்டது என்பதுதான் சாம்ஸ்கியின் ஆய்வு.

இந்த ஆய்வின் அடிப்படையில் சாம்ஸ்கி ஒரு முடிவுக்கு வந்து விடுவாரானால் அம்முடிவுகளை மென்பொருளாக மாற்றி கணினிக்குக் கொடுத்துவிட்டோம் என்றால் கணினி இயற்கை மொழியைப் புரிந்து கொள்ளும். எனவே கணினித் துறையைச் சேர்ந்தவர்கள் மொழியியலுக்கு வருகிறார்கள்.

உலகில் ஆயிரக்கணக்கான இயற்கை மொழிகள் இருந்தாலும் இலக்கண அமைப்பில் ஒன்று போல இருக்கிறது. எந்த ஒரு மொழிக்கும் வேற்றுமை இல்லாமல் பெயர்ச் சொல் வரமுடியாது. காலவிதி ஏற்காமல் வினைச் சொல் வரமுடியாது. பெயரடை என்பது பெயர்ச் சொல்லோடுதான் வரும். வினையிடை என்பது வினைச்சொல்லோடு தான் வரும். இது தமிழுக்கு மட்டுமல்ல எல்லா மொழிகளுக்கும் பொதுவான கூறுகள் எப்படி அமைந்திருக்கிறது என்பதற்கு சாம்ஸ்கி எல்லா மொழிகளையும் உருவாக்கியது மனித மூளைதானே, என்கிறார். எல்லா மொழிகளிலும் வேற்றுமைக் கூறுகளும் இருக்கின்றன.

வேற்றுமைக் கூறுகளை ஒரு வரையறைக்குள் அடக்கி விடலாம். வேகமாக வந்தான் என்பதில் வந்தான் வினைமுற்று. வேகமாக என்பது வினையடை. வந்தான் என்பதுதான் முதன்மையானது. வினை முற்றுக்கு முன்தான் வினைமுற்றை விளக்கக்கூடிய வினையடை வரவேண்டும். பெயர் தொடர் என்றால் பெயர்ச் சொல்லுக்கு முன்னால் பெயரடை வரவேண்டும். ஒரு தொழில் எது முதன்மையோ அது இறுதியிலும் அதற்குத் தேவையான சொற்கள் முதலிலும் வரவேண்டும். இம்முறை தமிழை தலைகடை (Head lost) மொழியென்றும் ஆங்கிலத்தை தலைமுதல் (Head first) மொழியென்றும் அழைப்பார்கள். Came Slolwy என்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆங்கிலத் தொழில் (வந்தான் மெதுவாக) வினைமுற்று முதலாவதாகவும் வினையடைய அதன்பின்னரும் வருவதைக் காணலாம். இப்படி எல்லா மொழிகளின் வேற்றுமைகளையும் தலைகடை மொழியென்றும் தலைமுதல் மொழியென்றும் பகுத்து அடக்கிவிடலாம். இலக்கணப் பண்பு இலக்கணப் பொதுமை எல்லா மொழிகளுக்கும் பொதுவானவைதான். கணினி மொழியையும் இயற்கை மொழியையும் இணைத்து கணினி மொழியியல் (Computation Linquistics) என்ற ஒன்றை அறிஞர்கள் உருவாக்கியிருக் கிறார்கள். கணினி மொழியியல் என்பது மொழியியல் வளர்ச்சிக்கு கணினித்துறை வளர்ச்சிக்கும் பயன்படுகிறது. நாமும் தமிழை இரண்டு அடிப்படையில் அணுக வேண்டியிருக்கிறது. தமிழை வளர்க்க வேண்டும் எனும் அடிப்படையில் கணினித்துறை மீது தமிழறிஞர்கள் கவனம் செலுத்துவதும் கணினித் துறை வளர்ச்சிக்காக தமிழின்மீது கணினித் துறை அறிஞர்கள் கவனம் செலுத்துவதும் அவசியமாகிறது.

இயற்கைமொழி ஆய்வு அடிப்படையில் தமிழை நோக்கும் போது மற்ற எந்த மொழிகளை விடவும் தமிழுக்கு அதிகப் பொருத்தமும் சிறப்பும் இருக்கிறது. ஒரு மென்பொருளை உருவாக்குவதற்கு ஆதாரமாக அமைந்த துறைக்குக் கணிதப் பண்பு இருக்க வேண்டும் என்பது அடிப்படை அம்சமாகும். தமிழ்மொழி அமைப்பும் கணிதப் பண்போடு அமைந்துள்ளது.

தமிழ் தொன்மைமிக்க மொழி என்பதாலும் வரலாற்று பெருமை மிக்க மொழி என்பதாலும் இந்த கணிதப் பண்பு மிகச் சிறப்பாகவே அமைந்துள்ளது. எழுத்தமைப்பு ஒலியமைப்பு, சொல்லமைப்பு, தொடரமைப்பு எல்லாவற்றிலும் ஒரு கட்டுக்கோப்பு இருக்கிறது.

மயங்கு என்ற சொல் இருக்கிறது. இது செயப்படு பொருள் குன்றிய வினை. செயப்படுபொருள் குன்றாவினை என்றால் மயக்கு என்றமையும். மயக்கு + அம் விகுதி சேர்ந்தால் மயக்கம் என்ற பெயர்ச்சொல் வந்துவிடும். எனவே, மயங்கு, மயக்கு, மயக்கம், கலங்கு, கலக்கு, கலக்கம், துவங்கு, துவக்கம். இவ்வாறு சொல்லிலக் கணத்தில் கூட கணக்கின் படிநிலை தமிழில் அமைந்துள்ளது. தமிழைக் கணிப்பொறி மொழியாக்கும் வேகம் எப்படி வந்தது என்றால் சமஸ்கிருதத்துறையினரே அந்த வேகத்தை என்னுள் ஏற்படுத்தினார். நான் தமிழ் மரபைத் தெரிந்தவன். மொழியியல் பின்னணியுள்ளவன். சமஸ்கிருதத் துறையைச் சாந்தவர்கள் அதிகார மேல்மட்டத்தில் பெரும் ஆதரவை சேர்த்து வைத்திருக்கிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளிநாட்டைச் சார்ந்தவர்களும் ஆதரவு தருகிறார்கள். எனவே பெரும் செல்வநிலையோடு இருக்கிறார்கள். அவர்கள் கான்பூர் ஐ.ஐ.டியில் ஆய்வு செய்கிறார்கள். இயந்திர மொழி பெயர்ப்பில் ஆங்கிலத்திலிருந்து பிரெஞ்சுக்குப் போகவேண்டும் என்றால் நேரடியாகப் பிரஞ்சுக்குப் போகாமல் சமஸ்கிருதத்திற்குப் போய்ப் பிறகு பிரஞ்சுக்குப் போக வேண்டுமாம். எல்லா மொழியிலும் அமைந்திருக்கும் பொதுமைக்கூறுகள் சமஸ்கிருதத்தில் அறிவியல் பூர்வமாக அமைந்திருப்பதாக அவர்கள் வாதாடுகிறார்கள். எனவே சமஸ்கிருததைப் பின்னணியாகக் கொண்டு ஆய்வு செய்ய வேண்டும் என்பது அவர்கள் நோக்கம். செயற்கை மொழி, இயற்கை மொழி ஆய்வோ, மொழி பெயர்ப்பு ஆய்வோ, இயந்திர மொழி ஆய்வோ வெற்றி பெற வேண்டுமென்றால் சமஸ்கிருதத்தை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்யுங்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள்.

சமஸ்கிருத கணினி ஆய்வாளர் ஒரு கூட்டத்திற்குப் பேச வந்தார். நானும் என் மாணவர்களோடு போயிருந்தேன். மொழியியலாளர் என்ற முறையில் எந்த மொழிக்கும் எதிரானவனில்லை. ஆனால் ஒரு வழக்கிழந்த மொழியை முன்னிலைப்படுத்துகிறீர்கள். வழக்கில் உள்ள வரலாற்றுச் சிறப்புள்ள தமிழ் மொழியை ஏன் ஆய்வுக்கு எடுக்கவில்லை. என்ன காரணம்? வடமொழி பாணினி இலக்கணத்தை ஆய்வுக்கு எடுக்கிற நீங்கள் தமிழின் தொல்காப்பியத்தை ஏன் ஆய்வுக்கு எடுக்கவில்லை. தமிழின் இலக்கண வளர்ச்சியிலும் மொழி வளர்ச்சியிலும் இன்றைய நிலை வேறு. அப்படியிருக்க தமிழை ஏன் ஆய்வுக்கு எடுக்கவில்லை? இந்தக் கேள்விக்குப் பதிலே கிடையாது. அதற்குப் பிறகுதான் நான் ஒரு திடமான முடிவுக்கு வந்தேன். கணினித்துறையில் இயற்கை மொழி அறிவுத் திறனுக்குப் பின்புலமாக அமையக் கூடிய ஆய்வை தமிழை வைத்துச் செய்ய முற்பட்டேன். எனவே தமிழைக் கணினியில் பயன்படுத்த வேண்டும் என்றால் செய்ய வேண்டிய வேலைகள் என்ன? விசைப் பலகைத் தரப்படுத்துதல் அஸ்கிவேலி தரப்படுத்துதல் வேர்டு பிராசஸ் உருவாக்குதல் கணினித் தமிழ் இலக்கணம் உருவாக்குதல் ஆகியவற்றைச் செய்ய வேண்டி யிருக்கிறது. இதன் அடிப்படையில் பல்கலைக் கழக நல்கைக் குழுவின் மானிய உதவி ரூ. இரண்டரை லட்சத்தில் கணினித் தமிழ் இலக்கணத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறேன். இப்பணி வரும் டிசம்பருக்குள் முடிந்துவிடும். கணிப்பொறி தமிழைப் புரிந்துகொள்வதற்கான இலக்கணமிருக்கிறது. இதை செய்து

www.tamilarangam.net

முடித்துவிட்டால் கணிப்பொறி மூலம் தமிழ் வழி அனைத்தையும் செய்யலாம்.

கணினித் துறையில் சொல் பகுத்தல் தொழில்நுட்பம் இருக்கிறது. தமிழ் அறிஞர்கள் கணினித் துறையில் ஈடுபடாத காரணத்தால் சொல் பகுத்தல் முறை உருவாக்கப்படவில்லை. இப்போது சொல் பகுத்தல் முறையை உருவாக்கியிருக்கிறோம். இம்முறையை உருவாக்கியதன் அடிப்படையில், சந்திப்பிழை திருத்தி, சொற்பிழை திருத்தி, இலக்கணப் பிழை திருத்தி, ஐயஒலிச் சொல் அகராதி, தமிழ் - ஆங்கில அகராதி, இணைச்சொல் அகராதி, எதிர்ச்சொல் அகராதி, எண்களை எழுத்துக்ளாக மாற்றுதல், ஆங்கில நாட்காட்டியைத் தமிழ்நாட்காட்டியாக மாற்றுதல், மின்னஞ்சல், இணையம் ஆகிய இவற்றையெல்லாம் செய்திருக்கிறோம்.

பழந்தமிழ் இலக்கியங்களைப் புதிதாக அச்சுக் கோர்க்காமல் அப்படியே ஸ்கேன்' மூலம் படி எடுத்துவிடலாம். ஆனால் அப்படி ஸ்கேன் செய்து படி எடுத்த எழுத்தை மறுபடி வேறு எழுத்துக்கு மாற்றவோ, அல்லது திருத்தி புத்தாக்கம் செய்யவோ முடியாது. அப்படி திருத்திப் புத்தாக்கம் செய்ய வேண்டும் என்றால் அந்தத் தமிழ் எழுத்தை கேரக்டரை அங்கீகரித்துப் புரிந்துகொள்ளக் கூடிய மென்பொருள் இருக்க வேண்டும். இவ்வசதி ஆங்கிலம் பிரஞ்சு மொழிகளுக்கு இருக்கிறது. தமிழுக்கு இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை.

பேச்சு உள்வாங்கி (Voice Recogniser) கண்டுபிடிக்கப்பட வேண்டும். அதாவது பேச்சு ஒலியைக் கேட்டு உள்வாங்கி எழுத்தாக மாற்றும் முறை. இவையெல்லாம் செய்யும் போதுதான் தமிழைக் கணினியில் ஆங்கிலத்தின் உதவியின்றி செயற்பட வைக்க முடியும்.''



**திரு. பாலாபிள்ளை**

திருச்சியை அடுத்த எலுப்பூர் பூர்வீகம். மலேசியாவில் வாழ்க்கையைத் தொடங்கியவர். அமெரிக்காவில் படிப்பு. தமிழ் பற்று அங்கேதான் தொற்றிக் கொண்டது என்கிறார். 1996 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் www.tamil.net என்ற இணைய தளத்தைத் தொடங்கினார். இந்த இணையம் மூலம் தமிழ் மெய்லிங் பட்டியல் சேர்க்கப்பட்டது. இதன் மூலம் உலகத் தமிழர்களிடையே தொடர்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொள்ளும் எண்ணம் ஏற்பட்டது. தமிழ் நெட் விவாதத்தில் திருக்குறள், புதிய தமிழ்ச் சொற்கள், சாதிய அமைப்பு, தமிழர்களின் வாழ்க்கை நிலை, ஈழம் போன்ற பல தலைப்புகளில் விவாதம் சூடு பரக்க நடந்தது. இதன் அடுத்தகட்ட வளர்ச்சிதான் இணைய மாநாடுகள்.

ஆசிய கலாச்சாரத்தை மையமாக வைத்து இணைய தளங்கள், போர்ட்டல்களை தொடங்க விரிவான திட்டங்களுடன் களமிறங்கினார் பாலா. ஆசிய பசிபிக் இண்டர்நெட் கம்பெனி பிரைவேட் லிமிடெட் (Asia Pacific Internet Company Private Ltd, சுருக்கமாக APIC) முதல் கட்டமாக சென்னையிலிருந்து இந்த அமைப்பு தொடங்கியுள்ள இணையத்தளம் டெலி இந்தியா டாட் காம். (www.teleindia.com)




ஆசிய நாடுகள் மற்ற உலக நாடுகளிலிருந்து தனிப்பட்ட பண்பாட்டு அடையாளங்கள் கொண்டவை. இந்த தனி அடையாளங்கள் மேற்கத்திய நாகரீக வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போய்விடாமல் இணையத்தில் அரண் எழுப்புவதுதான் 'எபிக்'கின் நோக்கம். Sigapore.net, Malaysia.net, Indonesia.net, Sydney.net போன்ற நாடுகளுக்கான இணையச் சமூக அமைப்பை அமைத்தது மட்டுமல்லாமல் www.tamil.com; www.chennai.net, www.tamilnadu.net போன்றவற்றையும் ஏற்படுத்தியவர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்று ஆஸ்திரேலியாவிலுள்ள சிட்னியில் வசிக்கும் பாலா அவர்கள், கோலாலம்பூரில் தொடங்கி, ஹாங்காங், டொரன்டோ என்று சுமார் 13 ஆண்டுகள் நிர்வாகம், மின்வணிகம் போன்றவற்றில் பட்டறிவு பெற்றவர். ராய்ட்டர் செய்தி நிறுவனம், ஸ்விஃப்ட் போன்றவற்றில் பணியாற்றியவர். இந்தியாவிலுள்ள பிற மாநில மக்களுக்கும் தனி இணைய தளங்களை ஏற்படுத்தி மின் வணிகத்தை நடத்த இருக்கிறார்.

**சென்னைக் கவிகள் :**

கவிதை படைப்பவர்கள் மட்டும் கவிஞர்கள் இல்லை. அவரவர் துறையில் படைப்பை செய்யக்கூடிய அனைவருமே கவிஞர்கள் தான். அதனால்தான் கணிப்பொறிக் கலைஞர்களாகிய நாங்கள் 'சென்னைக் கவிகள்' என்று பெயர் வைத்துக் கொண்டோம்



**சென்னைக் கவிகள் (நிற்பவர்கள் இடமிருந்து) எஸ்.சுரேஷ், செந்தில், இந்துமதி (அமர்ந்திருப்பவர்கள்) என்.சுரேஷ், மனோஜ், சத்யன்.**

என்கிறார், மனோஜ் அண்ணாத்துரை. சென்னைக் கவிகள் குழுவில் எஸ். சுரேஷ், செந்தில், இந்துமதி, என். சுரேஷ், மனோஜ், சத்யன் என்ற அறுவரைக் கொண்ட அமைப்பாக செயல்பட்டு வருகின்றனர்.

பதமி : தமிழுக்காகச் சில மென்பொருள்கள் உள்ளன. ஆனால் இவர்கள் தமிழிலேயே மென்பொருள்களை படைத்துள்ளார்கள். இந்த மென்பொருளின் பெயர் பதமி. இம்மென்பொருள் ஒரு வேர்ட் புராஸசர். ஆங்கிலத்தில் புரோகிராம் பண்ணும்போது File, edit, copy ன்னு வருகிற சொற்கள் கூட கோப்பு, தொகு, நகல்னு தமிழிலேயே கொண்டு வருந்திருக்கிறாங்க. இது wordstar மாதிரி. பதமி தமிழ்ல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தட்டச்சு செய்ய உதவுது. பதமியை இணையத்தில் கூட பயன்படுத்தலாம்.



'கோப்பு' (File) கோப்புல புதிய, சேமி, திற, மறுபெயர், அச்சடி, நன்றின்னு ஆறுவகை இருக்கு. புதிதாக மடல் தயாரிக்க வேண்டு மென்றால் கோப்பு மூலமாக தயாரிக்கலாம். பலகை, அதாவது layout. இதுல இரண்டு விதமான முறை இருக்க. ஒண்ணு தட்டச்சு; மற்றொன்று அறந்தை. தமிழ் தட்டச்சு முறை உங்களுக்குத் தெரிந்திருந்தாலே போதும். மேலும் 'சொல் ஏடு' பகுதியில் (Word Lookup) ஒரு சொல்லைப் பற்றிய விளக்கம் தருவது என்று பொருள். எ-கா. மறத்திற்கு வல்லினம் வருமா, மெல்லினம் வருமா என்பதை எளிதில் தெரிந்து கொள்வதற்கான வசதிகளும் உண்டு. இம்மென் பொருள் விண்டோஸ் 95 இல் மட்டும் பணியாற்றும் திறன் பெற்றது.

திருக்குறள் பல்லூடக குறுவட்டு: திருக்குறள் பற்றிய அனைத்து விவரங்களும் மிக நேர்த்தியான முறையில் சிடி ரோம் தகடுகளில் வெளிக்கொண்டு வந்தனர் சென்னைக் கவிகள். இக்குறுவட்டில் ஒலி, ஒளி விளக்கங்களுடன், திருக்குறளுக்கான உரைகளும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மொழிபெயர்ப்புகளும், திருக்குறள் தொடர்பான தகவல்களும் இதில் இடம் பெற்றுள்ளன.

திருக்குறளை சிடி ரோமில் ஏற்ற சென்னைக் கவிகளுக்கு டாக்டர் ஔவை நடராஜன், டாக்டர் பொற்கோ, டாக்டர் மோகன்ராஜ் போன்ற தமிழறிஞர்கள் உறுதுணை புரிந்துள்ளனர். பரிமேலழகர் முதல் இக்கால உரையாசிரியர் வரை பலர் எழுதிய உரைகள், ஒவ்வொரு குறளுக்கும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஆங்கிலம், பிரெஞ்சு, மலாய், ஜெர்மன் மொழிகளிலும் உள்ள திருக்குறளை குறளமுது குறுவட்டில் சேர்த்துள்ளார்கள். செவிக்குணவாக ஒவ்வொரு குறளையும் கங்கை அமரன் இசையோடு கேட்கவும் முடிகிறது.

குழந்தைகளுக்குப் புரியாத ஏறு, கவரிமா, கூகை போன்ற இடம் வரும் குறளின் சொல்லை மௌசைக் கொண்டு தட்டினால் அச்சொல்லின் பொருளைக் குறிக்கும் பறவையோ, விலங்கோ வீடியோ படமோ சில வினாடிகள் தெரியும். இம்முறை குழந்தைகள் எளிதில் புரிந்துகொள்ளும் விதத்தில் அமைத்துள்ளனர். திருக்குறள் மொழிபெயர்ப்பில்: பிரெஞ்சில் லதா மாதவன், மலாய் மொழியில் சூஸை, ஜெர்மன் மொழியில் கிரால்ஆகியோரின் மொழிபெயர்ப்பு களைக் காண முடிகிறது.

எந்தக் குறளையும் எண்ணோ, சொல்லோ அல்லது அணியோ வைத்துக்கூட தேடலாம். வள்ளுவரை மருத்துவராக, வழக்கறிஞராக, தத்துவ ஞானியாக, பல கோணங்களில் பார்க்க வழி செய்திருக் கிறார்கள். திருக்குறள் தொடர்பாக வந்த அத்தனை நூல்களும், விவரங்களோடு இடம் பெற்றுள்ளன. வள்ளுவர் கோட்டம் போன்ற திருக்குறள் தொடர்பான இடங்களுக்கு நம்மை அழைத்துச் செல்கிறார்கள்.

முன்பு ஒருபோதும் கணினியைப் பயன்படுத்தாதவர்கள் கூட இந்த குறளமுதினை எளிதாக இயக்கும் வண்ணம் அமைந்திருப்பது இந்த குறுவட்டின் சிறப்பாகும். சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் கணினி மூலம் திருக்குறள் பயிற்றுவிக்கவும் 'குறளமுது', பயன்பாட்டில் இருந்து வருகிறது.

கணிவரி : சென்னைக்கு அருகேயுள்ள சின்னசேக்காடு மற்றும் மணலி தேர்வுநிலை பேரூராட்சிகளுக்கு சொத்துவரி கணக்கிட்டுப் படிவத்தைத் தமிழில் உருவாக்கிக் கொடுத்துள்ளனர். 'கணிவரி' என்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெயரில் இம் மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. ஆங்கிலமே தெரியாத பஞ்சாயத்து எழுத்தர்கூட கணினியை பயன்படுத்தி சொத்து வரியைக் கணக்கிட முடியும்.

கட்டடத்தின் மதிப்பு, பரப்பளவு, பயன்பாடு ஆகியவற்றை தெரிவித்தால் போதும். சொத்துவரி, நூலக வரி, வரி உயர்வு, திருந்திய வரி ஆகியவற்றை நொடியில் தெரிவித்து, அப்பட்டியலை அச்சிட்டுக் கொடுத்து விடும். ஒரு வீட்டுக்காரருக்கு வரி விதிக்க வேண்டுமானால் 22 தகவல்களின் அடிப்படையில் புதிய வரியை கணக்கிட வேண்டும். இதற்கு நீண்ட நேரம் பிடிக்கும். கணிவரி மென்பொருள் மூலம் உள்ள கணினியில் இந்தப் பணியை மிக எளிதாக்கும். சொத்துவரி மனுவில் உள்ள வார்டு எண், முகவரி போன்ற முதல் எட்டு பொதுவான தகவல்களை கணினிக்குத் தந்தால் போதும். மற்ற அனைத்து விவரங்களையும் கணினியே கணக்கிட்டு இறுதியாக நிர்ணயிக்கப்பட்ட அரையாண்டு வரித்தொகையை கணினி அச்சிட்டுத் தரும். இந்தப் பணி சில நொடிகளில் முடியும். இம்முறையை மாநில அரசின் எல்லாத் துறைகளுக்கும் விரிவுபடுத்தலாம். கணினி பற்றிய சிறப்பான அறிவு இல்லாதவர்கள், தமிழ் மட்டுமே தெரிந்தவர்கூட இதைப் பயன்படுத்தலாம் என்பது இதன் இன்னொரு சிறப்பு.

நூலகம் 97 : சென்னையிலுள்ள உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் நூலகத்துக்காக 40,000 புத்தகங்களை நூலடைவு செய்யும் விதத்தில் தமிழ் மற்றும் ஆங்கிலம் இருமொழிகள் கொண்ட 'நூலகம் 97' என்ற கணிப்பொறி மென்பொருளை உருவாக்கித் தந்துள்ளனர். இதன் மூலம் நூலகத்தில் உள்ள நூல்களைப் பற்றிய தகவல்களைப் பெற முடியும். எ-கா. நூலாசிரியரின் பெயரைத் தந்து நூலைக் கண்டுபிடிக்கலாம். இதுபோன்றே நூலின் பெயரைத் தந்து நூலைக் கண்டுபிடிக்கலாம்.

மனு 2000 : திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர்திரு. தனவேலின் ஆலோசனையின் பேரில் 'மனு 2000' என்கிற மென்பொருளை சென்னைக் கவிகள் உருவாக்கினர். இந்த மென்பொருளை முதன் முதலாகப் பயன்படுத்தும் பெருமையை, நெல்லை மாவட்ட ஆட்சியரகம் பெற்றது. தமிழகத்திலேயே, மக்கள் குறை தீர்ப்புப் பணிக்காகத் தயாரிக்கப்பட்ட முதல் மென்பொருள் இதுதான்.

முழுக்க, முழுக்க தமிழிலேயே இந்த மென்பொருள் அமைந் துள்ளதால், யார் வேண்டுமானாலும் இதைப் பயன்படுத்த முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோரிக்கை மனுக்களைப் பெறுவதற்காக, ஆட்சியர் அலுவலகத்தில் கணினி அமைக்கப்பட்டிருக்கும். மனுக்களைப் பெறும் ஊழியர், கோரிக்கை மனு குறித்த விவரங்களை கம்பியூட்டரில் பதிவு செய்வார். அவ்வாறு பதிவு செய்யப்பட்டவுடன் அந்த மனுவுக்குத் தனியான பதிவு எண்ணை கணினி கொடுக்கும். எந்தப் பிரச்சினை குறித்துக் கோரிக்கை மனு கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அந்தத் துறையின் பரிசீலனைக்கு கணினி மூலம் உடனடியாக மனு அனுப்பி வைக்கப்படும். மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து அறிந்துகொள்ள, மனுதாரர் மீண்டும் வரவேண்டிய நாளையும் கணினி குறித்துக் கொடுத்துவிடும். இக்காலக் கெடுவுக்குள், மனு மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை, சம்பந்தப்பட்ட துறை அதிகாரி கணினியில் பதிவு செய்ய வேண்டும். நடவடிக்கை எடுக்கவில்லையெனில் அதற்கான காரணத்தை பதிவு செய்ய வேண்டும்.

பொதுமக்களின் மனுக்கள் குறித்தும், மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் அறிந்துகொள்ள, ஆட்சியர் எந்த அதிகாரியையும் சார்ந்திருக்க வேண்டியது இல்லை. ஒவ்வொரு துறையிலும் உள்ள கணினிகள், மாவட்ட ஆட்சியரின் கணினியுடன் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கும். எனவே எந்தத் துறைக்கு எத்தனை புகார்கள் வந்துள்ளன? அவற்றின் மீது எடுக்கபட்ட நடவடிக்கைகள் என்ன? என்பது குறித்து ஆட்சியர் உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும். நடவடிக்கை எடுக்கப்படவில்லை யெனில், துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க இது உதவியாக இருக்கும்.

தமிழக அரசால் திட்டமிடப்பட்டுள்ள சமுதாய இணையப் பயன்பாட்டுக்கு வரும்போது, கோரிக்கை மனுவின் நிலை குறித்து அறிந்து கொள்வதற்காக, பொது மக்கள் ஆட்சியர் அலுவலகத்துக்குச் செல்லத் தேவையில்லை. சமுதாய இணைய மையங்களுக்குச் சென்று, மனுவின் நிலை குறித்துத் தெரிந்து கொள்ளலாம்.

இதே மென்பொருளை, வேலைவாய்ப்பு அலுவலகங்கள், அரசு போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் காவல்துறையிலும் பயன்படுத்த முடியும்.

பதமி 1.8 : சென்னைக் கவிகளின் மற்றொரு மென்பொருள். இம்மென்பொருளை சென்னையிலுள்ள மாநகராட்சி பள்ளிகளில் பயன்படுத்துவதற்கென்று 100 பிரதிகளை சென்னைக் கவிகள், சென்னை மேயரிடம் தந்தனர். இதன் மூலம் மாநகராட்சிப் பள்ளி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் மதிப்பெண்களை உள்ளிடும் வசதியும், தேர்வு அறிக்கையினை பெறுவதற்கு மட்டுமின்றி பலவகை அறிக்கைகளையும் தயாரிப்பதற்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.




**இதம் 2000 :**

இம்மென்பொருள் 'சென்னைக் கவி'களின் புதிய படைப்பு. விண்டோஸின் தளத்தில் நின்று அது செய்யக்கூடிய அனைத்து விதமான வேலைகளையும் தமிழில் செய்யக்கூடிய மென்பொருளாக இதனைக் கொண்டு வந்துள்ளனர். கணினியை தொடங்குவது முதல் மூடுவது வரையிலான அனைத்து செயல்பாடுகளுக்குமான தமிழ் மென்பொருள் என்று இதனை சொல்ல முடியும் என்று திரு. மனோஜ் அண்ணாதுரை தெரிவித்தார். இதம் 2000 கண்ரோல் பேனல், ஐகான்ஸ், பிரௌஸர், வேர்ட் பேட், விளையாட்டு மெனு, மற்றும் டாஸ் உட்பட அனைத்தையும் தமிழில் தருகிறது.

இம்மென்பொருள், தமிழக அரசு அங்கீகரித்துள்ள விசைப் பலகைக்கு ஏற்ற முறையில் உருவாக்கப்பட்டுள்ளது. 'இதம் 2000'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மென்பொருளை உருவாக்கியதே கணினியில் தமிழ்மொழி முழுமையாக செயல்பட வேண்டும் என்பதற்காகத்தான். அதனால் இதன் அடக்க விலைக்கே கொடுத்தால் எல்லா மக்களையும் சென்றடையும் என்று எண்ணி பல ஸ்பான்சர்களை தேடினோம். இம்மென்பொருள் உருவாக்கத்திற்கு 16 இலட்ச ரூபாய் செலவானது. இதில் 10 இலட்ச ரூபாயை தமிழக அரசு அளித்தது. 'இதம் 2000' போலவே தெலுங்கு, மலையாளம், கன்னட மொழிகளுக்கும் செய்து கொடுக்க முடியும். இதற்கான பேச்சு வார்த்தையை அம்மாநில அரசுகளுடன் பேச இருக்கிறோம் என திரு. மனோஜ் அண்ணாதுரை தெரிவித்தார்.




**கணித்தமிழ் சங்கத்தின் இணைய முகவரி :** http://kanithamizh.org என்பதாகும். இதனுள் நுழைந்தவுடன் தெரியும் முழக்கம் "தமிழ்மென்பொருள் தயாரிப்பாளர்களும், தமிழ் அறிஞர்களும் இணைந்து கணிப்பொறியில் தமிழ்ப் பயன்பாட்டை அதிகரித்து, தமிழ் மொழியை ஒரு உலகளாவிய தகவல் தொடர்பு மற்றும் வியாபார மொழியாக மாற்றுவோம்" எனத் தெளிவாக அறிவித் துள்ளனர். இடது பக்கம் உள்ள நோக்கங்கள், நிர்வாகிகள், உறுப்பினர்கள், ஆசிரியர் குழு, செய்தி மடல், தமிழ் '99 படிவங்கள், மென்பொருள்கள், சாதனைகள் போன்ற தலைப்பை மௌஸ்சால் தட்டினால் அதனதன் விவரங்கள் தெளிவாக தொகுத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை படிக்க நாம், அவர்கள் கொடுத்துள்ள தமிழுருக்களை பதிவிறக்கம் செய்து படிக்கலாம். மேலும் எல்லோருக்கும் பயன்படும் விதத்தில் இலவசமாக "சொல்லாளர்" என்ற மென்பொருளைத் தருகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சென்னையில் நடந்த இணைய மாநாட்டின் விளைவாக பிறந்ததுதான் 'கணித்தமிழ் சங்கம்' கணித்தமிழ் சங்கத்தின் தலைவர் திரு.ஏ. இளங்கோவன் அவர்கள். சென்னையில் உள்ள முன்னணி கிராபிக்ஸ் நிறுவனங்களில் ஒன்றான டிஜிஸ்கேப்பின் நிறுவனத் தலைவர். இவரது இளங்கோ மென்பொருள் கம்ப்யூட்டர்ஸ் மற்றும் ஆப்பிள் மேக்கின்டோஷ் கணிப்பொறிகளில் வேலை செய்யக் கூடியது. டெக்ஸ்டைல் டிசைன், டிடிபி, மல்டி மீடியா, இணையம் ஆகியவற்றுக்குப் பயிற்சியினையும் இவர் நிறுவனம் அளித்து வருகிறது. கணித்தமிழ் சங்கம் பற்றி குறிப்பிடும்போது, ''கணித்தமிழ் சங்கம் பல பெரிய திட்டங்களை வைத்திருக்கிறது. அதில் முக்கியமானவை பின்வருமாறு:



எல்லா தமிழ் மென்பொருள்/வன்பொருள் தயாரிப்பாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள், அறிஞர்கள், கணித்தமிழில் ஈடுபட்டிருக்கும் அமைப்புக்கள் எல்லோரையும் ஒரே குடையின்கீழ் கொண்டு வந்து அவர்களுக்கிடையில் ஒத்துழைப்பையும் கூட்டுழைப்பையும் ஏற்படுத்துவது. தமிழ் வளர்ச்சியாளர்களுக்கான எல்லா தொழில் நுட்ப, வர்த்தக, சட்டரீதியான உதவிகளையும் தருவது. கணித்தமிழ் தொடர்பான நடவடிக்கைகளை தரப்படுத்த உதவுவது. கணித்தமிழ் தயாரிப்புகளுக்கு சான்றிதழ் வழங்கி பதிவு செய்வதற்கு ஒரு பொதுவான வசதியைத் தருவது. கணித் தமிழ் தொடர்பான விஷயங்களில் அரசு நிறுவனங்களுடன் சர்வதேச அமைப்புகளுடனும் இணைந்து செயல்படுவது. கணித்தமிழில் ஈடுபடுபவர்களுக்கு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி, இன்குபேஷன் வசதி, துணிச்சல் மூலதன நிதி, கூட்டுமுயற்சி, தொழில் கூட்டு ஆகியவற்றில் உதவி செய்வது''.

தமிழில் தயாரிக்கப்படும் மென்பொருள்களுக்கு தமிழக அரசு நெறிப்படுத்தியபடி மென்பொருள் தயாரிக்கப்பட்டிருக்கிறதா? இல்லை? என்பதையும் அறியும் பொறுப்பை கணித்தமிழ் சங்கத்திடமே விட்டிருக்கிறது. கணித்தமிழ் சங்கம் உறுதியளித்த பிறகே தமிழக அரசு சான்றளிக்கும்.

"இதுவரை 10 தயாரிப்புகளுக்கு சான்றளிக்கப்பட்டுள்ளன. இன்னும் நான்கு சோதனைகள் இருக்கின்றன. முதலில் சான்றிதழ் பெற்றது விப்ரோ பிரிண்டர்கள். அவர்களது புதிய பிரிண்டர்களில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் பான்டுகள் இன்பில்ட்டு ஆக வன்பொருளிலேயே சேர்த்திருக் கிறார்கள். அந்த பான்ட் தர நிர்ணய குறியீட்டில் உள்ளதாகும்.

பான்டுகள், வேர்டு பிராஸஸர்கள் உள்பட எல்லா மென் பொருள்களிலும் பிரிண்டர்களில் உள்ள இன்பில்டு பான்டுகள், கீ போர்டுகள், போன்றவற்றுக்கு இதுவரை சான்றிதழ் தந்திருக்கிறோம். அவற்றில் பயன்படுத்தப்படும் தமிழ், தமிழ் இணையம் 99 க்கு பின் அரசு வெளியிட்ட ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள குறியீட்டு முறையை பின்பற்றியிருக்கிறதா, அவர்கள் தந்திருக்கும் விசைப் பலகை வடிவமைப்பும் அரசின் தமிழ் 99 வடிவமைப்பை ஒத்திருக் கிறதா என்பதைப் பார்த்து அவற்றுக்கு மட்டுமே சான்றளிப்பு தருகிறோம். இது பயனாளிகளின் நலனுக்காகவே செய்யப்படுகிறது. அரசு அலுவலங்களுக்காக வாங்கப்படும் ஒவ்வொரு புதிய கம்ப்யூட் டரிலும் ஒரு புதிய, சட்டப்பூர்வமான தமிழ் மென்பொருளும் சேர்த்து வாங்க வேண்டும் என்று அரசு முடிவெடுக்க வேண்டும். ஒரு கம்ப்யூட்டர் வாங்கினால் அதற்காக ஒரு விண்டோஸையும் வாங்குகிறோம் இல்லையா? அதைப்போலவே, தமிழ்மென் பொருளையும் வாங்க வேண்டும் தமிழ் மென்பொருள் இலவசமாக கொடுக்க வேண்டும் என்றோ அல்லது அடிமாட்டு விலைக்குத் தரவேண்டும் என்றோ எதிர்பார்க்கக் கூடாது. இந்த விஷயத்தில் அரசு உறுதியாக நடந்து கொள்ள வேண்டும். அது சரியாக இருந்தால் போதும் எல்லாவித தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கும் தமிழுக்கு கிடைக்க, எமது சங்க உறுப்பினர்கள் பாடுபட வசதியாக இருக்கும்.

இப்போது சங்கம் ஒரு சான்றளிப்பு நிறுவனமாக உள்ளது. விரைவில் இது ஒரு தரக்கட்டுப்பாடு நிறுவனமாகவும் மேம்படும். அத்துடன் தமிழ் வளர்ச்சிக்கான செயல்பாட்டு மையமாகவும் வளரும். இப்போது, உடனடியாக யுனிக்கோடில் தமிழுக்கு அளிக்கப்பட்டுள்ள இடம் குறித்து சில ஆய்வுகளை மேற் கொண்டிருக்கிறோம். நிறைய பணிகள் காத்திருக்கின்றன.'' என்று தெரிவித்தார்.

கணித்தமிழ் சங்கத்தின் செயலாளரான திரு. ஆண்டோ பீட்டர் சங்கத்தின் பிற பணிகளை குறிப்பிடும்போது, ''வளர்ந்து வரும் சமூகச் சூழலுக்கு - ஏற்ப தமிழர்களும் கணிப்பொறி படிப்பை கற்றுக் கொள்ள வேண்டி இருக்கிறது. அப்படிப்பிற்கான புத்தகம் என்பது விலை அதிகம் என்பதால், புத்தகங்கள் அனைத்தையும் வாங்கி நூலகம் அமைக்க இருக்கிறோம். கணிப்பொறித் துறையில் புதுப்புதுக் கருவிகளுக்கும், கணிப்பொறியில் பயன்படுத்தப்படும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழில்நுட்ப வார்த்தைகளுக்கும் தமிழ்ச்சொற்களை உருவாக்கி எங்கள் 'வெப்' தளத்தின் மூலம் அறிமுகப்படுத்தவிருக்கிறோம். இப்படி மாதம் 200 சொற்களையாவது அறிமுகம் செய்யவிருக் கிறோம் என்றார் திரு. ஆண்டோபீட்டர். கணித்தமிழ் சங்க உறுப்பு நிறுவனங்களாக உள்ளவை: 'ஆப்பிள் சாப்ட்' திரு. அன்பரசன், இந்திய அளவில் மொழிகளின் திறமைக்காக மட்டுமே இயங்கும் நிறுவனங்களில் ஆப்பிள்சாப்ட்டும் ஒன்று? எம்.எஸ். டாஸில் தமிழ் இயங்கும் முறை, விண்டோஸ் மெனு பட்டியலை தமிழில் பார்வையிட சிறப்பம்சம், விண்டோஸ் அப்ளிகேஷனின் தமிழை பயன்படுத்த மென்பொருள்கள் எனப் பல சேவைகளை இந்நிறுவனம் வழங்குகிறது. புதிய கண்டுபிடிப்புகளை தயாரிக்க தமிழக அரசு அளிக்கும் பொருள் தயாரிப்பு மானியமும் இந்நிறுவனத்துக்கு அளிக்கப்பட்டுள்ளது. கணிப்பொறி வாயிலாக தமிழை போதிக்கும் இவருடைய சி.டி. புகழ்பெற்றதாகும்.

கேட் கிராப்ட் கம்ப்யூட்டர்ஸ் திரு. இளங்கோவன், சென்னைக் கவிகள், சைபர்வேல்டு திரு.கே. ஆனந்த், ஜி.கே.எஸ்.ஆர். குருப்ஸ், கணிணி கன்சல்ட்ஸ் திரு. பிரேம்குமார், லேஸ்டெக் சிஸ்டம்ஸ் திரு. துலுக்காணம், லேர்ன் சாப்ஃட் சிஸ்டம்ஸ் திரு.வி. கிருஷ்ண மூர்த்தி, மாடுலர் சிஸ்டம்ஸ் எம்.என்.கூப்பர், பி.எம். ஸாப்ட்வேர்ஸ் திரு.ப. செல்லப்பன், சாப்ட்வியூ கம்பியூட்டர்ஸ் திரு. மா. ஆண்டோ பீட்டர், வள்ளி சாப்ட்வேர்ஸ் திரு. ஆனந்தன், தினகரன் நாளேட்டின் நிர்வாக ஆசிரியர் திரு. குமரன், கம்யூட்டர் நேரத்தின் ஆசிரியரான திரு. பாலசுப்பிரமணியம், கணிமொழி ஆசிரியரான திரு. செ.ச. செந்தில்நாதனும், கணித்தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினராக உள்ளபிற உறுப்பினர்கள்: டாக்டர் கு. கல்யாண சுந்தரம், டாக்டர்.கே. ஸ்ரீனிவாசன், டாக்டர்.எம். கணேசன், டாக்டர்.எஸ். குப்புசாமி, டாக்டர் கே.எம். மோகனசுந்தரம், டாக்டர் கே. சாருகேசி, திருமதி. பி.டி. தமிழ்செல்வி, பேரா திரு. என். தெய்வசுந்தரம், திரு.எம். சிவலிங்கம், திரு. சா. அ. சௌரிராசன், நீதி, போன்ற பலரும் உறுப்பினர்களாக உள்ளனர்.

கணிதத் தமிழ் சங்கம், கணித்தமிழ் 2001- கணிப்பொறி விழா என்கிற தலைப்பில் டிசம்பர் 23, 24, 25 தேதிகளில் மதுரை, இராஜா முத்தையா மன்றத்தில் விழாவினை நடத்துகிறது. அதன் செயல்பாடுகளை விவரிக்கும் அறிக்கை இதோ:

கணித்தமிழ் 2001 - கணிப்பொறித் திருவிழா, தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கையோடு கணிப்பொறியையும் இணையத்

www.tamilarangam.net

தொழில் நுட்பத்தையும் இணைக்க வருகிறது. தமிழையும், தமிழ் மக்களையும், நவீன தொழில் நுட்பத்தையும் ஒரே மேடையில் சங்கமிக்க வைக்கிறது.

இந்த உன்னதமான உணர்ச்சிமிக்க திருவிழா நடைபெறப் போவது வேறெங்கும் அல்ல. முச்சங்கம் வைத்து முத்தமிழ் வளர்த்த முக்கூடல் மதுரை மாநகரில்தான். தமிழகத்தின் மையத்தில் அமைந்துள்ள மதுரை நகர் தமிழ் நாட்டின் அனைத்துப் பிரிவு மக்களையும் ஈர்த்திழுக்கும் வல்லமை பெற்றது.

மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, இராமநாதபுரம், தேனி, விருதுநகர், ஆகிய மாவட்டங்களிலிருந்து ஐந்து லட்சம் மக்களை மதுரை நகரில் திரள வைத்து, கணிப்பொறிப் பயன்பாட்டை மக்களிடம் கொண்டு செல்வதே கணித்தமிழ் 2001 திருவிழாவின் நோக்கம்.

மதுரையில் திரளும் மக்கள், கணிப்பொறியையும் இணையத்தையும் பார்த்து, உணர்ந்து, திளைக்க கணித்தமிழ் 2001 வழிவகுக்கும். இத்திருவிழாவிற்குப் பின் இவர்களின் எளிய வாழ்க்கை பயனுள்ளதாக பல பரிமாணங்களைக் கொண்டதாக மாறும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இது ஒரு தொடக்கம். கணிப்பொறித் திருவிழா ஆண்டு முழுவதும் தொடரும். தமிழ்நாட்டின் நகரத்து மக்களை மட்டுமின்றி கிராமத்து மக்களையும் சென்றடையும்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் உள்ளவர்கள் தங்கள் படைப்பையும் திறத்தையும் மக்களிடம் எடுத்துச் செல்ல இது ஓர் அரிய வாய்ப்பு.

நீங்கள் உருவாக்கிய கணிப்பொறிச் சாதனங்கள், மென் பொருள்கள் மூலமாக மக்களின் வாழ்க்கையை நலமாக்கவும் வளமாக்கவும் இதுவரை நீங்கள் ஆற்றியுள்ள பணிகளை, ஆக்கியுள்ள படைப்புகளை மக்களின் பார்வைக்குக் கொண்டு செல்ல இந்தக் கணிப்பொறித் திருவிழா ஒரு நல்வாய்ப்பு.

**கணித்தமிழ் 2001-ஒரு புதுயுகத்தின் விடியல்**

கணித்தமிழ் 2001 தமிழ்நாட்டில் புதிய யுகத்தைத் தொடங்கி வைக்கிறது. நோக்கம் எளிது. ஆனால் உன்னதமானது. தமிழ் நாட்டின் அனைத்து மக்களிடையேயும் கணிப்பொறி விழிப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புணர்வைப் பரப்ப வேண்டும், மாநிலத்தின் மூலை முடுக்கெல்லாம் கணிப்பொறியின் பயன்பாட்டை எடுத்துச் செல்லவேண்டும் என்பதைத்தலையாய நோக்கமாகக்கொண்ட இது போன்ற திருவிழா இதற்கு முன் எங்கும் நடந்ததில்லை.

**இணைய வெளியில் இனிய தமிழ்**

உலகின் பழமை வாய்ந்த உயர்தனிச் செம்மொழிகள் ஐந்தில் இன்றளவும் மக்களின் பயன்பாட்டில் உள்ள ஒரே மொழி தமிழ். தமிழின் பிறப்பை வரலாற்று அறிஞர்களும் கணிக்க முடிந்ததில்லை. தமிழ்மொழியின் இலக்கியம் 5000 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. இன்றைக்கு வழக்காற்றில் நவீன மொழியாகவும் வரலாற்றில் வளமான மொழியாகவும் வளர்ந்து நிற்கிறது. ஒரு நாட்டு மொழியை ஏற்றுக்கொள்ளாத கணிப்பொறி அந்நாட்டில் இயங்க முடியாது. கணிப்பொறியை ஏற்றுக்கொள்ளாத ஒரு மொழி வாழ முடியாது என்பது வரலாற்று உண்மையாகிவிட்டது. இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்னும் முத்தமிழோடு நான்காம் தமிழாய் கணித்தமிழ் உருவாகியுள்ளது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்து திணைகளோடு ஆறாவது திணையாக 'இணையம்' உருவெடுத்தது. இணையத்தில் நூற்றுக்கணக்கான தமிழ் வலைத்தளங்கள் உள்ளன. தமிழ் மின்னிதழ்களும் ஏராளமாய் உள்ளன. தமிழ் பேசும் மக்கள் தங்களுக்குள்ளே கடந்த 15 ஆண்டுகளாகவே தமிழில் மின்னஞ்சல் பரிமாறிக் கொள்கின்றனர்.

**தமிழ்நாட்டு மக்களைச் சென்றடைதல்**

கணிப்பொறி, இணையம் ஆகியவற்றின் பயன்பாடு பெருநகரங்களோடு மட்டுமே நின்றுவிடக்கூடாது. மாநிலத்தின் மூலை முடுக்கெங்கும் சென்றடைய வேண்டும். மக்கள் தங்கள் வாழ்க்கை மேம்பாட்டுக்கு கணிப்பொறியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கணிப்பொறித் தொழிலில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினரும் முதன்முறை சந்திக்கும் வாய்ப்பை கணித்தமிழ் 2001 தருகிறது. செயல்படுபவர்களையும் பயன்பெறுபவர்களையும் ஒரே அரங்கினில் சந்திக்க வைத்து, அவர்களுக்கிடையே நிலவும் இடைவெளியை நீக்க உதவுகிறது. கணித்தமிழ் 2001. நீங்கள் தகவல் தொழில்நுட்பத் துறையில் இருப்பவராயின் இந்த வாய்ப்பினை இழக்கக்கூடாது. உங்களையும் உங்கள் தயாரிப்புகளையும் தமிழ்நாடு முழுக்க அறிமுகப்படுத்த இந்தத் திருவிழா உதவுகிது.

www.tamilarangam.net

**கணித்தமிழ் 2001 - விரிவான ஏற்பாடுகள்**

அடையவேண்டிய இலக்கு - ஆற்ற வேண்டிய பணியின் ஆழ அகலங்களைக் கருத்தில் கொண்டு, கணித்தமிழ் 2001 மிகப்பெரிய அளவில் ஏற்பட்டுள்ளது. 5 லட்சத்துக்கும் அதிகமான பார்வை யாளர்கள் வருவார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. அனுபவம் மிக்க ஒரு மேலாளரின் மேற்பார்வையில், பல்வேறு நிலைகளில் அமைந்த அமைப்புக் குழுக்கள் இவ்விழாவின் ஒவ்வொரு நுணுக்கமான அம்சங்களையும் கவனித்துக் கொள்கின்றன.

மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம், தேனி, விருதுநகர் ஆகிய ஆறு மாவட்டங்களின் நகரங்களிலும், கிராமங்களிலும் மாவட்டக் குழுக்களும் துணைக் குழுக்களும் உருவாக்கப் பட்டுள்ளன. இந்த விழாவின் செய்தி ஆறு மாவட்டங்களிலுமுள்ள அனைத்துப் பள்ளிகள், கல்லூரிகளுக்குச் சென்று சேரவும், கணித்தமிழ் 2001 திருவிழாவில் ஏராளமான மக்களைப் பங்குபெறச் செய்யவும் இக்குழுக்கள் துணைபுரியும். கணிப்பொறித் திருவிழாச் செய்தியை பரப்பிட பல்வேறு வகையான விளம்பர உத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**கிராமங்களில் ஒலிபெருக்கி அறிவிப்புகள்**

பிரபலமான தொலைக்காட்சி அலைவரிசைகளில், உள்ளூர் கேபிள் தொலைக்காட்சியில் விளம்பரங்கள், ஆசிரியர் மாணவர்களுக்கு சலுகைக் கட்டணத்தில் போக்குவரத்து, ஆயிரக்கணக்கில் சுவரொட்டிகள், செய்தித்தாள் விளம்பரங்கள். இதுமட்டுமன்று, கணிப்பொறித் திருவிழாவில் பொதுமக்கள் பெருமளவில் பங்கேற்கும் ஏராளமான பொழுதுபோக்கு, கலை, பண்பாட்டு நிகழ்ச்சிகள், வினாடி-வினாப் போட்டிகள், கருத்தரங்கு, விவாதங்கள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. நமது அன்பான குழந்தைச் செல்வங்கள் இணையத்தை கற்றுக் கொள்ளவும், தங்கள் திறனைக்காட்டி ஏராளமான பரிசுகள் பெறவும் வாய்ப்புகள் உண்டு. மாணவர்களுக்கு எதிர்காலப் படிப்பு, வேலை வாய்ப்புகள் பற்றி ஆலோசனைகள் உண்டு. வேலை தேடுவோர்க்கும் வேலைக்கு ஆள் தேடுவோர்க்கும் உதவும் வகையில் ஆலோசனைகள் உண்டு.

**மதுரையில் சந்திப்போம், சங்கமிப்போம்**

தமிழ்ப் பண்பாட்டை வளர்த்ததில் மதுரைக்கு நீண்ட வரலாறுண்டு. கணிப்பொறித் துறையிலும் இந்தப் பங்களிப்புத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர கணித்தமிழ் 2001 கணிப்பொறித் திருவிழா வழிவகுக்கும். தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள், இணைய சேவையாளர்கள், கல்வி / பயிற்சிநிலையங்கள், உற்பத்தியாளர்கள், விநியோகிப்போர், விற்பனையாளர்கள், அறிஞர்கள், பொதுமக்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரும் முதன்முறையாக ஓரிடத்தில் சங்கமிக்கும் சந்திப்புக் களமாய்த் திகழப் போகிறது. எனவே கட்டாயம் மதுரைக்கு வாருங்கள். தமிழ்நாட்டுக் கணிப்பொறித் தொழில்துறையின் வரலாற்றில் தடம் பாதிக்கும் வாய்ப்பை நழுவவிடாதீர்.

**கணித்தமிழ்ச் சங்கம்**

லாப நோக்கில்லாத அமைப்பான கணித்தமிழ்ச் சங்கம், கணித்தமிழ் 2001 திருவிழாவின் இயக்கு சக்தியாக உள்ளது. கணித்தமிழ்ச்சங்கத்தின் பல்வேறு நோக்கங்களுள் மாநிலத்தின் மூலை முடுக்கெங்கும் கணிப்பொறிப் பயன்பாட்டைப் பரவலாக்குவதே முதன்மையானது. கணிப்பொறி விழிப்புணர்வை கிராம அளவிலும் கொண்டு செல்வதன் மூலமே கணிப்பொறி மென்பொருள் வன்பொருள் பயன்பாட்டைப் பரவலாக்க முடியும் என்று கணித்தமிழ்ச் சங்கம் உறுதியாக நம்புகிறது. அது மட்டுமின்றி, தமிழ்நாடு, அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக, மின் - அரசாண்மை, மின்-கல்வி, மின்-வணிகம், மின்-தொடர்பு இவற்றின் முழுப் பயனையும் கைவரப் பெற்ற முதல் மாநிலமாகத் திகழ இது வழிவகுக்கும்.'' என கணித்தமிழ்ச் சங்க அறிக்கை குறிப்பிடுகிறது.

**புதிய கணிச்சொற்களுக்கான இணையத் தளம்**

''கணிப்பொறி மற்றும் இணையம் சார்ந்த ஆங்கிலச் சொற்களுக்கு இணையாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையிலமைந்த தமிழ்ச் சொற்கள் உருவாக்கப்படவேண்டும் என்பது சிங்கப்பூரில் நடைபெற்ற தமிழ் இணையம் 2000 மாநாட்டில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகளில் ஒன்றாகும். இதனடிப்படையில் தற்போது www.tcwords.com என்ற வெப் தளம் உருவாக்கப் பட்டுள்ளது. இத்தளத்தில் கணிப்பொறியிலும் இணையத்திலும் பயன்படுத்தப்படும் முக்கியமான ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. இத்தளத்தைப் பார்வையிடுவோர் அவர்கள் ஏற்றுக் கொள்ளும் சொல்லைக் குறிப்பிடுவதோடு, பட்டியலிலிருக்கும் சொற்களை விடப் பொருத்தமானது என்று அவர்கள் கருதும் புதிய சொல்லையும் தெரிவிக்கலாம். இவ்வகையில் பெரும்பான்மையினர் ஏற்றுக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கொள்ளும் தொழில்நுட்பச் சொற்கள் கொண்ட ஒரு பட்டியல் ஆங்கில அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்டு இணையத்தில் வெளியிடப்படும். இத்தகைய முயற்சி வேறெந்த மொழியிலுமில்லாத புதிய முயற்சியாகும்.' என்று தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் துணைத் தலைவர் முனைவர் மு. ஆனந்தகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கணியன்



TAMIL
NEWS

MAANAVAN

TAMILINKS

SEE INDIA

இன்று தமிழகம் - இந்தியா

தலைப்புச் செய்திகள்

போர் நிறுத்தம் அமுலில் இருந்தாலும் பாகிஸ் தான் நடவடிக்கைகள் உன்னிப்பாகக் கண்காணிப்பு!
அத்வானி பேட்டி!

பழி வாங்குவதைத் தவிர வேறு எதையும் கருணாநிதி செய்யவில்லை: சட்டசபை தேர்தலில் தி.மு.க.வை அழிப்போம்
ஜெயலலிதா ஆவேசம்

கிறிஸ் துமஸ் :
தலைவர்கள் வாழ்த்து
ஒவ்வொருவர் வாழ்விலும் வளமும் நலமும் செழிக்கட்டும்
- முதல்வர் கருணாநிதி

ஜெயலலிதாவைச் சந்தித்ததால் ரஜினிகாந்த் என்னைத் தவறாக நினைக்க மாட்டார்
சோ சொல்கிறார்

எம்.ஜி.ஆர். சமாதிக்கு ஜெயலலிதா அமைதி பேரணி
ராசாராம், திருநாவுக்கரசு ஆகியோரும் மலர் அஞ்சலி செலுத்தினர்

இணைய யுத்தம்:
பாகிஸ் தானுக்கு இந்தியா பதிலடி!

சண்முகம் அரசுக்குத் தந்த ஆதரவு திரும்ப பெறப்பட்டது:
தேர்தலைச் சந்திக்க கண்ணன் புதிய வியூ கம்!
வாஜ் பாயைச் சந்திக்க டில்லி புறப்பட்டார்!

மாயாவி வீ ரப்பனைச் சுட்டுப் பிடிக்க முடிவு
ஹெலிகாப்டரில் தேடுதல் வேட்டை

தாமரைக்கனி எம்.எல்.ஏ. பிரச்சினை:
முதல்வர் கருணாநிதியுடன் கலந்து பேசுவேன்

ப. சோழநாடன்

www.tamilarangam.net

கணியன்.காம் என்னும் 'கணியன் வலையம்' 1997-ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ந் தேதி, நா. கோவிந்தசாமி அவர்களால் தொடங்கப்பட்டது. கணியனின் தமிழக செய்திகளை தொகுத்து 'கணியன் தமிழ் செய்தி' என்ற பெயரில் கொடுத்து வந்தார். இத்துடன் பிரமுகர்களின் பேட்டிகள், சினிமா தகவல்கள், சிறப்புத் தொகுப்புகள் என கணியன் வளர்ந்தது.

இந்திய சுதந்திர பொன்விழாவைக் குறிக்கும் வகையில் 'இந்தியா 50:50' என்ற சிறப்புத் தொகுப்பு, 'மாணவன்' என்று மாணவர்களுக்கான இதழ்; 'நாடகன்' இதழில், நாடக எழுத்தாளர்களின் படைப்புக்கள், விமர்சனங்கள் என வெளிவந்தது. இதில் ந.முத்துசாமி, கா. சிவத்தம்பி, சிதம்பர நாதன், மௌன குரு போன்ற நாடக வல்லுனர்களின் பேட்டிகள் இடம்பெற்றன. சில நாடகங்களின் சிறு பகுதிகளும் இடம் பெற்றன.

1997-ஆம் ஆண்டு வரவு, செலவு அறிக்கையை சென்னை தொலைக்காட்சி நிலையம் அளித்ததை அப்படியே உடனுக்குடன் செய்தித் தொகுப்பாக கணியனில் வெளியிட்டார். பின்னர் தமிழகத்தில் அம்முறையை பலரும் பின்பற்றினர்.

1998-ஆம் ஆண்டு கணியனில் 'தமிழ்' இணைய நாளிதழ் தொடங்கப்பட்டது. தொடர்ந்து மூன்றாண்டுகளாக விடுமுறையின்றி வெளிவந்து கொண்டிருக்கும் ஒரே நாளிதழ் இதுதான்.

## இன்தாம்.காம்

ஒப்பற்ற இணைய தளம்

1998 ஆம் ஆண்டு ஏப்ரல் 4 ஆம் நாள் 'இன்தாம் இணையம்' சென்னையில் தொடங்கப்பட்டது. இன்று உலகில் 80 நாடுகளில் ஒரு மாதத்திற்கு 20 இலட்சம் பேர் இன்தாம் இணையத்தைப் பயன்படுத்துகின்றனர்.

நோக்கம்: உலகம் முழுவதும் 65 க்கும் மேற்பட்ட நாடுகளில் எட்டு கோடிக்கும் மேலாக வாழ்கிற தமிழர்கள், தங்களுக்குள் அறிவியல், வணிகம், தொழில் நுட்பம் போன்றவற்றை பரிமாறிக் கொள்ளவும், தமிழர்களிடையே தொழில் வணிக உறவுகளை உருவாக்கவும், சிதறுண்டிருக்கும் நம்மவர்களின் பொருளாதார வளத்தை ஒருங்கிணைத்து, உலகளாவிய, வலிமைபெற்ற சமுதாயமாக உயர்த்த 'இன்தாம்' இயங்கி வருகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன் தாம் INTAMM

INTAMM International Tamils PowerBase

Click here to download Tamil Font to read Tamil web pages
Frequently Asked Questions

Why INTAMM? - Tamil English

Click to get a $5 gift certificate from: amazon.com

Please click here to visit our sponsor

## INTAMM's Online Information Source

**Business Directory** Database of the World Tamil Business Community. — Keyword Search | Guided Search | Members

**Professionals Directory** Database of the World Tamil Professional Community. — Keyword Search | Guided Search | Members

## Intamm Advertising Tariffs

**Intamm Noolakam** With Tamil Search! Catalogue of Tamil books on various topics categorised by Publishers.

**Intamm Forums** - if you want to talk...talk.

## INTAMM's Encyclopedia for the Tamil Community :

**The biggest online reference with 40,500 pages of information in both Tamil and English**

**Countries**
Malaysia, Singapore, Australia, Mauritius, Fuji, Reunion...

**Culture**
Religious, Harappa, Contribution, Sangam Age, Islamic...

**Drama**
History of Tamil Drama, Writers, Groups, Sankara Das, Pammal Sambandha mudaliar.

**History**
Kumari Kandam, Pandyas, Birth Place of Tamils, Tamilnadu, Karanthai, Cheras, Nawabs...

**Eelam**
Introduction, History, Genocide, Human Rights...

**Fine Arts**
Architecture, Temple, Painting, Music, Dance, FolkSongs...

**Folk Arts**
Naattar Paadalgal, Thaalaattu, Themmaangu, Koothu ...

**Grammer**
Tholkappiam, Nannool, Tamil Ilakkanam, Oppial, Aaitham ...

**Geography**
Natural Resources of Tamil Nadu ...

**Education**
Agriculture, Bio-Tech, Drama, Plastic, Madras Varsity...

**Industry**
Introduction, For the Investors, Govt. Agencies...

**Journalism**
Magazines, Old Magazines, News Magazines, Muslims

**Literature**
Tamil Literature, Modern Literature, Cinema, Aesthetics, Nannan, A Bird's eye view, Tamil Neyam ...

**Linguistics**
Dravidian Studies by Missionaries, Tamil, Dravidian Languages, Centhamizh, Oppial, Tholkappiam...

**Organisations**
India, Norway, USA & Canada, Tamil Sangams, Justice Party, Suyamariyathai Iyakkam, Achievements, Thani Thamizh Iyakkam...

**Medicine**
Siddha, Thirumoolar, Surgery, Ayurvedha, Tholkappiyar, Thirumanthiram, Tamil Method, Thirukkural, Varma, Medication in Folk Songs, Siddhars' Paadalkal ...

## Winnosai - Internet only Tamil News

**Updated 3 Times a day now! at Indian Standard Time**

- India News : 08.00 AM - 05.30 PM
- Headlines : 08.45 PM
- Sports News - Business News
- Weather News
- News from Eelam - Malaysia - Singapore

**INTAMM's Magazines** 16 different topics in Tamil

**Vanakkam Chennai - The complete e-guide with 2000 pages of information about Chennai. Sponsored by Madura Travels Pvt. Ltd Chennai.**
**Now Chennai News updated daily at 05.00 PM IST.**

**Panithuli** (Wednesday) - Magazine for the young in mind!
**Olioviyam** (Thursday) - Cinema Magazine
**Chennai Suvarkal** (Friday) - Photo Magazine on Chennai walls
**Ilakkiya Salaram** - Internet's Monthly magazine on Tamil Literary
**Suvadi** - Magazine on Books and Publishers
**Pudhiya Kalvi** - Magazine on Environment
**Ettrumathi Ulagam** - Tamil Magazine on Export Opportunities
**Tamil Computer** - First Tamil Magazine on Computer and IT industry
**Maruthuva Ariviyal Malar** - Tamil Magazine on Medicine
**Poovulagu** - Tamil Magazine on Awareness
**Mooligai Mani** - Tamil Magazine on Naturopathy
**Valar Thozhil** - First Tamil Magazine on Business
**Music World** - Tamil Commercial Music Magazine
**Sarigamapathani** - Magazine for Classical Music in Tamil
**Naveena Velanmai** - Magazine for Agriculture industry
**Manitha Neyam** -Tamil weekly on Humanisam

## INTAMM's Services

**Download** - and install our Tamil TrueType font **Webtamil.ttf** to view Tamil pages.

www.tamilarangam.net

இன்தாமில் 8 பிரிவுகள் உள்ளது

1. தொழில் நெறிஞர் இணைப்பு (Professional link)
2. வணிக இணைப்பு (Business link)
3. தகவல் களஞ்சியம் (Information pool)
4. மின் இதழ்கள் (E-magazines)
5. புத்தக உலகம் (Book World)
6. பெண்கள் பக்கம் (Women pages)
7. தமிழ் பெயர்கள் (Tamil names)
8. வாழ்த்து அட்டைகள் (Greeting Cards)

**1. வணிக இணைப்பு:**

இன்தாமின் முதன்மை தேவையாக கருதுவது வணிக இணைப்பே! இன்தாம் வணிக இணைப்பில் உங்கள் நிறுவனத்தைப் பதிவு செய்வதன் மூலம் வணிகம் குறித்த தகவல்கள் உலகம் முழுவதும் உரியவர்களுக்கு சென்றடையும். இன்தாம் வணிக இணைப்பில், நிறுவனத்தைப் பதிவு செய்வதன் வாயிலாக உள்ளூர், உள்நாட்டு மற்றும் உலகளாவிய மனித உறவை ஏற்படுத்திக் கொள்ள வழி பிறக்கிறது.

**2. தொழில் நெறிஞர் இணைப்பு:**

தமிழர்களிடையே விளைந்து செழித்த கல்வியாளர்கள், அறிவியாலாளர்கள், தொழில்நுட்ப மேதைகள் மற்றும் பல்வேறு துறைகளில் அனுபவம் பெற்ற தொழில் நெறிஞர்கள் (Professionals) அனைவரும் ஒருவரோடொருவர் உறவு கொண்டு புதிய எல்லைகளை விரிவு செய்துகொண்டு... வெற்றிகள் பல பெற இவ்விணைப்பு உதவுகிறது.

**3. தகவல் களஞ்சியம்:**

தகவல்களால்தான் இன்றைய உலகம் மூச்சு விட்டுக் கொண்டிருக்கிறது. இன்தாம் இணையத்தின் பிரம்மாண்டங்களில் தகவல் களஞ்சியமும் ஒன்று. இதனை தமிழர் கலைக்களஞ்சிய மாகவும் கொள்ளமுடியும். தமிழகத்தை விட்டு பல்லாயிரம்கல் தொலைவில் வாழும் தமிழர்கள் - தமிழ், தமிழ்நாட்டைப்பற்றி அறிந்துகொள்ள உதவும் என்சைக்ளோபீடியாவாக இப்பகுதி விளங்குகிறது. தமிழ்மொழி வரலாறு, தமிழின வரலாறு, தமிழ்நாட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரலாறு, கல்வி, பண்பாடு, மொழியியல், நாட்டுப்புறவியல் நாடகம், சிற்பம், ஓவியம், கோயில், பரதம், தமிழக தொழில் துறை, தொழில் நுட்பம், மருத்துவம், வணிகம், அரசியல், சுற்றுலா, சமயம், கல்வெட்டு, தத்துவம், திரைப்படம், புவியியல், தமிழ்ச் சங்கங்கள், தமிழர் வாழும் நாடுகள், நூலகவியல், தமிழ்ச் சான்றோர்கள், தமிழிசைச் செல்வர்கள், தமிழ்நாட்டின் ஒவ்வொரு ஊருக்கான வரலாறும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இப்பகுதி, வெளிநாட்டுத் தமிழர்கள், எதைத் தேடினாலும் கொடுக்கக்கூடிய பகுதியாக வளர்ந்து வருகிறது. இன்தாம் இணையத்தில் 50,000 பக்கங்களைக் கொண்ட 26 துறைகளை உள்ளடக்கிய 'தகவல் களஞ்சியம்' உருவாக்கப்பட்டுள்ளது. இதில் 3000 தலைப்புகளில் பல செய்திகள் இடம் பெற்றுள்ளன. தமிழ் இணைய உலகில் இதுவே முன்னோடி. தமிழ் கலைக் களஞ்சியம் போன்று இதனை உருவாக்கிய ப. திருநாவுக்கரசின் பெருமுயற்சி குறிப்பிடத்தக்கது.

**4. மின் இதழ்கள்:**

தமிழகத்தில் முதன் முதலாக இணைய இதழ்களை இன்தாமே தொடங்கியது. பல்வேறு துறைகளுக்கும் 17 இதழ்கள் வெளி


இலக்கியச்சாரம்

Download the webtamil ttf Tamil font to view this magazine
Monthly magazine on Tamil literature from [illegible]

ஆசிரியர் — சா.அ.சௌரிராசன்

பொறுப்பாசிரியர் — ப.திருநாவுக்கரசு

மே |Home |Back Issues| சாளரம்- 11

இலக்கியச் சாளரம் வாசகர்களுக்கு,
இந்த இதழில் பல் புதிய பகுதிகள் இணைக்கப்பட்டுள்ளது.புலம்பெயர்ந்த வ
ாசகர்களிடமிருந்து படைப்புகளை எதிர் பார்க்கிறேன்.
உங்கள் நண்பர்களிடமும் 'இலக்கிய சாளரம்' இணைய தளம் பற்றி தகவலை தெ
ரிவியுங்கள்.

பொருளடக்கம்

- தமிழின் நவீன கவிதைகள்
- மொழி பெயர்ப்பு கவிதைகள்
- கஞ்சம் (சிறுகதை)
- இலக்கியவாதி அறிமுகம்

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

www.tamilarangam.net

வருகின்றன. இன்தாமின் சிறப்புக்களில் இணைய இதழ்களுக்கு பெரும் பங்குண்டு.

1. நாளிதழ் - விண்ணோசை - இதில் இந்திய செய்திகளை தவிர சிங்கப்பூர், மலேஷிய, ஈழ, கனேடிய செய்திகளும் இடம் பெறுகின்றன.

2. சினிமா - ஒளியோவியம் - வார இதழ். இந்த இதழுக்கும் பெருத்த வரவேற்பு உள்ளது. இதன் ஆசிரியர் : செய்யாறு பாலு.

3. பல்சுவை இதழ் - பனித்துளி - வார இதழ்

4. இலக்கியம் - இலக்கியசாளரம் - மாத இதழ், ஆசிரியர் ப. திருநாவுக்கரசு.

5. நுண்கலை - கவின் - மாத இதழ் - இதன் ஆசிரியரும் ப. திருநாவுக்கரசு.

6. புத்தகம் - சுவடி - இருமாத இதழ் - இதன் ஆசிரியர் சூரிய சந்திரன்.

7. சென்னை - சென்னைச் சுவர்கள் - இருமாத இதழ்

8. மனிதாயம் - மனிதநேயம் - மாத இதழ்

9. கம்ப்யூட்டர் - தமிழ் கம்பியூட்டர் - மாத இதழ்

10. தொழில் - வளர்தொழில் - மாத இதழ்

11. விவசாயம் - வேளாண்மை - மாத இதழ்

12. சுற்றுச்சூழல் - புதிய கல்வி - மாத இதழ்

13. இசை - மியூசிக் வேல்டு - மாத இதழ்
சரிகமபதநி - காலாண்டு

14. மருத்துவம் - மருத்துவ அறிவியல் மலர் - மாத இதழ்
மூலிகைமணி - மாத இதழ்

15. ஏற்றுமதி - ஏற்றுமதி உலகம் - மாத இதழ்

**புத்தக உலகம்:**

இன்தாம் இணையத்தின் மற்றொரு பக்கம், புத்தக பகுதி. இதில் 25,000 புத்தகங்களுக்கு நூல் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. 250 -க்கும் மேற்பட்ட பதிப்பாளர்களுக்கு இலவசமாகவே இணையப் பக்கங்கள் வடிவமைக்கப்பட்டும் மின்னஞ்சல் முகவரி இலவசமாக தரப்பட்டுள்ளது. 10,000 புத்தகங்களுக்கு தனிப்பக்கம் தரப்பட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓவியம்







நடனம்



# கவின்

ஆசிரியர்
சா.அ. சௌரிராசன்

பொறுப்பாசிரியர்
ப.திருநாவுக்கரசு

சிற்பம்

| Home | Download | Magazines | Winnosai | Olloviyam | Noolagam |

நுழைவாயில்

## கவின் இதழ் தொடக்க உரை

இன்தாம் - மேலும் ஒரு புதிய இதழை தொடங்கி இருக்கிறது. அதுதான்: 'கவின்' நுண்கலைகளுக்கான இணையதளமாக செயல்படும். ஓவியம், சிற்பம், நாட்டியம் என்ற முக்கலைகளின் சங்கமமாக அது இருக்கும். இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் நுண்கலைகளுக்கு தொடர்ச்சியான மரபு இருக்காது. தமிழ்நாட்டில் மட்டுமே இரண்டாயிரம் ஆண்டு மரபுத் தொடர்ச்சி இருக்கிறது. ஒவ்வொரு நுண்கலையையும் எடுத்துக் கொண்டு அதன் புதுமையையும் - பழமையையும் ஒப்பிட்டுக் காட்டி வருவோம். உலகம் முழுதுள்ள தமிழ்க்கலைஞர்களின் கை வண்ணம் பற்றி யார் வேண்டுமானாலும் செய்திகளையும் படங்களையும் அனுப்பலாம். நுண்கலைகளுக்கான இதழ் இல்லையே என்ற ஏங்கும் எண்ணங்களுக்கு வடிகாலாக 'கவின்' இருக்கும். நுண்கலைகளின் பண்டைய வரலாறு பற்றி அவ்வப்போது தொட்டுக்காட்டி விளக்குவோம். கிராமங்களிலும், இன்னும் நகரத்தின் இடுக்குகளில் உருத் தெரியாமல் இருக்கும் எண்ணற்ற கலைஞர்களின் இதய சாளரமாக கவின் இருக்கும். இனி இந்த் இணையம்பற்றி உங்கள் கருத்துக்தளை உடனடியாக தெரிவிக்க வேண்டுகிறோம்.

www.tamilarangam.net

# ஒளியோவியம்

S.தானுவின்

இந்தவாரம்

பாடல்கள்

தொடர்புக்கு

சினி Game

Intamm.com



## ஆளவந்தான் வித்தியாசமான படமா?

## - நடிகர் கமல்ஹாசன் பேட்டி

**Websites:**
http://www.aalavandaan.com/
http://www.intamm.com/aalavandaan



வாழ்க்கையை வித்தியாசமாக பார்ப்பவர்கள் எவ்வளவு குறைவாக உள்ளார்கள். அதை போலதான் தமிழ் சினிமாவை வித்தியாசமான கோணத்திலிருந்து பார்ப்பவர்கள் மிகவும் குறைவு. இதில் விதிவிலக்கானவர் என்ற கருத்து கணிப்பில் மிக அதிகப்படியான வாக்குகளை பெற்று முன்னணியில் நிற்பவர் கமல்ஹாசனாகதான் இருக்க முடியும்.

தற்போது கமல் நடிக்க ஆரம்பித்திருக்கும் 'ஆளவந்தான்' படம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. கமலுக்கு இது ஒரு சாதனை படமாக இருக்கும் என்பதை அந்த படத்தின் சில புகைப்படங்களே சொல்கின்றன.

சமீபத்தில் 'ஆளவந்தான்' பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் பேசியதிலிருந்து...

'ஆளவந்தான்' பற்றி சொல்லுங்களேன்?

கதாநாயகன் - வில்லன் என்ற இரண்டு மாறுபட்ட வேடத்தில் நடிக்கும் படம். எங்க ரெண்டு பேருக்கும் இடையில் மோதல் பலமாக இருக்கும், அதுக்காக எவ்வளவோ சிரமப்படப் போகிறோம். எவ்வளவோ முயற்சிகள் செலவுகள், இதுக்காக கமாண்டோ ஃபோர்ஸ் போய் ட்ரெய்னிங் எடுக்கிறேன். மொட்டை போடுகிறேன். இது ஒரு ஆக்ஷன் படம் என்றாலும், அதற்காக வெறுமனே முழுவதுமாக ஆக்ஷன் என்று சொல்லிவிட முடியாது. ஆக்ஷன், செண்டிமெண்ட் என்று எல்லாம் சரி விகிதமாக காத்து தருகின்றோம். இந்த 'ஆளவந்தான்' பல வருடங்களுக்கு முன் என் மனதில் உதித்தது. அந்த சமயத்தில் 'இதயம் பேசுகிறது' பத்திரிகையில் எழுதியது. இதை கே.பாலசந்தர் சாரிடம் சொல்லி ஆக்ஷன் படம் செய்ய ஆசைப்பட்டேன். ஆனால் அது முடியவில்லை. இது ஒரு மாறுபட்ட படமாக





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புத்தக அட்டை, ஆசிரியர் படமும் தரப்பட்டுள்ளது. மேலும் புத்தகத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள நூலின் தலைப்பு, ஆசிரியர், நூல் எந்த வகைப்பட்டது, பக்கம், விலை போன்றவையும், இது தவிர நூலின் சுருக்கம், மதிப்புரை, ஆசிரியர் வரலாறும் அந்த ஒரு பக்கத்தில் தொகுக்கப்பட்டுள்ளது. நூல் வாங்க விரும்புபவர்களுக்கு பெரும் நன்மையளிக்கும் விதமாக இப்பகுதி விளங்குகிறது.

**பெண்கள் பக்கம்:**

பெண்களுக்கான பக்கத்திலே கோலம், நகை, மருதாணி, சமையல் என்ற நான்கு பெரும் பகுதிகளைக் கொண்டது. கோலம் - பலவித கோணங்களில், புள்ளிகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோல வகைகளை இங்கு கற்றுக் கொள்ள முடியும். நகை அணி பகுதியில் எண்ணற்ற வகைகளில் பொன் அணிகளைக் காணலாம். பிற்காலத்தில் இப்பகுதி மின் - வணிக பக்கமாக மாற இருக்கிறது. பெண்கள் தங்கள் கை, காலகளில் வகை வகையான விதங்களில் மருதாணி இட்டுக் கொள்ள சிறப்பான முறையில் இப்பகுதி தயாராகியுள்ளது. சமையல் பகுதி 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட இணைய பக்கத்தில், சைவ சமையல், அசைவ சமையல், காரங்கள், இனிப்புகள் முதலியவை செய்யும் முறைப்பற்றி அழகிய படங்களுடன் விளங்குகிறது. இதை தொகுத்தவர் திருமதி. மணிமேகலை சௌரிராஜன்.

**தமிழ்ப் பெயர்கள்:**

தமிழன் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் முதல் குறியீடு பெயர். அதை தனித்தமிழில் அழகாக அமைத்துக் கொள்ள 5000 பெயர்கள், ஆண், பெண், குழந்தைகளுக்காக தொகுக்கப் பட்டுள்ளது. அகரவரிசையாக இதனையும் தொகுத்தவர் ப. திருநாவுக்கரசு.

வாழ்த்து அட்டைகள்: பிறந்த நாள், திருமண நாள், விழாக்கள் முதலிய திருநாள்களுக்கு மின்னஞ்சல் மூலம் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு அனுப்ப எண்ணற்ற வாழ்த்து அட்டைகள் பலவித அழகிய வாசகங்களுடன் வடிவமைத்து வைக்கப் பட்டுள்ளது. வேண்டியவர்களுக்கு எடுத்து அனுப்பலாம்.

இன்தாமின் உள்ளே: www.intamm.com என்று அடித்தவுடனே இன்தாமின் முதல் பக்கம் தோன்றும். அதில் 'அஆஇ' என்ற பகுதியைத் தட்டியவுடன் 'வெப் தமிழ் உருக்களை' தங்கள், கணினியில் இறக்கிக் கொள்ளலாம். முதல் பக்கத்தில் இன்தாமின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உள்ளடக்கம் முழுமையாக கொடுக்கப்பட்டிருக்கிறது. எதைப் படிக்க விரும்புகிறோமோ அதை மௌஸ் வைத்துத் தட்ட அந்த இணைய பகுதிக்குப் போகலாம்.

தமிழில் இன்று எவ்வளவோ இணையத்தளங்கள் இருந்தாலும் இது போன்ற தொரு பெரும் தகவல் தளத்தை இன்றுவரை காண முடியவில்லை. இதனை முழுமையாக உருவாக்கியவர் ப. திருநாவுக்கரசு என்பது குறிப்பிடத்தக்கது.




Click here to download Tamil Font to read Tamil web pages

Intamm - containing more than 60000 pages of information related Tamils and Tamil News

About - Tamilisai.com

- தமிழிசை ஆய்வுகள்
- தமிழிசை ஆய்வாளர்கள்
- தமிழிசை கல்லூரிகள்
- தமிழிசை வரலாறு
- தமிழிசைஞர்கள்
- தமிழிசைக் கருவிகள்
- தமிழிசை கற்போமா ?
- திரையிசையில் தமிழிசை
- தமிழிசை சொற்பொழிவுகள்
- தமிழிசை பாடகர்கள்
- தமிழிசை புலவர் வரலாறு
- தமிழிசை நூல்கள்
- தமிழிசை மன்றங்கள்
- தமிழிசை கேட்போமா ?

## தமிழிசை.காம்

www.tamilisai.com

தமிழிசை.காம் 1999 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதன் காரணகர்த்தாவாக இருப்பவர் திரு.சா.அ.சௌரிராசன் ஆவார். 1999 ஆம் ஆண்டு தந்தை பெரியார் தமிழிசை மன்ற நிகழ்ச்சியின் இடையே தமிழிசைக்கான இணையமாக இதைத் தொடங்கி வைத்த சௌரிராசன், தந்தை பெரியார் தமிழிசை மன்றத்தின் பொறுப் பாளருமாவார்.

தமிழிசை.காமில் என்னென்ன செய்திகள் இருக்கிறது என்பதை பார்போம். தமிழிசை.காம் பதினான்கு பகுதியாக பிரிக்கப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு பகுதியிலும் ஆழமும் விரிவும் கொண்ட பல கட்டுரைகள் உள்ளது. இந்த தமிழிசை.காம் இணைய பக்கத்திற்கு பொறுப்பாசிரியர் திரு.ப.திருநாவுக்கரசு காணக்கிடைக்காத, இசை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆசிரியர்கள்/ஆய்வாளர்கள்/பாடகர்கள் போன்றோருடைய புகைப்படம், அவர்களுடைய குரல்களையும் இப்பகுதியில் இணைத்திருப்பது அவரின் முயற்சியைக் காட்டுகிறது. இந்த இணையத்தை தமிழிசைக்கான ஒரு கலைக்களஞ்சியமாகவே நினைக்க முடிகிறது. இனி ஒவ்வெரு பகுதியையும் எடுத்துக் கொண்டு பார்ப்போமா?

**1. தமிழிசை வரலாறு**

தமிழிசை வரலாற்றை - வி.ப.கா.சுந்தரம், கு.கோதண்டபாணி பிள்ளை, வெள்ளைவாரணர், குடந்தை சுந்தரேசனார், சேலம் ஜெயலட்சுமி போன்றோருடைய கட்டுரைகளை படிக்கும்போது தெளிவாக அறியமுடிகிறது. தமிழிசையின் அறிவியல் பூர்வமான வளர்ச்சியை சேலம் ஜெயலட்சுமி விரிவாக தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதிய பல கட்டுரைகள் இப்பகுதியில் போட்டிருக்கின்றனர். அதில் பிறமொழியாளர்கள் தமிழகத்தை ஆண்ட காலத்தில் தமிழிசையை எடுத்துக்கொண்டு தங்களுக்கேற்றவாறு எப்படியெல்லாம் மாற்றி அமைத்துக் கொண்டார்கள் என்ற உண்மை வரலாற்றை பதிவு செய்திருக்கிறார்.

**2. தமிழிசை ஆய்வுகள்**

இன்று தமிழிசையைப்பற்றி ஆய்வு செய்து வரும் வி.ப.கா.சுந்தரம், செ.அ.வீரபாண்டியன், சேலம் ஜெயலட்சுமி முதலியோரின் ஆய்வுகளை இப்பகுதி பதிவு செய்து வருகிறது. இதில் குறிப்பிட்டு சொல்வேண்டிய ஆய்வு ‘இசையும் அறிவியலும்’ என்ற கட்டுரை.

**3. தமிழியை ஆய்வாளர்கள்**

இப்பகுதியில் தமிழின் மிகச்சிறந்த ஆய்வாளர்களான ஆபிரகாம் பண்டிதர், குடந்தை சுந்தரேசனார், விபுலானந்தர், ஆப்ரகாம் வரகுணபாண்டியன், ப.தண்டபாணி, திருமுருகன், சேலம் ஜெயலட்சுமி, பி.டி.ஆர்.கமலதியாகராஜன், பி.எம். சுந்தரம், வைத்தியலிங்கம், சிவபாலன் போன்றோருடைய சாதனைகளை இப்பகுதி விரிவாக ஆய்கிறது.

**4. தமிழிசைக் கருவிகள்**

‘தமிழகத்து இசைக் கருவிகள்’ என்ற பொதுத் தலைப்பில் ஒரு கட்டுரையும் அதற்கு அடுத்து யாழ், குழல், மத்தளம், தவில்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பஞ்சமுகவாத்தியம், நாகசுரம் பற்றிய விரிவான கட்டுரையும் படங்களுடன் இப்பகுதி அழகாக உள்ளது.

**5. தமிழிசைப் புலவர் வரலாறு**

தமிழிசை மும்மூர்த்திகளான முத்துத் தாண்டவர், மாரிமுத்தா பிள்ளை, அருணாசல கவிராயர் பற்றிய விரிவான வரலாறும், படைப்புகளையும் பற்றிய ஆய்வும் உள்ளது. சந்தக்கவி அரசர் அருணகிரிநாதர், திரிகூடராசப்பக் கவிராயர், ஊத்துக்காடு வேங்கடசுப்பையயர், இராமலிங்க சுவாமிகள், தஞ்சைநால்வர், வேதநாயகம் பிள்ளை, கோபால கிருஷ்ணபாரதி, பாரதி, மதுரகவி பாஸ்கரதாஸ் போன்றோரின் வாழ்வும் பணியும் விளக்கமான முறையில் வெளியிட்டுள்ளனர். சேலம் ஜெயலட்சுமியின் "Women poets and musicians of Tamilnadu' என்ற கட்டுரையும் சிறப்பாக உள்ளது.

**6. தமிழிசைஞர்கள்**

இப்பகுதி கருவி இசையாளர்களைப் (instrumentalist) பற்றியது. அவர்களுடைய வாழ்க்கை வரலாறு, சாதனைகளைப் பற்றி விளக்கமான கட்டுரைகள், இசைஞர்களின் ஓரிரு நிமிட இசையைக் கூட கேட்கலாம். இப்பகுதியில் டி.என்.இராஜரத்தினம்பிள்ளை, குடந்தை இராஜமாணிக்கம் பிள்ளை, மதுரை எம்.பி.என்.சேதுராமன், பொன்னுசாமி சகோதரர்கள், தவில் மேதை நீடாமங்கலம் மீனாக்ஷி சுந்தரம், லயமேதை தட்சிணாமூர்த்தி பிள்ளை மலைக்கோட்டை கோவிந்தசாமி பிள்ளை, மிருதங்க வித்வான் பழனி சுப்பிரமணிய பிள்ளை மற்றும் 100 நாகசுர கலைஞர்களின் வாழ்க்கையும் படமும் இப்பகுதியை அணி செய்கின்றன.

**7. தமிழிசை பாடகர்கள்**

எம்.எம். தண்டபாணி தேசிகர், சிதம்பரம் ஜெயராமன், சேலம் ஜெயலட்சுமி, சிதம்பரம் மீனாட்சி சுந்தரம், சிவபாலன், புஷ்பவனம் குப்புசாமி, தேனிசை செல்லப்பா, கே.பி.சுந்தராம்பாள், தியாகராஜ பாகவதர், தேவாரம் சுரேஷ் முதலியோருடைய வாழ்க்கை வரலாறும் ஓரிரு நிமிடங்கள் அவர்களின் தேனிசைகளையும் பருகலாம்.

**8. தமிழிசை நூற்கள்**

இப்பகுதியில் சங்க காலம் முதல் இன்று வரை வெளிவந்துள்ள புகழ்பெற்ற தமிழிசை பற்றிய நூற்களை அறிமுகம் செய்கிறது. ஆய்வாளர்களுக்கு பயன்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**9. தமிழிசை கல்லூரி**

தமிழிசையை காக்க உருவான அண்ணாமலை அரசரின் தமிழ் இசைக் கல்லூரியின் வரலாறு, கல்லூரியில் உள்ள படிப்புகள், சேரும் முறை போன்றவையும், தமிழகத்தில் உள்ள இசைக் கல்லூரிகள், தமிழிசைப் பள்ளிகள் போன்றவற்றை அறிந்து கொள்ள முடிகிறது.

**10. தமிழிசை மன்றங்கள்**

தமிழிசையை பாடி பரவி ஏத்திவிடும் அண்ணாமலையாரின் தமிழிசை மன்றம், பொள்ளாச்சியாரின் இராமலிங்கர் பணிமன்றம், தந்தை பெரியார் தமிழிசை மன்றம் வடலூர் அருட்பா மன்றங்கள், திருப்புகழ் சபைகள், தமிழர் கலை மன்றம் முதலியவற்றின் பணிகளை இப்பகுதி விவரிக்கிறது.

**11. திரையிசையில் தமிழிசை**

தமிழ்த் திரைப்படங்களில் எந்தெந்த தமிழிசை பண்களை பயன்படுத்தி இசைபாடல் உருவாக்கப்பட்டுள்ளன. தரமான தமிழிசை பாடல்கள் எந்தெந்த திரைப்படங்களில் உள்ளது என்பதை அறிந்து கொள்வது மட்டுமல்லாமல் அதன் இசையையும் இப்பக்கத்தில் கேட்க முடியும்.

**12. தமிழிசை சொற்பொழிவுகள்**

இப்பக்கத்தில் நுழைந்தவுடன் தமிழிசையை தன் வாழ்நாள் இறுதிவரை பரப்பிவந்த குடந்தை சுந்தரேசனார், புதுவை திருமுருகன், கோடிலிங்கம், வைத்தியலிங்கம் போன்ற இசை அறிஞர்களின் பொழிவுகளை பதியவைக்க இருக்கின்றனர்.

**13. தமிழிசை கேட்போமா?**

இப்பகுதியில் புகழ்பெற்ற தமிழிசைவாணர்களின் பாடல்களை தொகுத்து வெளியிட்டுள்ளனர். புஷ்பவனம் குப்புசாமி, தேனிசை செல்லப்பா, மீனாட்சி சுந்தரம் போன்றோரின் பல பாடல்களை இப்பகுதியில் கேட்க முடிகிறது. இப்பகுதி பெரும் அளவில் வளர இருக்கிறது.

**14. தமிழிசை கற்போமா**

இப்பக்கத்தில் எளிமையான முறையில், இனிய குரலில் ஆங்கில விளக்கத்துடன் இசையின் பாலபாடங்களை மாணவிகளை வைத்து கற்றுக் கொடுக்க இருக்கின்றனர்.

www.tamilarangam.net

இன்று உலகம் முழுதும் தமிழர்கள் 80 நாடுகளில் 10 கோடிக்கும் மேல் பரந்து வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் எல்லோரையும் இணைக்கும் பாலமாக tamilisai.com இணையப் பகுதி உள்ளது. அதனால் எங்கெங்கோ இருக்கும் தமிழிசை பாடகர்கள், கவிஞர்கள், இசைக் கருவியாளர்கள் புகைப்படத்துடன் தங்கள் வாழ்க்கை வரலாற்றை இப்பகுதியில் இலவசமாகவே பதிந்து கொள்ளலாம். பொன்னான வாய்ப்பு! உலகில் எந்த மூலையில் தமிழிசை நிகழ்ச்சி நடந்தாலும் நீங்களும்கூட அழைக்கப்பட வாய்ப்பு இருக்கிறது. தமிழிசையை அழிக்க முடியாது. நெருப்பை பொத்திவைக்க முடியுமா?

**தமிழ்சினிமா.காம் :** http://www/tamilcinema.com

உலகின் முதல் மின்னிதழ் என்கிற தலைப்புடன் காணப் படுகிறது. இத்தளத்தில் சினிமாவுக்கே முதலிடம் கொடுத்து நடத்திவருகின்றனர். இதில் தினசரி செய்திகள், சினிமா செய்திகள், நிரந்தர தகவல்கள், தமிழ் இணைப்புக்கள், தமிழ்பக்கம், கிசு கிசு, சிறந்த 10 படங்கள், சாட் என்கிற இணையத்தில் கலந்துரையாடல் பகுதி, சினிமா விமர்சனம், கவர்ச்சிக்கன்னி (தினத்தந்தி உபயம்) க்யூஸ், லேட்டஸ்ட் ரிலீஸ், பாடல்கள், 'சினிமாவில் நடிக்க வேண்டுமா? என்ற பகுதியில் புதுமுகங்களை அறிமுகப் படுத்துகிறது. Tamil Book House பகுதியில் தமிழ்நூல்களை வாங்குவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளார். இதன் அதிபர். திரு. ஆண்டோ பீட்டர் அவர்கள்.

**ஆறாம்திணை.காம்: www.aaraamthinai.com**

'உலகத் தமிழர்களுக்கான உறவுப்பாலம்' என்ற முழக்கத்தோடு வெளிவருகிறது. இந்த இணையமும் 1998 ஆம் ஆண்டு இறுதியில் தொடங்கப்பட்டு, 1999 ஆம் ஆண்டு முதலாண்டு மலரினை இணைய உலகில் முதல் முதலாக வெளியிட்டது. தமிழ் இணையங்களிலேயே அழகான வடிவமைப்புக்கு முதலிடத்தைப் பெறுகிறது. இது தவிர நவீன இலக்கியத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து இணைய உலகில் பவனி வருகிறது. ஆறாம்திணையில் முரசு அஞ்சல் பயன்படுத்தப்படுகிறது.

முதல் பக்கத்தின் இடதுபுறம் 20 தலைப்புகளில் காணப்படும். அவை: செய்திகள், கல்வி, கவிதை, சிறுகதை, குழந்தை இலக்கியம், புதுவரவு, விடுகதை, பழமொழி, தமிழ் அறிவோம், நேர்காணல், கைப்பக்குவம், வெண்பா மேடை, சென்னை சுவடுகள்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் சினிமா .com

www.tamilcinema.com World's First Tamil Ezine

Olym
Last U

Home | தினசரி செய்திகள் | சினிமா செய்திகள் | நிரந்தர தகவல்கள் | தமிழ் இணைப்புகள் | தமிழ் பக்கம் | கிசுகிசு |

FREE MAIL

Email Login

Password

New users sign up

BIGwhat Dot Com
A Different Kind Of Search

Global

சிறந்த 10 படங்கள்

**Chat**

சிறுகதைகள்

சினிமாவில் நடிக்க வேண்டுமா? Click

சினிமா விமர்சனம்

கவர்ச்சிக் கன்னி

கிசுகிசு பக்கம்

Tamil Book House

**QUIZ**

தொடர் கதைகள்

லேட்டஸ்ட் ரிலீஸ்

➤ ரஜினிகாந்த் பற்றி இணைய வாசகர்கள் கருத்து

➤ நேரு உள் விளையாட்டு அரங்கில் டிசம்பர் 31 ஆம் தேதி பிரமாண்ட விழா எடுக்க நடிகை ரோஜாவின் ரசிகர்கள் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார்கள். -ஹாட் பிட்ஸ்

➤ எய்ட்ஸ் வந்த பெண்களையெல்லாம் ஒரு மலையடிவாரத்தில் கொண்டுபோய் விட்டுவிடுவதும் அந்த நிலையிலும் அவர்கள் ஆண்களின் மேல் காமவேட்கை கொள்வதுமாக காட்டியிருப்பது சுத்த பேத்தல்! -பெண்கள் பட விமர்சனம்

➤ ரஜினி பிறந்தநாள்- கட்டுரை ஒவ்வொரு பிறந்தநாளின்போதும் வராதீர்கள் என்று கழுத்தைப்பிடித்து தள்ளும் வேலையை செய்யும் ரஜினி போன்றவர்களை ரசிகர்கள் புரிந்துகொள்ளும் நாள் வெகு தொலைவில் இல்லை. ஆனால் ஒன்றும் அறியாத அந்த பாமரக்குழந்தைகளை பக்குவப்படுத்தி அழைத்துச் செல்ல வேண்டிய கடமை பத்திரிகைகளுக்கு வேண்டும். அதைவிடுத்து ஒரு நடிகரை தேவதூதனாக காட்டும் வேலையை பத்திரிகைகள் செய்ய வேண்டாம்.

➤ மகள்கள் அமெரிக்காவிலிருந்து என்னை அழைத்தாலும் எனக்கு அங்கு போக விருப்பம் இல்லை. என் உடம்பில் காவிரி தண்ணியும், கார்ப்பரேஷன் தண்ணியும்தான் ஓட வேண்டும் என்று நினைக்கிறேன்.-அனுராதா ரமணன்

➤ பரதாயணம் என்ற தலைப்பில் பார்த்திபன் எழுதிய கவிதை ஒன்றை குறிப்பிட்ட முதல்வர் இது நான் பலவருடங்களுக்கு முன் எழுதிய கவிதையை பின்பற்றி எழுதப்பட்டது என்றார். தொடர்ந்து, ஒரே கருத்து இரண்டு பேருக்கு தோன்ற

Unable to vie



ஆண்டு தோற
நம்முடைய இணை
பத்திரிகை நடத்
சினிமா தேர்தல்
வருடமும் நடை
இருக்கிறது. கட
வருடங்களில் வி
அஜீத், சிம்ரன்
ஏ.ஆர்.ரஹ்மா
ஆகியோர் வெ
பெற்றது
ஞாபகமிருக்கலா
ஒவ்வொரு வருட
ஆர்வத்தோடு க
கொள்ளும் உங்க
வாக்குகளின் மூ
யார்
வெல்லப்போகிறார்
பார்ப்போமா?

ப. சோழநாடன்

www.tamilarangam.net

Govt. of Tamilnadu

திருவள்ளுவர் ஆண்டு 2031
ஆகஸ்டு 04, 2000
விக்கிரம ஆண்டு
ஆடி 20

# Chat up with your kinda people !

Download Tamil Fonts

தமிழின் முதல் தேடுதல் அமைப்பு
